KDK
SINCE 1909
JAPAN
CUSTOM AIR EXPERIENCE
(011) 250 0823

Follow us:

# தமிழன்

THAMILAN தமிழன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர்: 05, இதழ்: 187 குரோதி வருடம், மாசி மாதம் 27ஆம் திகதி செவ்வாய்க்கிழமை
(11.03.2025) ஹிஜ்ரி 1446, ரமழான் - 10, 0115 886187 - விலை ரூ.40 பக்கங்கள் 12

KDK
SINCE 1909
JAPAN
CUSTOM AIR EXPERIENCE
(011) 250 0823



உழைப்பின் வியர்வை ருசிக்கும்!

பக்கம் 03

கரைந்து செல்லும் முஸ்லிம்களின் அரசியல் பலம்

பக்கம் 04

ILO உடன்படிக்கை 190 ஐ அங்கீகரிக்க நடவடிக்கை

பக்கம் 06



நான் இசை தெய்வமல்ல சாதாரண மனிதனே..!

பக்கம் 10

# அர்ச்சுனாவுக்கு சபையில் எதிர்ப்பு!

## இஸ்லாமிய சட்டங்களை அவமதிக்க வேண்டாமென முஸ்லிம் எம்.பிக்கள் போர்க்கொடி



» 02பக்கம்

## கைதை தடுக்கக்கோரி தேசபந்து ரிட் மனு

### வழக்கு விசாரணை நாளை

மாத்தறை வெலிகம W -15 ஹோட்டலுக்கு கடந்த 2023ஆம் ஆண்டு துப்பாக்கிச் சூடு நடத்திய சம்பவம் தொடர்பில் தன்னை கைதுசெய்யுமாறு மாத்தறை நீதவான் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்டுள்ள உத்தரவு சட்டத்துக்கு புறம்பானது என்று தெரிவித்தும் பொதுமக்கள்... » 02 பக்கம்

## தேசியப் பாடசாலைகளில் தமிழ்ப் பிரிவுகள் புறக்கணிப்பு



பிரத்தியேக வலயமொன்றை அமைக்கக்கோருகிறார் மனோ எம்.பி.

» 02பக்கம்

## முரளிதரனுக்கு காஷ்மீரில் காணி

### வெளியானது தகவல்

காஷ்மீரின் கதுவா மாவட்டத்தில் தொழிற்சாலை அமைக்க இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர் முத்தையா முரளிதரனுக்கு இலவசமாக நிலம் ஒதுக்கப்பட்டதாக வெளியான தகவல் பற்றி சட்டசபையில் கேள்வி எழுப்பப் பட்டது.

இலங்கை அணியின் முன்னாள் கிரிக்கெட் வீரர் முத்தையா முரளிதரன்,



» 02பக்கம்



## அநுர ஆட்சிபீடமேறி ஐந்தரை மாதங்களில் 5,000 பில்லியன் ரூபா கடன்!

### அரசு பாரதூரம் அறியாமல் செயற்படுவதாக கம்மன்பில சுட்டிக்காட்டு

ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஆட்சிக்கு வந்து, ஐந்தரை மாதங்களாகும் நிலையில், இதுவரையில் 5,156 பில்லியன் ரூபாவை கடனாகப் பெற்றுக் கொண்டுள்ளதாகவும் இவ்வாறு கடன் பெறுவது பாரதூரமான தாக்கத்தை ஏற்படுத்தும் எனவும் பிவிதுரு ஹெல உருமயவின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

2024ஆம் ஆண்டு முழுவதும் கிடைத்த அரச வருமானத்தை விட இந்தக் கடன் தொகை... » 02 பக்கம்

## சீனிக்கான மொத்த விலையில் வீழ்ச்சி



கே.சுபானி

உள்நாட்டு சந்தையில் சீனியின் மொத்த விற்பனை விலை வீழ்ச்சியடைந்துள்ளதாக மொத்த விற்பனையாளர்கள் தெரிவித்துள்ளனர். தற்போது இறக்குமதி செய்யப்பட்ட ஒரு கிலோ கிராம் வெள்ளை சீனிக்கான மொத்த விற்பனை... » 02 பக்கம்

## பட்டலந்த வதைமுகாம் குறித்து சி.ஐ.டியில் முறைப்பாடு

பட்டலந்த ஆணைக்குழு அறிக்கையை பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்குமாறு இலஞ்ச ஊழல் மற்றும் வீண்விரயத்துக்கு எதிரான மக்கள் சக்தியினர்.... » 02 பக்கம்



கமெண்ட் கந்தர்...

சும்மா பரபரப்புக்காக அர்ச்சுனா ஏதும் பேசியிருப்பார்... அதைப்போய்...

## தீவிரமடைகிறது மணல் தட்டுப்பாடு: கட்டட நிர்மாணத்துறை பெரும் வீழ்ச்சி

கே.சுபானி

நாட்டில் தற்போது நிலவும் மணல் தட்டுப்பாடு காரணமாக கட்டட நிர்மாணக் கைத்தொழில் பாரிய வீழ்ச்சி கண்டுள்ளதாக கட்டட நிர்மாணத்துறை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இதனால் 20,000 ரூபாவாக இருந்த... » 02 பக்கம்

## தேசபந்து உட்பட்ட மூவர் தொடர்ந்தும் தலைமறைவு

### விசாரிக்க விசேட பொலிஸ் குழுக்கள்



கனேமுல்ல சஞ்சீவ மீது துப்பாக்கிச் சூடு நடத்திய துப்பாக்கிதாரிக்கு ஒத்துழைப்பு வழங்கிய பெண்ணை கைதுசெய்வதற்காக கடந்த 19ஆம் திகதியிலிருந்து கடந்த 21 நாட்களாக பொலிஸார் தேடி வருகின்றனர். » 02 பக்கம்



## உஷ்

பாகிஸ்தானின் போர்க் கப்பலொன்று இலங்கை வரும் வழியில் திருகோணமலை துறைமுகத்தில் எரிபொருள் நிரப்ப இலங்கை அரசிடம் அனுமதி கேட்டபோதும் இலங்கை அதற்கான அனுமதியை வழங்கவில்லையாம்.

இந்தியாவின் அழுத்தம் காரணமாக இலங்கை அந்த அனுமதியை வழங்கவில்லையென சில தரப்புகளில் கூறப்பட்டாலும் அதன் உண்மைத்தன்மை தெரியவில்லை.

எப்படியோ இறுதியாக பாகிஸ்தான் போர்க்கப்பல் கொழும்பு வந்தே எரிபொருள் நிரப்பிச் சென்றதாம்.

## அநுர ஆட்சி...

அதிகமாக இருப்பதாக சுட்டிக்காட்டிய அவர், பெற்றுக்கொண்ட கடனை செலவு செய்த விதத்தை அரசாங்கம் நாட்டு மக்களுக்கு அறிவிக்கவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

கட்சித் தலைமை அலுவலகத்தில் நேற்று (10) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைக் குறிப்பிட்ட அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

''பெற்றுக்கொண்ட கடன்களை மீளச் செலுத்த முடியாமல் போனமையின் காரணமாகவே நாடு பொருளாதார நெருக்கடியில் சிக்கிக்கொண்டது என்பது முழு நாடும் அறிந்த விடயமாகும். அதன் காரணமாக கடன் பெறுவது மிகவும் சிக்கலான விடயமாக மாறியுள்ளது. இந்தப் பின்னணியில் வரவு - செலவுத் திட்ட உரையின்போது தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் எவ்வளவு கடன் தொகையை பெற்றுக்கொண்டுள்ளது என்பதை நாட்டுமக்களுக்கு ஜனாதிபதி அறிவிப்பார் என்று எதிர்பார்த்தோம். ஆனால் ஜனாதிபதி அந்தக் கடமையை முறையாகச் செய்யவில்லை.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் எதைச் செய்யாவிட்டாலும் கடன் பெறும் செயற்பாடுகளை மாத்திரம் சிறப்பாகச் செய்துள்ளது என்ற விடயத்தை மக்களுக்கு வெளிப்படுத்துவது எங்களின் கடமையாகும். 2025ஆம் ஆண்டு மார்ச் மாதம் 05 ஆம் திகதியாகும்போது அதாவது அரசாங்கம் பதவிக்கு வந்து ஐந்தரை மாதங்களாகும் நிலையில் இதுவரையில் 5,156 பில்லியன் ரூபாவை கடனாக பெற்றுக்கொண்டுள்ளது. இதன் பாரதூரத் தன்மையை புரிந்து கொள்ளவேண்டும்.

2024ஆம் ஆண்டு முழுவதும் அரசாங்கத்தால் சேகரித்துக்கொள்ளப்பட்ட வருமானம் 4,000 பில்லியன் ரூபாவாகும். ஆனால், ஐந்தரை மாதத்தில் 5,156 பில்லியன் ரூபாவை கடனாகப் பெற்றுக்கொண்டுள்ளார்கள். இந்தக் கடனில் 3, 775 பில்லியன் ரூபா கடனை திறைசேரி உண்டியலினூடாகவும் மேலும் 1,063 பில்லியன் ரூபாவை திறைசேரி பிணைமுறிகளினூடாகவும் பெற்றுக்கொண்டுள்ளார்கள். அதற்கு மேலதிகமாக உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கிகளினூடாக 1,084 மில்லியன் ரூபாவை கடனாகப் பெற்றுக்கொண்டுள்ளார்கள். அதேபோன்று மக்கள் வங்கி மற்றும் இலங்கை வங்கி போன்ற இரு அரச வங்கிகளில், வங்கிக் கடன் வசதிகளையும் பெற்றுக்கொண்டுள்ளார்கள். இவ்வாறு பெற்றுக்கொண்ட கடன்களை, கடன் மீளச் செலுத்துவதற்கு பயன்படுத்தியிருக்கலாம். ஆனால் அதுதொடர்பில் தெளிவான தகவல்கள் எதுவும் இல்லை. அதன் காரணமாக இந்தப் பாரிய கடன் தொகையை பெற்றுக்கொண்டு அரசாங்கம் என்ன செய்தது என்பதை நாட்டுக்கு வெளிப்படுத்துவது அரசாங்க தலைவர்களின் கடமையாகும்'' என்றார்.

## கைதை ...

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ரவி செனவிரத்ன உள்ளிட்டோரின் தலையீட்டில் முன்னெடுக்கப்பட்டு வரும் விசாரணைகளை அடிப்படையாகக் கொண்டு தன்னை கைதுசெய்யும் நடவடிக்கைகளை தடுப்பதற்கு இடைக்கால தடையுத்தரவு பிறப்பிக்குமாறு கோரியும் முன்னாள் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோனினால் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் ரிட் மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அதற்கமைய, இந்த ரிட் மனுவை நாளை (12) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளுமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று (10) உத்தரவு பிறப்பித்தது. மனுதாரரை கைதுசெய்வதை தடுப்பதற்கான இடைக்கால தடையுத்தரவை தற்போது பிறப்பிக்க முடியாது என்று தெரிவித்த மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் குழாம், பிரதிவாதிகளுக்கு அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து அதுதொடர்பான விடயங்களை கருத்தில் கொள்வது பொருத்தமானதாக இருக்குமென்றும் திறந்த நீதிமன்றத்தில் அறிவித்திருந்தது.

இந்த மனு நேற்று மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் பதில் தலைவர் மொஹமட் லபார் தாஹீர் மற்றும் சரத் திசாநாயக்க ஆகியோரின் பங்குபற்றலுடனான மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் குழாமின் முன்னிலையில் விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போது மனுதாரர் தேசபந்து தென்னக்கோனின் சார்பில் சட்டத்தரணி சனத் விஜேவர்தனவின் ஆலோசனைக்கமைய ஜனாதிபதி சட்டத்தரணி ரொமேஷ் த சில்வா நீதிமன்றத்தின் முன்னிலையில் கருத்து முன்வைத்து, 2023ஆம் ஆண்டு வெலிகம பிரதேசத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் தொடர்பில் தனது கட்சிக்காரரை கைதுசெய்யுமாறு மாத்தறை நீதவான் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்டுள்ள உத்தரவு சட்டத்துக்கு புறம்பானது என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தின் பின்னர் பொலிஸ் அதிகாரியொருவர் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் பல்வேறு சாட்சிகளின் வாக்குமூலங்களை பதிவு செய்ததைத் தொடர்ந்து நீதவானினால் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி சட்டத்தரணி சுட்டிக்காட்டியுள்ளதுடன், குற்றவியல் வழக்கு ஒழுங்குவிதிகள் கோவையின் ஏற்பாடுகளுக்கமைய இவ்வாறு உத்தரவு பிறப்பிப்பதற்கு நீதவானுக்கு அதிகாரம் இல்லை என்பதுடன் இது அதிகாரத்துக்கு அப்பாற்பட்ட உத்தரவு என்றும் தெரிவித்துள்ளார்.

அதற்கமைய, நீதவானினால் தனது கட்சிக்காரரை கைதுசெய்யுமாறு பிறப்பிக்கப்பட்டுள்ள உத்தரவை இடைநிறுத்துவதற்கான இடைக்கால தடையுத்தரவை பிறப்பிக்குமாறும் ஜனாதிபதி சட்டத்தரணி நீதிமன்றத்திடம் கோரியுள்ளார். இதன்போது சட்ட மா அதிபரின் சார்பில் ஆஜராகியிருந்த அரசத் தரப்பு சட்டத்தரணி, இந்த மனு தொடர்பில் தனக்கு எவ்வித ஆலோசனையும் கிடைக்கவில்லை என்று குறிப்பிட்டுள்ளார்.

**ஜனாதிபதி சட்டத்தரணி ரொமேஷ் த சில்வா:-** எனது கட்சிக்காரரை கைதுசெய்வதற்கான அவசர நிலைமை உருவாகியுள்ளது. அதன்காரணமாக அதனை தடுப்பதற்காக இடைக்கால தடையுத்தரவு பிறப்பிக்குமாறு கோருகிறேன்.

**மேன்முறையீட்டு நீதிமன்ற பதில் தலைவர் நீதிபதி:-** இன்று காலை தான் இந்த வழக்கு விசாரணையுடன் தொடர்புடைய வழக்கு உள்ளடக்கம் எனக்கு கிடைத்தது. இந்த மனுவில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் என்னவென்பது கூட இன்னும் எனக்கு தெரியாது. அதன் காரணமாக பிரதிவாதிகளுக்கு அறிவிப்பு வழங்கியதன் பின்னர் வழக்கின் விடயங்களை உறுதிப்படுத்திக்கொள்வது பொருத்தமாக இருக்குமென நான் கருதுகிறேன்.

**ஜனாதிபதி சட்டத்தரணி ரொமேஷ் த சில்வா:-** மனுதாரர் ஒருவாரம் சிக்கல் எதுவும் இல்லாமல் இருந்தார். எதிர்வரும் நாட்களிலும் அவ்வாறே இருப்பார்.

இந்த மனுவின் பிரதிவாதிகளாக மாத்தறை நீதவான் நீதிமன்ற நீதவான் அருண புத்தாச, பதில் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால, அந்த அமைச்சின் செயலாளர் ரவி செனவிரத்ன, குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் ஷானி அபேசேகர, அதன் தற்போதைய பணிப்பாளர் பீ.அம்பாவில உள்ளிட்டோர் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

மனுதாரர் தேசபந்து தென்னக்கோன், வெலிகம பொலிஸில் முன்னெடுக்கப்பட்ட இந்த விசாரணை நடவடிக்கையை குற்றப்புலனாய்வுத் திணைக்களத்துக்கு மாற்றப்பட்டுள்ளதாகவும் இதற்கு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ரவி செனவிரத்ன மற்றும் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் ஷானி அபேசேகர ஆகியோரின் தலையீட்டில் இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் குறிப்பிட்டுள்ளார். அதன் காரணமாக இந்தப் பரிசோதனைகள் அரசியல் தலையீட்டுடன் பக்கச்சார்பாகவும் தன்னை இலக்கு வைத்து முன்னெடுக்கப்படுவதாகவும் அவர் மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் தன்னிடம் கருத்து கேட்பதற்கு முன்னரே கைதுசெய்யுமாறு உத்தரவு பிறப்பிப்பது சட்டத்துக்கு புறம்பானது என்றும் அதனை தொடர்ந்து தனக்கு வெளிநாட்டுப் பயணத்தடை விதித்து கடந்த 01ஆம் திகதி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக ஊடகங்களினூடாக அறிந்துகொண்டதாகவும் தேசபந்து தென்னக்கோன் அவரின் மனுவில் குறிப்பிட்டுள்ளார். அதற்கமைய, தன்னை கைதுசெய்யுமாறு மாத்தறை நீதவான் நீதிமன்றத்தினால் விடுக்கப்பட்டுள்ள உத்தரவை அதிகாரபூர்வமற்றதாக்கி ரிட் ஆணையொன்றை பிறப்பிக்குமாறும் இந்த மனுவை விசாரணை செய்து இறுதி தீர்ப்பை அறிவிக்கும்வரை அந்த உத்தரவு நடைமுறைப்படுத்துவதை தடுத்து இடைக்கால தடையுத்தரவு பிறப்பிக்குமாறு மனுதாரர் தேசபந்து தென்னக்கோன் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் கோரியுள்ளார்.

இதற்கு மேலதிகமாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ரவி செனவிரத்ன, பதில் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய, குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் ஷானி அபேசேகர உள்ளிட்டோரின் தலையீட்டில் இந்த விசாரணைகள் குற்றப்புலனாய்வு திணைக்களத்தினூடாக முன்னெடுப்பது தொடர்பிலான தீர்மானத்தை அதிகாரபூர்வமற்றதாக்கி ரிட் ஆணையொன்றை பிறப்பிக்குமாறு தேசபந்து தென்னக்கோன் மேலும் மேன்முறையீட்டு நீதிமன்றத்திடம் கோரியுள்ளார்.

## அர்ச்சுனாவுக்கு ...

*(சபை செய்தியாளர்)*

முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டதிருத்தம் தொடர்பில் யாழ். மாவட்ட எம்.பி. அர்ச்சுனா தெரிவித்த கருத்துகள் தொடர்பில் முஸ்லிம் எம்.பிக்கள் நேற்று பாராளுமன்றத்தில் கடும் எதிர்ப்பினை வெளியிட்டனர்.

பாராளுமன்றத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சு மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றிய பைசர் முஸ்தபா, அமைச்சர் சரோஜா சாவித்திரி போல் ராஜ் ஆகியோர் முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டதிருத்தம் தொடர்பில் சில கருத்துகளை முன்வைத்த நிலையில் யாழ். மாவட்ட எம்.பியான அர்ச்சுனாவும் சில கருத்துகளை முன்வைத்திருந்தார்.

இவ்வாறான நிலையில் பாராளுமன்றத்தில் நேற்று திங்கட்கிழமை(10) இடம்பெற்ற 2025ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தின் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே எதிர்க்கட்சி முஸ்லிம் எம்.பிக்கள் சிலர் அர்ச்சுனா எம்.பி. தெரிவித்த கருத்துகள் தொடர்பில் கடும் எதிர்ப்பை வெளியிட்டதுடன் மிகக்கடுமையாக விமர்சனமும் செய்தனர்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எம்.பியான மொஹமட் சாலி நளீம் பேசுகையில்,

''அர்ச்சுனா எம்.பி. எமது மார்க்கம் சம்பந்தமாகவும் விவாக, விவாகரத்துச் சட்டம் மாற்றப்பட வேண்டும் என்ற வகையிலும் கருத்துகளை முன்வைத்திருந்தார். 1,400 ஆண்டுகளுக்கு முதல் இஸ்லாம் மார்க்கம் என்ற ஒன்று தோன்றியது. இது முஸ்லிம் மக்களுக்கு மாத்திரமல்ல உலகில் படைக்கப்பட்ட அனைத்து மானிடருக்கும் உலகம் அழியும் வரைக்குமான ஒரு பூர்த்தியான மார்க்கம்தான் என்பதனை அவருக்கு நான் கூறிக்கொள்கின்றேன்.

எமது மார்க்கத்தில் பெண்கள் எப்படி நடத்தப்பட வேண்டும், பெண்களுக்கான சட்டம் என்றால் என்ன, விவாகச் சட்டம் என்றால் என்ன, விவாகரத்துச் சட்டம் என்றால் என்ன? என்று அனைத்து சட்டங்களையும் தெளிவான முறையில் வகுத்த மார்க்கம்தான் இஸ்லாம் மார்க்கம். தேவையில்லாமல் அர்ச்சுனா எம்.பி. எமது விடயத்தில் மூக்கை நுழைப்பதைவிடுத்து அவர்களுடைய தேச வழமைச்சட்டத்தை மாற்றுகின்ற விடயத்தில் அவர் கவனம் செலுத்த வேண்டும். அதனை விடுத்து எமது மார்க்கம், எமது பெண்கள் சம்பந்தமாக பேசத்தேவையில்லை. அது பற்றி எமக்குத் தெரியும். எனவே இவர் தேவையில்லாத ஆணிகளை பிடுங்குவதை விடுத்து தேவையான ஆணிகளை அவரின் மார்க்கம் சம்பந்தமாக பிடுங்குமாறு கூறுகின்றேன். அவர் சமூக வலைத்தளங்களில் தான் பெயர், புகழ் பெற வேண்டும் என்பதற்காக எமது மார்க்கத்தை கொச்சைப்படுத்தி பேசுகின்ற நிலையை நாம் காண்கின்றோம். இவர் தனது பைத்தியத்தை போக்க நல்ல வைத்தியத்தை பெற வேண்டும். அவரை சபாநாயகர் புத்தி சொல்லி வழிநடத்த வேண்டும்'' என்றார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஹிஸ்புல்லா எம்.பி. பேசுகையில்,

''பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் முஸ்லிம்களின் விவாக, விவாகரத்துச் சட்டம் தொடர்பில் கருத்துத் தெரிவித்தார். இது காலத்துக்கு காலம் இந்த சமூகத்துக்கு எதிராக பேசப்படும் ஒரு விடயம். இது தொடர்பான பேச்சுவார்த்தைகள் ஏற்கனவே அமைச்சினால் மேற்கொள்ளப்படுகின்றன. இதில் திருத்தங்களை மேற்கொள்ள வேண்டுமாயின் முஸ்லிம் கலாசாரத் திணைக்களம், ஜம்இய்யத்துல் உலமா, கல்வி அமைச்சு, நீதி அமைச்சு ஆகியன இணைந்து செய்ய வேண்டிய விடயம். இந்நிலையில் இவைகளை பேசி ஒரு சமூகத்துக்கு எதிராக அந்த சமூகத்தின் உணர்வுகளை தூண்டுகின்ற நடவடிக்கைகளுக்கு இடமளிக்கக் கூடாது. அதிலே குறைகள் இருந்தால் திருத்தப்பட வேண்டியிருந்தால் அதனை நாங்கள் ஏற்றுக்கொள்கின்றோம். அதில் மாற்றுக் கருத்துகள் கிடையாது. ஆனால் இந்த சபையில் முஸ்லிம்களின் மனதைப் புண்படுத்தும் வகையில் பேசிவிட்டு அது தொடர்பில் முஸ்லிம்கள் சார்பில் விளக்கங்களை கேட்கும்போது மிகக் கேவலமாக, மோசமாக ஒரு பைத்தியக்காரனைப்போல அறிக்கைகளை வெளியிடுவது தமிழ், முஸ்லிம் மக்களிடையே பெரிய பிளவை ஏற்படுத்தும். உண்மையில் அவருக்கு மூளைக்கோளாறு இருக்கின்றதா என்றுகூட எமக்கு சந்தேகம் ஏற்படுகின்றது. இந்த விடயத்தில் அவதானம் செலுத்த வேண்டும். பாராளுமன்றத்தில் தனக்குள்ள உரிமையை பயன்படுத்தி முஸ்லிம் சமூகத்துக்கு எதிராகவும் ஒரு மார்க்கத்துக்கு எதிராகவும் இவ்வாறு கீழ்த்தரமாக பேசுபவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அவருக்கு பேச்சு கொடுக்காமல் தடுக்க வேண்டும். உடனடியாக அவரை வைத்தியசாலைக்கு அனுப்பி அவரின் மூளையை பரிசோதனை செய்யுங்கள்'' என்றார்.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் எம்.பி. எம்.ஏ.எம்.தாஹிர் பேசுகையில்,

''எனது சகோதரர் அர்ச்சுனா எம்.பி. இருக்கின்றார். அவர் எனது நெருங்கிய நண்பர். அவர் அண்மையில் எமது மார்க்கத்துக்குள் மூக்கை நுழைத்து விட்டார். அவர் தெரிந்து செய்தாரா அல்லது விளம்பரத்துக்குச் செய்தாரா எதுக்கு செய்தார் என்று தெரியாது. அவரை நாங்கள் தண்டிக்க முடியாது. அவருக்கு எமது மார்க்கத்தைப்பற்றி அன்பான முறையில் சொல்ல வேண்டிய தேவையிருக்கின்றது. நாம் புனித இஸ்லாம் மார்க்கத்தை ஏற்றுள்ளோம். இது பூரணப்படுத்தப்பட்டு விட்டது. இதில் யாரும் மூக்கை நுழைத்து மாற்றம் செய்ய முடியாது. அர்ச்சுனா படித்தவர், பண்புள்ளவர். அவர் ஒரு தேசியப்பட்டியல் எம்.பி. அல்ல. மக்களினால் தெரிவு செய்யப்பட்டவர். எனவே அவர் அனைத்து மக்களுடனும் இணைந்து செயற்பட வேண்டும். அவர் தனது கருத்துகளை வாபஸ் பெறவேண்டும். தனது நிலைப்பாட்டிலிருந்து மாற வேண்டும்'' என்றார்.

இவ்வாறான கருத்துகள் தொடர்பில் அர்ச்சுனா எம்.பி. பதில் கூறுகையில், ''பொதுவாக மக்களிடமிருந்து வந்த கோரிக்கைகளை மட்டுமே நான் இங்கு பெண்கள் சார்பாக கூறினேன். இங்கு முஸ்லிம் எம்.பிக்கள் கூறிய கருத்துகளை ஏற்றுக்கொள்கின்றேன். முஸ்லிம் மதம் என்பது நாங்கள் நினைப்பதுபோன்று சிறிய மதம் அல்ல. ஆயிரமாயிரம் ஆண்டுகளாக வளர்ந்துவரும் மதம். அந்த மதத்தில் எந்த மாற்றங்களையும் ஏற்படுத்துவதற்கு நாங்கள் யாரும் முயற்சிக்கவில்லை. எமது இரத்தம் அவர்கள்.

நான் சொன்ன விடயம் சிறுபிள்ளைகளையும் பெண்களையும் மட்டுமே கருதியது. மதத்தை நிந்திப்பதற்காக நான் கூறவில்லை'' என்றார்.

## தேசபந்து...

குறித்த பெண்ணை தேடிக் கண்டுபிடித்து தரும் நபர்களுக்கு 10 இலட்சம் ரூபாவை பெற்றுக்கொடுப்பதாக பொலிஸார் ஆரம்பத்தில் குறிப்பிட்டிருந்ததுடன் தற்போது அந்தத் தொகை 12 இலட்சம் ரூபா வரையில் அதிகரிக்கப்பட்டுள்ளது.

நீர்கொழும்பு வீதி, ஜயமாவத்தை, கட்டுவெல்லேகம என்ற முகவரியைச் சேர்ந்த 25 வயதான பிங்புர தேவகே இஷாரா செவ்வந்தி என்பவரே இவ்வாறு பொலிஸாரால் தேடப்பட்டு வருவதுடன், அவர் 995892480V என்ற இலக்கம் கொண்ட தேசிய அடையாள அட்டைக்கு உரிமையுடையவர் என்றும் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. இவர் தொடர்பில் தகவல் தெரிந்தால் 071-8591727 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவு பணிப்பாளருக்கோ அல்லது 071-8591735 என்ற கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரிக்கோ தகவல் வழங்க முடியும்.

கனேமுல்ல சஞ்சீவ மீது துப்பாக்கிச் சூடு நடத்திய சந்தேகநபருக்கு நீதிமன்ற கட்டடத்தொகுதிக்கு ரிவோல்வரை எடுத்துவந்து கொடுத்ததாக இவர்மீது குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது. சந்தேகநபரை தேடிக் கண்டுபிடிப்பதற்காக பல்வேறு பொலிஸ் குழுக்கள் தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதுடன், சந்தேகநபரின் புகைப்படமும் ஊடகங்களில் வெளியிடப்பட்டுள்ளது.

இதேவேளை, மாத்தறை நீதிமன்றத்தினால் பெற்றுக்கொடுக்கப்பட்ட உத்தரவுக்கமைய கடந்த மாதம் 28ஆம் திகதியிலிருந்து கட்டாய விடுமுறை வழங்கப்பட்டுள்ள பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோனை கைதுசெய்வதற்கு 12 நாட்களாக பொலிஸாரினால் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

முன்னாள் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோனை கைது செய்வதற்காக 06 பொலிஸ் குழுக்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகாரங்கள் அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார். இது தொடர்பில் தொடர்ச்சியாக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். 2023ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31ஆம் திகதி மாத்தறை, பெலேன பகுதியிலுள்ள ஹோட்டலொன்றுக்கு முன்பாக இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் தொடர்பில் முன்னெடுக்கப்படும் விசாரணைகளுக்கு அமைய முன்னாள் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோனை கைது செய்யுமாறு மாத்தறை நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தேசபந்து தென்னக்கோனுக்கு வெளிநாட்டுப் பயணத்தடையும் விதிக்கப்பட்டுள்ளது. மேலும் களனி, கிரிபத்கொட பிரதேசத்தில் காணியொன்றுக்கு போலி ஆவணத்தை தயாரித்த சம்பவம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளுக்கமைய முன்னாள் அமைச்சர் பிரசன்ன ரணவீரவை கைதுசெய்ய கடந்த 07ஆம் திகதியிலிருந்து ஐந்து நாட்களாக தேடுதல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## பட்டலந்த...

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுக்கு நேற்று (10) மகஜரொன்றினூடாக அறிவித்துள்ளனர்.

மேலும், இதுதொடர்பில் ஒழுங்குமுறைகள் வெளிப்படுத்தும் வகையிலான விசாரணைகளை முன்னெடுக்குமாறு குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடு செய்துள்ளதாக இலஞ்ச ஊழல் மற்றும் வீண்விரயத்துக்கு எதிரான மக்கள் சக்தியின் தலைவர் ஜாமுனி கமந்த துஷார தெரிவித்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணை செய்யுமாறு கொழும்பு குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் நேற்று (10) முறைப்பாடு செய்ததன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே இதனைக் குறிப்பிட்டுள்ளார். அதற்கமைய, 1988ஆம் மற்றும் 1989ஆம் ஆண்டு காலப்பகுதியில் 60ஆயிரம் வரையிலான மக்களின் உயிரை பறித்தது யார் என்பதை அறிந்துகொள்ள முழு உலகமும் எதிர்பார்ப்புடன் இருக்கும் சந்தர்ப்பத்தில் இதுதொடர்பான தகவல்களை நாட்டு மக்களும் அறிந்துகொள்ள வேண்டும். அதனால், பொறுப்புக்கூறும் அரசாங்கம் என்ற அடிப்படையில் அந்தச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்களுக்கு சரியான தண்டனையை பெற்றுக்கொடுக்க தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

''1995ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 21ஆம் இலக்க அதிகார பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கான 1950ஆம் ஆண்டு 08ஆம் இலக்க, 1953ஆம் ஆண்டு 40ஆம் இலக்க, 1955ஆம் ஆண்டு 08ஆம் இலக்க, 1955ஆம் ஆண்டு 29ஆம் இலக்கம் கொண்ட சங்கங்களினூடாக திருத்தப்பட்ட 1948ஆம் ஆண்டு 17ஆம் இலக்க விசாரணை ஆணைக்குழு சட்டத்தின் 2ஆம் இலக்க உறுப்புரையின் பிரகாரம் அப்போதைய ஜனாதிபதியினால் இந்தச் சம்பவங்கள் தொடர்பில் விசாரணை செய்வதற்கான ஆணைக்குழு நியமிக்கப்பட்டது.

1995ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 19ஆம் திகதி 902/8ஆம் இலக்க அரச அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் இதற்கு அங்கீகாரமும் வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய, பல்வேறு விடயங்கள் தொடர்பில் விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு இந்த ஆணைக்குழுவுக்கு பரிந்துரை வழங்கப்பட்டிருந்தது. உயிரிழந்த நபர்களுக்கு நீதியை நிலைநாட்டுவதற்காக இந்த ஆணைக்குழு அறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க அல்லது 88/89ஆம் ஆண்டு காலப்பகுதியில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பில் ஜனாதிபதி ஆணைக்குழு அமைத்தல் அல்லது சம்பந்தப்பட்ட அரசியல்வாதிகளுக்கும் அதிகாரிகளுக்கும் எதிராக சட்டத்தை அமுல்படுத்துமாறு கோருவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## தேசியப் பாடசாலைகளில்...

கொழும்பில் மூன்று பிரதான தேசியப் பாடசாலைகளில் தமிழ்ப் பிரிவுக்கான வகுப்புகள் குறைக்கப்பட்டு வருவதாக சுட்டிக்காட்டிய தமிழ் முற்போக்குக் கூட்டணி தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன், இதற்கு இடமளிக்காது இந்தப் பாடசாலைகளில் தமிழ் வகுப்புகளை அதிகரித்து தமிழ்ப் பாடசாலைகளையும் தேசியப் பாடசாலைகளில் தமிழ்ப் பிரிவுகளையும் ஒன்றாக சேர்த்து பிரத்தியேகமாக வலயமொன்றை அமைக்க கல்வி அமைச்சு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர் கோரிக்கை முன்வைத்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று (10) இடம்பெற்ற வரவு - செலவுத் திட்டத்தின் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு ஆகியவற்றுக்கான நிதி ஒதுக்கீடு மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார். இதுதொடர்பில் அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

''கொழும்பில் மூன்று பிரதான தேசியப் பாடசாலைகளான இசிபத்தான கல்லூரி, ரோயல் கல்லூரி மற்றும் சேனாநாயக்க கல்லூரி ஆகியவற்றில் தமிழ்ப் பிரிவுக்கான வகுப்புகள் குறைக்கப்பட்டு வருகின்றன.

அதாவது, ரோயல் கல்லூரி ஆரம்பப்பிரிவில் 08 சிங்கள மொழிமூல வகுப்புகள் உள்ள நிலையில் தமிழ் மொழிமூலம் 02 வகுப்புகளே உள்ளன. 06 முதல் 11ஆம் தரம் வரையில் 07 சிங்கள மொழிமூல வகுப்புகள் உள்ள நிலையில் தமிழ் மொழிமூலம் 02 வகுப்புகளே உள்ளன.

சேனாநாயக்க கல்லூரி ஆரம்பப்பிரிவில் 06 சிங்கள மொழிமூல வகுப்புகள் உள்ள நிலையில் தமிழ் மொழிமூலம் ஒரு வகுப்பே உள்ளது. 06 முதல் 11ஆம் தரம் வரையில் 07 சிங்கள மொழிமூல வகுப்புகள் உள்ள நிலையில் தமிழ் மொழிமூலம் 02 வகுப்புகளே உள்ளன.

இசிபத்தான கல்லூரியில் ஆரம்பப்பிரிவில் 06 சிங்கள மொழிமூல வகுப்புகள் உள்ள நிலையில் தமிழ் மொழிமூலம் ஒரு வகுப்பே உள்ளது. 06 முதல் 11ஆம் தரம் வரையில் 06 சிங்கள மொழிமூல வகுப்புகள் உள்ள நிலையில் தமிழ் மொழிமூலம் ஒரு வகுப்பே உள்ளது.

பல இனங்கள் இணைந்து வாழக்கூடிய கொழும்பு போன்ற மாவட்டங்களிலேயே தேசிய ஒற்றுமையை கட்டியெழுப்ப முடியும். நாங்கள் இத்தகைய மாவட்டங்களில் தமிழ்ப் பாடசாலை, சிங்களப் பாடசாலை, முஸ்லிம் பாடசாலை, இந்து பாடசாலை, பௌத்த பாடசாலை, கத்தோலிக்க பாடசாலைகள் என்று ஆரம்பித்துவிட்டு சிறுவயதிலேயே பிள்ளைகளை இன ரீதியாக பிரித்துவைத்துவிட்டு 18 வயதான பின்னர் இளைஞர்களாக எழுந்திடுங்கள் என்று கூறுகின்றோம். இது பிழையானது.

பிரதான தேசியப் பாடசாலைகளில் வளங்கள் அதிகமாக இருக்கின்றன. அங்கே தமிழ் வகுப்புகளை அதிகரியுங்கள். ஆனால் பல அதிகாரிகள் மற்றும் அதிபர்கள் ஒன்றிணைந்து இசிபத்தான மற்றும் டீ.எஸ்.சேனாநாயக்க ஆகியவற்றில் தமிழ் வகுப்புகளை திட்டமிட்டு குறைக்கின்றனர். அதுமட்டுமன்றி ஒரு வகுப்புக்கு 40 பேருக்கான கோரிக்கைகள் வந்தாலும் தமிழ் வகுப்புகளில் இவர்களை சேர்ப்பதில்லை. இது நீண்ட காலமாக நடக்கும் நிகழ்வே.

நாங்கள் ஆட்சியில் இருக்கும்போதும் இவ்வாறு நடந்துள்ளது. நாங்கள் அப்போது சண்டையிட்டு பலவற்றை செய்துள்ளோம். ஒரே கூரையின் கீழ் அனைத்து இனப் பிள்ளைகளும் படிக்கும் வசதிகளை ஏற்படுத்துங்கள். இங்கிருந்து ஆரம்பியுங்கள். அதேபோன்று யாழ்ப்பாணத்தில் சிங்கள மகா வித்தியாலயம் உள்ளது. அது தேவையில்லை என்பதே எனது தனிப்பட்ட நிலைப்பாடாகும். அங்கு யாழ். இந்துக் கல்லூரி மற்றும் மத்தியக் கல்லூரி உள்ளன. அவற்றில் சிங்களப்பிரிவை ஆரம்பித்து இந்த மகா வித்தியாலயத்தைச் சேர்த்துவிடுங்கள். இதன்மூலம் ஒரே கூரையில் தமிழ், சிங்கள பிள்ளைகள் படிப்பார்கள். அத்துடன் தேசியப் பாடசாலைகளில் தமிழருக்கென தனியான ஆளனி இல்லை. பொது அடிப்படையில் ஆளனி எடுத்து சிங்களப் பிரிவுக்கு மாத்திரம் செய்துகொள்கின்றனர். தமிழ்ப் பிரிவுக்கு ஆசிரியர்கள் இல்லை. இதனால் தமிழ்ப் பாடசாலைகளையும் தேசியப் பாடசாலைகளில் தமிழ் பிரிவுகளையும் ஒன்றாக சேர்த்து பிரத்தியேகமாக வலயமொன்றை அமையுங்கள். அதன்மூலம் ஆளனியை அபிவிருத்தி செய்யலாம்'' என்றார்.

## முரளிதரனுக்கு...

இவர் செவ்லான் குளிர்பான நிறுவனத்தை நடத்தி வருகிறார். இந்த நிறுவனம் காஷ்மீரின் கதுவா மாவட்டத்தில் ரூ. 1,500 கோடியில் அலுமினியம் போத்தல் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க 25.75 ஏக்கர் நிலம் இலவசமாக ஒதுக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியானது.

இதற்கான ஒப்பந்தம் கடந்த ஆண்டு ஜூன் மாதம் போடப்பட்டுள்ளது. தற்போது, இந்த விவகாரம் வெளியாகி சட்டசபையில் விவாதத்தை கிளப்பியுள்ளது. ஜம்மு காஷ்மீர் மாநில சட்டசபையில் காங்கிரஸ், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிகள் கேள்வியாக எழுப்பியுள்ளன. இந்த கேள்விக்கு முதலமைச்சர் உமர் அப்துல்லா பதிலளிக்க வேண்டும் என்று அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

இதுபற்றி விவசாயத்துறை அமைச்சர் ஜாவித் அகமது தார் கூறுகையில், இந்த விவகாரம் என்பது வருவாய் துறை சம்பந்தப்பட்டது. இதுபற்றி எங்களிடம் எந்த தகவலும் இல்லை. இந்த விவகாரத்தின் உண்மைத்தன்மை பற்றி விசாரிக்கிறோம் என்றார். தற்போது இந்த விவகாரம் காஷ்மீர் முதலமைச்சர் உமர் அப்துல்லாவுக்கு பெரும் தலைவலியை ஏற்படுத்தியுள்ளது. முன்னதாக முத்தையா முரளிதரன் இந்தியாவில் தனது தொழிலை விரிவுபடுத்தும் வகையில் கடந்த ஆண்டு கர்நாடகாவில் ரூ. 1,400 கோடி முதலீடு செய்வதாக அறிவித்தார். இதையடுத்து கர்நாடக அரசு சாம்ராஜ்நகர் மாவட்டத்தில் 46 ஏக்கர் பரப்பளவில் தொழிற்சாலை அமைப்பதற்கான நிலத்தை ஒதுக்கீடு செய்தது குறிப்பிடத்தக்கது.

## தீவிரமடைகிறது...

ஒரு க்யூப் மணலின் விலை 30,000 ரூபாவரை அதிகரித்துள்ளதாக கட்டட மூலப்பொருட்கள் விநியோகஸ்தர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

நாட்டில் கடந்த சில நாட்களாக பெய்த கடும் மழை காரணமாக ஆறுகள் பெருக்கெடுத்துச் சென்றதால் மணல் அகழ முடியாமல் போனமையின் காரணமாகவே இவ்வாறு மணல் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

மணல் தட்டுப்பாடு காரணமாக சிறிய மற்றும் பாரிய அளவிலான நிர்மாணப்பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதாகவும் இதனால் சில கட்டட நிர்மாண மூலப்பொருட்கள் விநியோகஸ்தர்கள் அவர்களின் வியாபார நிலையங்களை கூட மூடும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த காலப்பகுதியில் சுத்திகரிக்கப்பட்ட கடல் மணலுக்கு சிறந்த கேள்வி இருந்தபோதும், தற்போது கடல் மணலின் விலையும் அதிகரித்துள்ளதால் கட்டட நிர்மாண மூலப்பொருள் விநியோகஸ்தர்கள் பாரிய நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளனர். அதேபோன்று, அதற்கு நிகராக குறைந்த விலைக்கு விற்பனைசெய்யப்பட்ட சுத்திகரிக்கப்படாத (அகழ்ந்தெடுக்கப்பட்ட) மணலின் விலையும் சடுதியாக அதிகரித்துள்ளது.

இதுதொடர்பில் அரசு விரைவாக கவனம் செலுத்தி உரிய நடவடிக்கைகளை உடன் எடுக்கவேண்டுமென கட்டட நிர்மாண மூலப்பொருள் விநியோகஸ்தரொருவர் தெரிவித்துள்ளார். அத்தோடு நாடுபூராகவும் தடையில்லா மணல் விநியோகத்தை முன்னெடுப்பதற்கு, சம்பந்தப்பட்ட அரச தரப்பினருடன் பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பது அவசியமென்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## சீனிக்கான...

விலை 215 ரூபாவாகவும் ஒரு கிலோகிராம் உள்நாட்டு சிவப்பு சீனிக்கான மொத்த விலை 260 ரூபா வரையிலும் குறைந்துள்ளதாக மொத்த விற்பனையாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

மூன்று மாதங்களுக்கு முன்னர் இறக்குமதி செய்யப்பட்ட ஒரு கிலோகிராம் வெள்ளை சீனியின் விலை 260 ரூபாவாகவும் ஒரு கிலோகிராம் உள்நாட்டு சிவப்பு சீனியின் விலை 290 ரூபாவாகவும் காணப்பட்டதாக மொத்த விற்பனையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

விசேடமாக 10 இலட்சம் மெட்ரிக் தொன் வெள்ளை சீனி ஏற்றுமதி செய்ய இந்திய அரசு அனுமதி வழங்கியதன் காரணமாக, நாட்டுக்கு வெள்ளை சீனி குறைந்த விலையில் இறக்குமதி செய்யப்படுகின்றமையே வெள்ளை சீனிக்கான மொத்த விலை குறைந்தமைக்கு காரணம் என இறக்குமதியாளர்கள் மற்றும் மொத்த விற்பனையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

தற்போது சந்தையில் ஒரு கிலோகிராம் வெள்ளை சீனி 225 ரூபா என்ற அடிப்படையில் சில்லறை விலைக்கு விற்பனை செய்யப்படுவதுடன், சிவப்பு சீனி ஒரு கிலோகிராம் 280 ரூபா முதல் 285 ரூபாவுக்கும் இடையில் சில்லறை விலைக்கும் விற்பனை செய்யப்படுவதாக வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர்.

அந்நிய செலாவணியை செலவு செய்து இவ்வாறு வெள்ளை சீனியை இறக்குமதி செய்வதற்கு தொடர்ந்து வாய்ப்பளித்தல் மற்றும் உள்நாட்டு சிவப்பு சீனியின் நுகர்வு வீழ்ச்சியடைந்துள்ளமை தொடர்பில் அதிகாரிகள் அதிக கவனம் செலுத்த வேண்டுமென்றும் மொத்த விற்பனையாளர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

## பெயர் மாற்றம்

**டெல்மார் தோட்டம் இராகலையை வசிப்பிடமாகக் கொண்ட 860282704 V என்ற தேசிய அடையாள அட்டை இலக்கத்தையுடைய மாணிக்கம் சந்திரகுமாராகிய நான் எனது மகளின் பிரேமாநந்த் பதிக்ஷா ப்ரணாயுதா என்ற பெயரை சந்திரகுமார் பதிக்ஷா ப்ரணாயுதா என மாற்றுவதுடன் இனி சகல ஆவணங்களிலும் சந்திரகுமார் பதிக்ஷா ப்ரணாயுதா என பயன்படுத்தப்படுத்துவேம் எனவும் இனிமேல் சகல ஆவணங்களிலும் புதிய பெயரையே பயன்படுத்துவேன் எனவும் இத்தால் மூலம் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் மக்களுக்கும் அறியத்தருகின்றோம்.**

**தகப்பன் - மாணிக்கம் சந்திரகுமார்.**

# சிம்பொனி அரங்கில் நடந்தது என்ன?



“கண்டேன் ராஜாவை. கேட்டேன் சிம்பொனியை. பரவச அனுபவத்தை உங்களுடன் பகிர்ந்துகொள்வதில் மகிழ்ச்சி. நிகழ்வு ஆரம்பமானவுடன் ரஷ்யன் சிம்பொனி இசை துணுக்கொன்றை வாசித்துக் காண்பித்தார்கள். அதன் பிறகு ராஜா சார் மேடைக்கு வந்தார். வாத்தியக் கலைஞர்களை தலைமையேற்று நடத்தும் கண்டக்டர் மைக்கேல், ராஜாவிடம் அனுமதி பெற்று நிகழ்ச்சியை ஆரம்பித்தார். ராஜாவின் சிம்பொனி 4 பாகங்களாக வாசிக்கப்பட்டது.

ஒவ்வொரு பாகமும் 15 நிமிட நேரம் வரை வாசிக்கப்பட்டது. ஊசி விழுந்தால் கூட சத்தம் கேட்கும் அளவுக்கு நிசப்தமாக இருந்த அரங்கத்தில் ராஜாவின் இசை அங்கிருந்த அனைவரையும் ஊடுருவியதெனலாம். வாத்தியக் கலைஞர்கள் வாசிக்க வாசிக்க என்னில் எழுந்த உணர்வுகள் வார்த்தைகளால் விவரிக்க முடியாதவை. ஒவ்வொரு பாகம் வாசித்து முடித்தவுடன் எழுந்த கைதட்டல் அடங்க வெகுநேரமானது. அந்த கைதட்டலைக் கேட்கும்போதெல்லாம் உணர்ச்சிவசப்பட்டு கண்ணீர் மேலிட ராஜாவை பார்த்துக்கொண்டிருந்தேன்.

மூன்றாவது பாகம் ராஜாவின் உச்சம். மேடையிலிருந்த 77 இசைக் கலைஞர்களுக்கும் வேலை கொடுத்திருக்கிறார். இதை எப்படி ஒரு மனிதர் எழுதியிருக்க முடியுமென்று ஆச்சரியப்படாதவர்கள் இருக்க முடியாது. அந்த பாகத்தைக் கேட்கும்போதுதான் ராஜாவை நாம் சினிமா இசை எனும் கூண்டுக்குள் வைத்திருக்கிறோமென்று தோன்றியது.

ராஜா உலகம் எங்கும் பறக்கவேண்டிய ஓர் இசைப்பறவை. சினிமாப் பாடல்களைக் கொடுத்து 5 நிமிடத்துக்குள் ஒரு பாடல், அதில் 2 பிஜிஎம் என கூண்டுக்குள் இருந்த ஒரு பறவை. இன்று இந்தப் பிரபஞ்சத்தை ஆள கிளம்பிவிட்டதென்றே தோன்றியது.

மூன்றாவது பாகம் வாசிக்கும்போதும் திகைத்திருந்த ரசிகர் கூட்டம். அது முடிந்தவுடன் உச்சபட்ச ஆச்சரியத்தில் கைதட்டியது. பலத்த கைதட்டல் முடிய நேரமானது. அப்போதும் நான் உணர்வுகளின் பிடியில் இருந்தேன்.

நான்காவது பாகமும் அற்புதம். கிட்டத்தட்ட ஒரு மணிநேரம் நீடித்த இசை நிகழ்ச்சியில் எப்போதும்போல் அந்த மேடையிலேயே அமர்ந்து அவர் எழுதிய நோட்ஸ்களை கையில் வைத்துகொண்டு, அனைத்தும் சரியாக வாசிக்கப்படுகிறதா என்று சோதித்துக் கொண்டே இருந்தார் ராஜா. லைவ் கான்சர்டுகளில் 3 மணிநேரம் அசராமல் நின்று ஒவ்வொரு வாத்தியக் கலைஞர்களையும் தன் கண்ணசைவில் ஆட்டுவிக்கும் ராஜாவை நமக்குத் தெரியாதா என்ன?

நிகழ்வு முடிந்தவுடன் அரங்கமே எழுந்து கைதட்டியது. கண்டக்டரும் ராஜாவும் தலைகுனிந்து அந்த பாராட்டுகளை ஏற்றுக்கொண்டனர். ராஜாவை சில வார்த்தைகள் பேசுமாறு அழைத்தார் மைக்கேல்.

‘‘சிம்பொனியை நான் விளக்க செய்ய முடியாது, நீங்கள் எக்ஸ்பீரியன்ஸ் செய்வதுதான் சரியாக இருக்கும்” என்று தனக்கே உரிய பாணியில் சொன்னார். அதன் பிறகு சிறிய இடைவேளை விடப்பட்டது. சிம்பொனி நிகழ்வில் ஒரு சர்ப்ரைஸ் இருப்பதாக ஏற்கனவே ராஜா சொல்லியிருந்தார்.

இடைவேளைக்குப் பிறகு ராஜாவின் அதி அற்புத சினிமாப் பாடல்களை ரோயல் ஆர்கெஸ்டரா குழுவினர் வாசிக்கக் கேட்கும் பாக்கியம் கிடைத்தது. எத்தனையோ ஆயிரம் தடவைகள் கேட்ட பாடல்கள் நேற்று புதியதாகக் கேட்டன.



மடை திறந்து, ராஜா ராஜாதி ராஜனிந்த ராஜா, தும்பி வா, கண்ணே கலைமானே, பூவே செம்பூவே பாடல்கள் தொடர்ச்சியாக வாசிக்கப்பட்டன. இதைக் கேட்கும்போதுதான் தெரிந்தது, இந்த சிம்பொனியை நமக்கு ராஜா எப்போதோ கொடுத்துவிட்டார் என்று. அதன் பிறகு முடிவடையாத சிம்பொனி என்ற தலைப்பில் மீண்டும் ஓர் இசை விருந்து ஆரம்பித்தது. அது என்ன பாடல் தெரியுமா? புதிய வார்ப்புகள் படத்தில் இடம் பெற்ற “இதயம் போகுதே” பாடல். ‘‘டேய் உங்களுக்கெல்லாம் 45 வருஷத்துக்கு முன்னாடியே நான் சிம்பொனியை கொடுத்திருக்கேண்டா” என்று சொல்லாமல் சொல்கிறார் என்று நினைத்துக்கொண்டேன்.

ஜெயா ரிவி நிகழ்ச்சியொன்றில் “சிம்போனினா என்ன சார்” என்று பிரகாஷ்ராஜ் கேட்கும்போது, இந்தப் பாடலைத்தான் வாசித்துக் காண்பித்தது நினைவுக்கு வந்தது. அப்படியானால் என் எண்ணம் சரிதான். அவர் சிம்பொனி செய்து 45 வருடங்களாகிவிட்டன. நமக்குத்தான் புரியவில்லை. ‘‘இதயம் போகுதே’’ பாடல் வாசிக்கும்போதே மெய்சிலிர்த்துப் போனேன். கூடுதல் போனஸாக அவர்கள் வாசிக்க ராஜா பாட ஆரம்பித்தார். அதுவும் ஆர்கெஸ்டரா வாசிப்பதற்கெற்ப பாடியது ராஜாவின் திறமையை பறைசாற்றியது.

நிகழ்ச்சி டிஜிட்டலில் வரும்போது மறக்காமல் பார்த்து விடுங்கள். அதன் பிறகு ராஜாவின் ஐகானிக் பிஜிஎம்கள் வாசிக்கப்பட்டன. ஏற்கனவே கேட்டதுதான் என்றாலும், 77 இசை விற்பன்னர்கள் சேர்ந்து வாசிக்கக் கேட்கும்போது, பிரம்மாண்டமாக இருந்தது. “இன்று என் வாழ்வில் மிக முக்கியமான நாள்” என்று ராஜா சொன்னபோது, ராஜா சாருடைய எதிர்பார்ப்பு தெரிந்தது. அவரது பேச்சில் மிகுந்த மனநிறைவு தெரிந்தது.

நமது கலாசாரப்படி இசை நிகழ்ச்சியை கண்டக்ட் செய்த மைக்கேலுக்குப் பொன்னாடை போர்த்தி மரியாதை செய்தார். அதன் பிறகு வாசித்த 77 கலைஞர்களையும் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கவிருப்பதாகத் தெரிவித்தார். இசை நிகழ்ச்சி முடிந்து அறைக்கு வந்த பின்னும் பிரமிப்பு அடங்கவில்லை.

ராஜா சார் வாழும் காலத்தில் நாமும் வாழ்வதே நமக்கு கொடுப்பினைதான். கோடிக்கணக்கான ராஜாவின் ரசிகர்களின் பிரதிநிதியாக இந்த நிகழ்ச்சியைப் பார்த்த அனுபவத்தை உங்கள் முன் பகிர்ந்துகொள்கிறேன்.”

**ரவி பழனிவேலு**



# உழைப்பின் வியர்வை ருசிக்கும்!

உப்புக் கரிக்கும் வியர்வையைக்கூடச் சுவைமிக்கதாக மாற்றிவிடும் உழைப்பின் மேன்மை அறியக் காத்திருக்கும் அன்பு வாசகர்களே! வணக்கம்.

வாழப்பிறந்த ஒவ்வொருவரும் அன்றாடம் உழைக்க வேண்டும்; குறைந்தபட்சம் அவரவர் உணவுக்கேற்ற உழைப்பையாவது நல்க வேண்டும் என்று பேரறிஞர்கள் வலியுறுத்துவர்.

உழைப்பை உடல் உழைப்பு, மூளை உழைப்பு என இரண்டு வகையாகப் பகுத்துக் கூறலாம். உடல் உழைப்பில் கை, கால் மற்றும் உடல் அங்கங்களின் அசைவுகள் பெருகியதாகக் காணப்படும்; மிகுதியாக உடல் உழைப்புக் கூடினால், உடம்பில் வியர்வை ஆறாகப் பெருக்கெடுத்து ஓடும்; தசைகள் மற்றும் கை, கால்களில் அசதி பெருகி, வலி உண்டாகும். ஆனால், மூளை உழைப்பில் அணிந்திருக்கும் ஆடையில்கூட அழுக்குப்படாமல், உடம்பில் ஒரு துளி வியர்வைகூட எட்டிப்பார்க்காமல், குளிர் காற்றாடி அறையில் சுகமாக உழைத்து விடலாம்; ஆனால், மூளை உழைப்பின் பக்கவிளைவுகளாக, பரபரப்பு, இரத்த அழுத்தம், கொழுப்பு, நீரிழிவு, மாரடைப்பு போன்ற நோய்கள் அழையா விருந்தாளிகளாக வந்து உடம்பில் முகாமிட்டுவிடக்கூடும்.

உடல் உழைப்பைக் கடின உழைப்பு என்றும் மூளை உழைப்பை நளின உழைப்பு என்றும் வகைப்படுத்தி வன்மை மென்மை காணலாம். இன்றைய டிஜிட்டல் உலகில் மூளை உழைப்புப் பெருகி, உடல் உழைப்புக் குறைந்துவிட்டது. பொதுவாக உழைப்பு என்பதே நெற்றி வியர்வை நிலத்தில் சிந்த உழைக்கின்ற கடின உழைப்பையே குறிக்கும். இன்றைய பெரும்பான்மையான உழைப்பு முறைகள் எந்திரச் சார்புடையவையாக மாறிவிட்டதால், கை, கால்களில் மண்ணோ சகதியோ அழுக்கோ தூசோ பட்டுவிடாமல் பணி முடித்துவிடுகிற வசதிகள் பெருகிவிட்டன. அதனால் வியர்வைக்கிருந்த மதிப்பும் மரியாதையும் குறைந்து கொண்டிருக்கின்றன. வயல்வெளி மற்றும் தொழிற்சாலைகளிலும்கூட ஆட்களின் எண்ணிக்கையைக் குறைத்துவிடுகிற கருவிகளின் வருகையே பெருத்துவிட்டது.

மனிதர்கள் பணிக்குச் செல்வதற்குக்கூட நடை மற்றும் மிதிவண்டித் துணையின்றி இரு சக்கர மற்றும் நான்கு சக்கர வாகன வசதிகளுக்குப் பழகிவிட்டதால், துளியளவு வியர்வைக்குக்கூட உழைக்கவேண்டிய அவசியமில்லாமல் போய்விட்டது. உழைப்பு இப்போது சுகவாசிகளின் பொழுதுபோக்கு போல ஆகிவிட்டது. ஆயினும் உடல் உழைப்புக்கு வாய்ப்பின்றிப் போகிறவர்கள், அன்றாடம் உடற்பயிற்சி செய்வதன் மூலமும் நடைப்பயிற்சி மற்றும் மெல்லோட்டப் பயிற்சிகளில் ஈடுபடுவதன் மூலமும் வியர்வை சிந்தும் காரியங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஒவ்வொரு மனிதருக்கும் உழைப்பு எவ்வளவு அவசியமானதோ அதைவிட அவசியமானது அவர்கள் வியர்வை சிந்தவேண்டியதுமாகும். வியர்வை ஒரு மனிதனை ஆரோக்கிய மனிதனாக மாற்றுகிறது. உடல் உழைப்போ மூளை உழைப்போ எந்த உழைப்பாயினும் வியர்வை சிந்தப்படும்போது உடலுக்குள் பலவிதமான நன்மைகள் உருவாவதாக அறிவியலாளர்கள் கூறுகின்றனர். நாம் உடல் உழைப்பிலோ அல்லது உடற்பயிற்சி, நடைப்பயிற்சிகளில் ஈடுபடும்போதோ இதயத்துடிப்பு, இரத்த ஓட்டம் ஆகியவை இயல்பைவிட அதிகமாக இயங்கத் தொடங்குகின்றன; அதனால் நமது உடம்பின் இயல்பான வெப்பநிலை அதிகமாகிறது; அந்த அதிகமாகும் வெப்பநிலையைக் குளிர்வித்துச் சமப்படுத்துவதற்காக நமது உடம்பே வியர்வையைச் சுரக்கும் வேலையில் ஈடுபடுகிறது. தோலில் சுரக்கும் வியர்வை ஆவியாகும்போது உடம்பு குளிர்நிலையை உணர்கிறது. ஆக உழைப்பால் உண்டாகும் வியர்வை நமது உடம்பைத் தட்ப வெப்பச் சமநிலையில் வைத்திருக்க உதவுகிறது; மேலும், உடம்பின் தோலில் பளபளப்பும் பெருகுகிறது.

உடம்பில் படிகின்ற தூசுகள் மற்றும் நோய்க்கிருமிகள் தோல்களின் வழியே புகுந்து உடம்பைக் கெடுத்து விடாமலிருக்க வியர்வைச் சுரப்பிகள் உதவுகின்றன. தோலில் சுரக்கும் வியர்வை நமது தோல்களில் உண்டாகும் கரும்புள்ளிகள் போன்றவற்றை நீக்கி, தோல் ஆரோக்கியத்துக்கு அடித்தளமாகத் திகழ்கிறது. உடம்பின் தோல் வழியே நச்சுக்கிருமிகள் வெளியேற்றத்துக்கான சிறந்த செயலையும் வியர்வையாற்றுகிறது.

வியர்வை தோன்ற உழைத்துவிட்டு அல்லது உடற்பயிற்சி செய்துவிட்டு, சிறிதுநேர இளைப்பாறுதலில் ஈடுபடும்போது, மனம் அதீதப் புத்துணர்வு அடைவதை உணரலாம்; மனதில் அவ்வப்போது உண்டாகும் விரக்தி, மன அழுத்தம், தீரா ஆவல், சோம்பல்தன்மை ஆகிய அனைத்தும் வியர்வை வெளியேறிய பின் இல்லாமல் போகும். அடுத்தடுத்த வேலைகள் பெரும் நெருக்கடிகளாக இருந்தாலும் அவற்றை விருப்பத்தோடு செய்வதற்கான புத்துணர்ச்சியும் புது நம்பிக்கையும் உண்டாகும். உடம்பில் தேவையற்ற பகுதிகளில் சேர்ந்துள்ள கொழுப்பைக் கரைத்து, எடையைக் குறைத்து, பொருத்தமான உருவப்பாங்கை நாம் பெறுவதற்கும் வியர்வை வெளியேற்றம் பெரு மருந்தாக உதவுகிறது.

வியர்வை என்றாலே நாற்றமடிப்பது மற்றும் உப்புக் கரிப்பது என்று நம்மில் பெரும்பாலானோர் வியர்வையை வெறுக்கவும் விலக்கவும் செய்கிறோம். உண்மையில் வியர்வை என்பதே உடம்பின் கழிவுகள் மற்றும் நச்சுத்தன்மை வெளியேற்றம்தான். ஆனால், உடல் உழைப்போ உடற்பயிற்சியோ செய்யாமல், வியர்வை வெளியேற்றப்படாமல் இருந்தால் நஷ்டம் நம் உடம்புக்குத்தானேயொழிய வேறு அடுத்தவருக்கில்லை. அதனால் அன்றாடம் நமது உடம்பிலிருந்து அவசியம் வியர்வை வெளியேற்றப்பட வேண்டும்; அதுவும் நமது சம்பாத்தியத்துக்கான உழைப்பின்மூலம் வியர்வை சிந்தப்பட்டால் அதைவிடச் சிறந்த காரியம் வேறு எதுவுமில்லை.

ஒரு நகரில் ஒரு பெரும் செல்வந்தர். தன்னுடைய சொந்த உழைப்பின் மூலமாகவே உயர்ந்த நிலைக்கு வந்தவர். அவருக்கு ஒரேயொரு மகன். படிப்பில் பெரிதாக ஆர்வமில்லை. இளைஞனானதும் தொழில் கற்று வருவதற்காக அவனை நண்பரொருவரின் நிறுவனத்துக்கு ஆறு மாதத்துக்கு வேலைக்கு அனுப்பினார். செல்வந்தரின் மகன் அந்த நிறுவனத்தில் எந்தவித ஈடுபாடும் இல்லாமல், எந்தவிதமான வேலையும் செய்யாமல் ஆறு மாதங்களைக் கடத்திவிட்டு வீடு திரும்பினான். செல்வந்தரின் நண்பர், வேலை செய்யாவிட்டாலும் ஆறு மாதத்துக்கான கூலியாக ஒரு பவுன் தங்கக் காசைக் கொடுத்தனுப்பினார். வீட்டுக்கு வந்த மகன், தன் தந்தையிடம் அந்த ஒரு பவுன் தங்கக் காசைத் வழங்கினான்; மகனிடமிருந்து காசை வாங்கிய தந்தை அலட்சியமாக அதைக் குப்பைத்தொட்டிக்குள் வீசியெறிந்தார்; எந்தச் சலனமுமில்லாமல் மகன் தனது அறைக்குள் சென்றுவிட்டான்.

அடுத்து ஒரு வாரம் கழித்து, அந்தச் செல்வந்தர், தன்னுடைய இன்னொரு நண்பனின் நிறுவனத்துக்குத் தன் மகனை மூன்றுமாத வேலைக்கு அனுப்பி வைத்தார். செல்வந்தரின் மகனோ அங்கும் வழக்கம்போல எந்த வேலையும் செய்யாமல் மூன்று மாதம் கழிந்தவுடன் வீடு திரும்பினான். இந்தத் தடவை அவன் வேலை பார்த்ததற்குக் கூலியாக இரண்டு பவுன் தங்க நாணயங்களைப் பெற்று வந்தான். தந்தையிடம் மகன் அந்த நாணயங்களைக் கொடுக்க, தந்தையும் வழக்கமான அலட்சியத்தோடு அவற்றை வாங்கிக் குப்பைத்தொட்டியிலேயே வீசியெறிந்தார். மகனும் எதிர்வினை எதுவுமின்றித் தன் அறைக்குச் சென்றுவிட்டான்.

அடுத்த ஒரு வாரத்தில், ஒரு மாதம் வேலை கற்று வருவதற்காக அறிமுகமில்லாத ஒரு நபர் நடத்தும் நிறுவனத்துக்கு மகனை அனுப்பி வைத்தார் செல்வந்தர். அங்கு மகனைப் பாடாய்ப்படுத்தி, கசக்கிப் பிழிந்து வேலை வாங்கினார் புதிய முதலாளி. இதுவரை இருந்த இரண்டு முதலாளிகளும் நண்பனின் மகன் என்பதால் வேலை வாங்காமல் கூலியை மட்டும் கொடுத்தனுப்பினர். ஆனால், இவரோ நன்றாக வேலையை வாங்கிக்கொண்டு, அரைப் பவுன் தங்க நாணயத்தைக் கூலியாகக் கொடுத்தனுப்பினார். வீட்டுக்கு வந்த மகன், தன் தந்தையிடம் தான் பெற்றுவந்த கூலி அரைப் பவுன் தங்க நாணயத்தை ஆவலாகக் கொடுத்தான். அதை அலட்சியமாகப் பெற்றுக்கொண்ட தந்தை வழக்கம்போலக் குப்பைத்தொட்டியில் வீசியெறிந்தார்.

இதைப் பார்த்தவுடன் மகனுக்கு வந்ததே பாருங்கள் கோபம்! அதை எந்த அளவைக் கருவியையும் வைத்து அளந்துவிட முடியாது. ‘‘உழைப்பின் அருமை உங்களுக்குத் தெரியுமா?. இந்த அரைப் பவுனைச் சம்பாதிப்பதற்காக இந்த ஒரு மாதகாலம் நான் எப்படி உழைத்தேன் தெரியுமா?, உங்களுக்கு எங்கே தெரியும். தெரிந்திருந்தால் அந்தக் காசை வீசியெறிந்து என் உழைப்பை உதாசீனப்படுத்தியிருப்பீர்களா?’’ என்று கூச்சல் போடத் தொடங்கிவிட்டான். மகன் திட்டத் திட்டத் தந்தைக்கு மகிழ்ச்சிப் பிரவாகம் பொங்கிப் பெருக்கெடுத்து ஓடியது.

குப்பையில் வீசிய அரைப் பவுனை, மரியாதையோடு தேடியெடுத்துக் கையில் வைத்துக்கொண்டு, ‘‘மகனே! இதற்குமுன் நீ ஒரு பவுன், இரண்டு பவுன் என்று மதிப்பில் கூடிய தங்க நாணயங்களைக் கூலியாகப் பெற்றுவந்து இரண்டு தடவைகள் என்னிடம் தந்தபோது அவற்றை அலட்சியமாக வீசியெறிந்தேன்; அப்போதெல்லாம் நீ கோபப்படவில்லை. இப்போது இந்த அரைப் பவுனுக்கு மட்டும் ஏன் இத்தனை கோபம்?’’ கேட்டார் தந்தை.

‘‘அந்தக் காசுகளெல்லாம் நான் உழைக்காமல் பெற்று வந்தவை; ஆனால், இந்த அரைப் பவுனோ நான் உழைத்துச் சம்பாதித்தது. இந்த நாணயம் தங்கத்தால் உருவானது அல்ல; எனது உழைப்பின் வியர்வையால் வார்த்தெடுக்கப்பட்டது’’ என்றான் மகன்.

‘‘மகனே! நம்மிடமுள்ள செல்வம் நம் உழைப்பால் உருவாக்கப்பட்டிருந்தால்தான் அதன் உண்மை மதிப்பையும் மரியாதையையும் நாம் உளப்பூர்வமாக உணர்ந்திருப்போம். அதற்காக நான் நடத்திய சிறு தேர்வுதான் இந்த உதாசீன நாடகம்" - என்றார் தந்தை.

உலோகங்களில் இரும்பு வலிமையானதுதான் என்றாலும் அது பயன்படுத்தப்படாதபோது துருப்பிடித்து அழிந்துபோவதற்கு வாய்ப்புகள் அதிகம். அதைப்போல உடம்பும் மனதும் தொடர்ந்து பயன்படுத்தப்பட வில்லையெனில், அவை நோய்களின் கூடாரமாகிவிடும். மெய் வருந்த உழைப்பதற்கு எப்போதும் கூலி உண்டு; அது பொருட்களாக, செல்வமாக, காசு பணமாக இருக்கலாம். ஆனாலும் அந்தச் சம்பளத்தோடு உடல் உழைப்பின் பரிசாக நமக்குக் கிடைக்கும் அரிய அமிர்தம் வியர்வையேயாகும். வியர்வை உப்புக் கரிக்கும் என்றாலும் அது தரும் நலமான உதவிகளைப் பட்டியலிட்டுக்கொண்டே போகலாம். அயராத உழைப்பால் நிறை செல்வம் ஈட்டலாம்!

ஆனால், வியர்வை சொட்டச் சொட்ட உழைப்பதனால் நீண்ட ஆயுள் கைகூடும்!

**முனைவர் சுந்தர ஆவுடையப்பன்**

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91. விஜேராம மாவத்தை. கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 0114 846 097
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2025 மார்ச் 11ஆம் திகதி, செவ்வாய்க்கிழமை

# தேசிய மக்கள் சக்தி முற்றாக மாறிவிட்டதா?

மாத்தறை நீதவான் நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட கைது உத்தரவை இரத்துச்செய்யக் கோரி முன்னாள் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோனின் சட்டத்தரணிகள் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் ரிட் மனுவொன்றை நேற்று தாக்கல் செய்துள்ளனர். இந்த மனு மீதான விசாரணை நாளை 12ஆம் திகதி புதன்கிழமை மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் இடம்பெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

நீதிமன்ற உத்தரவை மதிக்கவேண்டுமென ஊருக்கு உபதேசம் செய்த முன்னாள் பொலிஸ் மா அதிபர் தேசபந்து, நீதிமன்றத்தின் உத்தரவை ஏற்காமல் தலைமறைவாகியுள்ளார். இந்த விடயத்தில் ஐக்கிய குடியரசு முன்னணியின் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க வெளிப்படுத்தியுள்ள கருத்துகள் முக்கியமானவை.

முன்னைய அரசுகளின் டீல் முறைதான் இந்த அரசிலும் நீடிக்கின்றதென்று அவர் குற்றஞ்சாட்டுவதில் அர்த்தம் இருப்பதாகவே தோன்றுகின்றது.

தேசபந்து தென்னக்கோனை கைதுசெய்யுமாறு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ள நிலையிலும் இதுவரையில் அவர் கைதுசெய்யப்படவில்லை. எங்கோ தலைமறைவாகியுள்ளார். தேசபந்துவின் பின்னணியில் முன்னைய அரசில் அவருடன் இயைந்து செயற்பட்ட முன்னாள் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் உள்ளார். டிரான் அலஸுக்கு எதிராக ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க செயற்படமாட்டார். இதனால்தான் தேசபந்து தென்னக்கோன் பாதுகாக்கப்படுகிறார். அத்துடன், வி.எவ்.எஸ். விசா கொடுக்கல் வாங்கல் ஊழல், மோசடி தொடர்பில் டிரான் அலஸுக்கெதிராக எவ்வித நடவடிக்கைகளும் இதுவரையில் மேற்கொள்ளப்படவில்லை. இவர்கள் அனைவரும் நண்பர்கள். இவர்களின் டீல் அரசியலை நாங்கள் நன்கு அறிவோம் - என்று கூறியிருக்கின்றார் பாட்டலி சம்பிக்க ரணவக்க.

உண்மை தான்,முன்னைய அரசில் வெளிநாட்டவர்களுக்கு விசா வழங்கல் தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கையையொட்டி குடிவரவு- குடியகல்வு திணைக்கள கட்டுப்பாட்டாளர் நாயகம், உயர் நீதிமன்ற உத்தரவின் பிரகாரம் இன்னமும் விளக்கமறியலில்தான் இருக்கின்றார். அது விடயத்தில் பிரதானமாக சம்பந்தப்பட்ட பொறுப்பான அமைச்சர் டிரான் அலஸுக்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

டிரான் அலஸினுடைய பாதுகாப்பில்தான் தேசபந்து தென்னக்கோன் அடைக்கலம் பெற்றுப் பாதுகாப்பாக இருக்கிறார் என்று தெற்கில் பேசப்படுகிறது.

இவற்றையெல்லாம் பார்க்கும் போது முன்னைய அரசுகளின் டீல் அரசியலில் இருந்து இப்போதைய அரசுத் தலைமையும் வேறுபட்டதல்ல என்ற சிந்தனைதான் பொதுமக்களுக்கு ஏற்படுகின்றது.

முன்னைய 76 ஆண்டுகால அரசுகளையும் தாறுமாறாக விமர்சிக்கும் இந்த ஆட்சித் தலைமையும் தன்னை நேர்மையானதாக - உண்மையானதாக - நீதி, நியாயம் மிக்கதாக - சந்தேகத்துக்கு அப்பாற்பட்டதாக - காட்டிக் கொள்வது அவசியம். ஆனால், களத்தில் நடக்கும் நிகழ்வுகளோ இந்த ஆட்சிப் பீடமும் முன்னைய ஆட்சிப் பீடங்களிலிருந்து வேறுபட்டதல்ல, ஒரே குட்டையில் ஊறியதுதான் என்ற சிந்தனையைத் தருவனவாகவே இந்த ஆட்சி பீடத்தின் நடவடிக்கைகள் அமைந்திருப்பது குறிப்பிடப்படவேண்டியதாகும்.

முன்னைய அரசில் இடம்பெற்ற சட்டவிரோத விசா மோசடிகள் தொடர்பில் எதிர்க்கட்சியில் இருந்தபோது கடுமையாக விமர்சனங்களை முன்வைத்த தேசிய மக்கள் சக்தி, இப்போது அதைப்பற்றி வாயே திறப்பதில்லை. எல்லா ஆட்சியாளர்களையும் சகட்டுமேனிக்கு விமர்சித்த இப்போதைய ஆளுங்கட்சி, பதவிக்கு வந்த பிறகு கோமாநிலைக்குச் சென்ற விந்தையை என்னென்று சொல்வது?

# கரைந்து செல்லும் முஸ்லிம்களின் அரசியல் பலம்

இலங்கை சுதந்திரமடைந்து 77 ஆண்டுகளை எட்டியுள்ள நிலையில், இந்நாட்டுக்கு 2,000 ஆண்டுகளுக்கு முன் வருகை தந்த அரேபியர்கள் இந்நாட்டில் வாழ்ந்த சிங்கள மக்களுடனும் தமிழ் மக்களுடனும் இணைந்து இந்நாட்டின் சுதந்திரத்துக்காகத் தோளோடு தோள்நின்று போராடினார்கள் என்ற அந்தச் சிறப்பு வரலாற்றை யாரும் மறந்துவிட முடியாது.

அந்த வகையில், 1947இல் சோல்பரி அரசியலமைப்பில் இடம்பெற்ற முதலாவது பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் டி.எஸ்.சேனநாயக்கவின் தலைமையிலான ஐ.தே.கட்சி வெற்றிபெற்று ஆட்சியமைத்ததோடு, அவரது அமைச்சரவையில் ரி.பி.ஜாயா, பளீல் ஏ. கபூர், ஜி.ஜி.பொன்னம்பலம், சுந்தரலிங்கம் போன்றோர் அமைச்சர்களாகப் பதவி வகித்தனர்.

அத்துடன், அன்றைய பாராளுமன்றின் முதல் சபாநாயகராக புத்தளத்தைச் சேர்ந்த எம்.எச்.எம்.இஸ்மாயில் பதவி வகித்தார். இவ்வாறு இலங்கையின் பாராளுமன்ற அமைச்சரவை நெடுகிலும் முஸ்லிம், தமிழ்ப் பிரதிநிதிகள் அமைச்சர்களாகவும் பிரதியமைச்சர்களாகவும் விளங்கினார்கள்.

1951இல் எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்க ஸ்ரீல.சு.கட்சியை ஸ்தாபித்ததோடு, 1956இல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் அக்கட்சி போட்டியிட்டதுடன், வெற்றிபெற்று ஆட்சியும் அமைத்தது. இதனடிப்படையில் இந்நாட்டை மாறி மாறி ஆட்சிசெய்த இரு பிரதான அரசாங்கங்களிலும் எச்.எஸ்.எம்.இஸ்மாயில், ரி.பி.ஜாயா, பளீல் ஏ. கபூர், சேர். ராஸீக் பரீட், பதியுதீன் மஹ்மூத், எம்.எச். முஹமத், கேற் முதலியார், காரியப்பர், பாக்கீர் மாக்கார், ஏ.சீ.எஸ்.ஹமீட், எம்.எம்.முஸ்தபா, ஏ.ஆர்.மன்சூர், எம்.ஏ.அப்துல் மஜீத், ஏ.எல்.ஏ.மஜீத், ஐ.ஏ.காதர், எம்.எச்.எம்.அஷ்ரப், எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா, ஏ.எல்.எம்.அதாவுல்லா, பைஸர் முஸ்தபா, ஏ.எச்.எம்.பௌஸி, ரவூப் ஹக்கீம், ரிஷாத் பதியுதீன், பேரியல் அஷ்ரப், எம்.எச்.எம்.நைனா மரிக்கார், ஜாபீர் ஏ. காதர், பரீட் மீராலெவ்வை, எம்.எல்.எம்.அபூசாலி, எம்.ஈ.எம்.மஹ்ரூப், யூ.எல்.ஏ.பாறூக், பைசல் காசீம், பஷீர் சேகுதாவுத், ஹஸன் அலி, எம்.எஸ்.அமீர் அலி, எச்.எம்.எம்.ஹரீஸ், சேகு இஸ்ஸதீன், மையோன் முஸ்தபா போன்றவர்கள் அமைச்சர்களாக விளங்கினார்கள்.

அந்த வகையில், 1947 முதல் 1977 வரையான காலப்பகுதி வரை ஐ.தே.க., ஸ்ரீல.சு.கட்சி அரசாங்கங்களில் அமைச்சர்களாக விளங்கியவர்கள் இணக்க அரசியலில் இணைந்து செயற்பட்டபோதும் தாம் சார்ந்திருந்த கட்சிக்கு விசுவாசமாகவும் நம்பிக்கையுடையவர்களாகவும் விளங்கினார்கள். பாராளுமன்றில் எதிரும் புதிருமாக விளங்கியபோதும் ஒருவருக்கொருவர் வசை பாடவில்லை. மாறாக, மக்களின் தேவைகள், பிரச்சினைகள் ஏற்படும் போதெல்லாம் கட்சிபேதங்களை மறந்து ஒன்றுபட்டு பிரச்சினைகளுக்கு சுமுகமான முறையில் தீர்வைப் பெற்றுக்கொடுத்தனர்.

இவ்வாறுதான் 1947 முதல் 1989 வரையும் பாராளுமன்றத்தில் பிரதிநிதிகளாக விளங்கிய முஸ்லிம் அரசியல்வாதிகள் செயற்பட்டதுடன், தங்களின் அரசியல் சித்தாந்தங்களை மிகவும் கண்ணியமாகவும் ஒழுக்க விழுமியங்களுடனும் கையாண்டார்கள். ஆனால், 1976இல் புத்தளம் பள்ளிவாசலில் இராணுவத்தினரால் நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டில் தொழுகையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த ஆறு பேர் மரணமானார்கள். ஆனாலும், இந்த விடயத்தில் அன்றைய பாராளுமன்றை அலங்கரித்துக்கொண்டிருந்த முஸ்லிம் உறுப்பினர்கள் எவரும் இதுபற்றிப் பேச முடியாமல் மௌனிகளாக இருந்ததன் காரணமாக மு.கா. தேசிய தலைவர் எம்.எச்.எம்.அஷ்ரப், எஸ்.ஜே.வி.செல்வநாயகத்தை அனுப்பி பாராளுமன்றில் இதுபற்றி வினவுமாறு கேட்கப்பட்டதற்கிணங்க எஸ்.ஜே.வி.செல்வநாயகம் புத்தளம் படுகொலையைக் கண்டித்து உரையாற்றியதோடு, தமிழரசுக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் கறுப்புப்பட்டி அணிந்து அன்றைய பாராளுமன்ற நடவடிக்கைகளை நிராகரித்து வெளிநடப்புச் செய்தனர்.

இவ்வாறான பல நிகழ்வுகள் முஸ்லிம்களுக்கெதிராக இடம்பெற்று வந்த நிலையிலேயே இதன் பின்புலத்தின் அடிப்படையில்தான் இந்நாட்டில் பலநூறு வருடங்களை வரலாறாகக்கொண்டு விளங்கும் முஸ்லிம் சமூகம் தமது தாயகப்பூமியில் தனித்துவமாகவும் தன்மானத்துடனும் தலைநிமிர்ந்து வாழவேண்டுமென்ற அடிப்படையில்தான் மர்ஹூம் எம்.எச்.எம்.அஷ்ரப் முஸ்லிம்களுக்கென ஒரு கட்சியை ஸ்தாபித்தார்.

ஆனால், இதற்கு முன்னர் சேர். ராஸீக் பரீட், எம்.எஸ்.காரியப்பர் மற்றும் பதியுதீன் மஹ்மூத் போன்றவர்களால் முஸ்லிம்களுக்கென கட்சிகள் ஸ்தாபிக்கப்பட்டபோதும் அது மக்களின் மத்தியில் எடுபடவில்லை. 1986இல் மு.கா. தோற்றம் பெற்றபோது நீலத்திலும் பச்சையிலும் கரைந்துபோயிருந்தவர்களால் மு.காவுக்கு எதிராகவும் அஷ்ரப்புக்கு எதிராகவும் பல குற்றங்களும் அவதூறுகளும் சுமத்தப்பட்டன. இவைகளையெல்லாம் எதிர்கொண்டு மிகவும் கனிவோடும் நம்பிக்கையோடும் கட்சியை முன்னெடுத்துச்சென்ற அஷ்ரப், முஸ்லிம்களுக்கான கட்சியின் தேவையை முஸ்லிம் மக்களுக்கு விளக்கியதோடு, எமது சமூகத்தின் குரல் பாராளுமன்றில் முதுகெலும்புள்ள குரலாக ஒலிக்கவேண்டுமெனில் ஒரு தனிக் கட்சி அவசியமென்பதையும் கூறினார்.

அத்துடன், அவர் நீலத்திலும் பச்சையிலும் கரைந்துபோயிருந்த முஸ்லிம் சமூகத்தை ஒன்றுதிரட்டி அக்கட்சியை வலுவான நிலைக்கு இட்டுச்சென்றதுடன், 1989 பெப்ரவரி மாதம் இடம்பெற்ற முதலாவது விகிதாசார அடிப்படையிலான பொதுத் தேர்தலில் நான்கு ஆசனங்களைப் பெற்று மு.கா. பாராளுமன்றம் சென்றது. அன்றிலிருந்து முஸ்லிம்களின் குரல் தனித்துவமாக ஒலிக்கத் தொடங்கியது. அதனைத் தொடர்ந்து 1994இல் இடம்பெற்ற பொதுத் தேர்தலில் 07 ஆசனங்களைப் பெற்ற மு.கா. அன்றைய சந்திரிகா அம்மையாரின் அரசாங்கத்தில் பங்காளியாக இணைந்துகொண்டது.

அதன் தேசியத் தலைவர் மர்ஹூம் எம்.எச்.எம்.அஷ்ரப் புனர்வாழ்வு, புனர்நிர்மாணம் மற்றும் கப்பல்துறைமுக அமைச்சராக நியமிக்கப்பட்டார். அதனூடாக சிறப்பான பல சேவைகளைச் செய்த அவர் இந்த முஸ்லிம் சமூகத்தை மு.கா. கட்சியில் அணிதிரள வைத்ததோடு, அதில் வரலாற்று வெற்றியையும் பெற்றார். இவ்வாறானதொரு நிலையில்தான் 2000ஆம் ஆண்டு ஹெலி விபத்தில் அஷ்ரப் மரணமானார். அதனைத் தொடர்ந்து தலைமைத்துவத்தை ஏற்றுக்கொண்ட ரவூப் ஹக்கீம், அஷ்ரப் வகித்த பதவியையும் வகித்தார். ஆனால், பேரியல் அஷ்ரப்புக்கும் ரவூப் ஹக்கீமுக்குமிடையில் ஏற்பட்ட கருத்து முரண்பாடு காரணமாக ரவூப் ஹக்கீம் அமைச்சர் பதவியிலிருந்து வலுக்கட்டாயமாக சந்திரிகாவால் வெளியேற்றப்பட்டார்.

இதனைத் தொடர்ந்து 2001இல் இடம்பெற்ற பொதுத் தேர்தலில் மு.கா. பாரிய வெற்றியைப் பெற்றது. ஆனாலும் தலைமைத்துவப் போட்டிகளும் கட்சி உட்பூசல்களும் கருத்து முரண்பாடுகளும் நாளுக்கு நாள் விஷ்வரூபம் எடுக்கத் தொடங்கின. இதன் காரணமாக ரவூப் ஹக்கீமின் தலைமைத்துவத்துக்கெதிராக அதாவுல்லா, பேரியல் அஷ்ரப், ஹிஸ்புல்லா, ஹரீஸ், ரிஷாத் பதியுதீன் மற்றும் நஜீப் ஏ. மஜீத் போன்றவர்கள் செயற்பட்டதுடன், கட்சியை விட்டும் வெளியேறி சந்திரிகாவின் அரசாங்கத்தில் அள்ளுப்பட்டுப் போனதுடன், அதாவுல்லா, ரிஷாத் பதியுதீன் இருவரும் ஆளுக்கொரு கட்சியை உருவாக்கிக்கொண்டனர்.

ஆனாலும், 2004 தேர்தலில் வெற்றிபெற்ற நான்கு மு.கா. உறுப்பினர்களையும் ஹக்கீம் வைத்துக்கொண்டு பலதரப்பட்ட சவால்களுக்கு முகங்கொடுத்தவராக அந்தக் கட்சியை தொடர்ந்தும் செயற்படுத்திக்கொண்டிருந்தாலும் அஷ்ரப்பின் மரணத்துக்குப் பின் அந்தக் கட்சி செல்லாக்காசாக மாறியது. 51 சதவீதமான முஸ்லிம்களின் ஆதரவுடன் ஹக்கீமின் சிறந்த ஆளுமை, விடாமுயற்சி, கடின உழைப்பு, தன்னம்பிக்கை போன்ற அவரது அயராத போராட்டத்தின் காரணமாக அக்கட்சி சிறப்புற்று விளங்கியபோதும் அக்கட்சியின் தலைமைத்துவத்தை ஏற்றதிலிருந்து இன்றுவரை அவர் மீது பலதரப்பட்ட குற்றச்சாட்டுகள் பலராலும் சுமத்தப்பட்டு வருவதைக் காண்கின்றோம்.

இக்கட்சியிலிருந்து சிலர் விலகிச் செல்வதும் பின்னர் வந்து சேர்வதும் போன்ற நிகழ்வுகளும் ஆங்காங்கே இடம்பெறுவதுடன், இந்த விகிதாசார தேர்தல் முறைமையானது சிறுபான்மையினர்களுக்குச் சாதகமாகக் காணப்பட்டாலும் விருப்பு வாக்குப் பெறுவதில் ஒரே கட்சியைச் சார்ந்த வேட்பாளர் களுக்கிடையே வெட்டுக்குத்துகளும் அடாவடித்தனங்களும் கடும் போட்டி பொறாமை, தூசித்தல், வசைபாடுதல், வேட்பாளர்களின் இல்லங்கள் மீதான தாக்குதல்கள், பழிதீர்த்தல் போன்ற ஜனநாயகத்துக்கு மாற்றமான செயற்பாடுகள் பொதுத் தேர்தல், மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் இடம்பெறுவதைக் காணலாம்.

இந்த முஸ்லிம் சமூகம் ஒன்றுபட முடியாமல் கட்சி அரசியல்களுக்குள் சங்கமமாகி துண்டு துண்டுகளாகப் பிரிந்து சின்னாபின்னமாகிப் போனதன் விளைவுதான் இன்று அக்கட்சி படிப்படியாகக் கரைந்து செல்வதற்கு பிரதான காரணமாகும். குறிப்பாக, கடந்த 2019 ஆம் ஆண்டுக்குப் பின் முஸ்லிம் கட்சிகள் முஸ்லிம் மக்களிடமிருந்து தூரமாகி செல்வாக்கை இழந்து வருவதை யாராலும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது. இவ்வாறு இந்த முஸ்லிம் சமூகம் வெறுத்து தூரமாவதற்கு பல காரணங்கள் உள்ளன.

அதாவது முஸ்லிம் கட்சித் தலைவர்களால் வழங்கப்பட்ட எத்தனையோ வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாமல் கிடப்பில் போடப்பட்டுள்ளமை, முஸ்லிம் மக்களின் வாக்குகளை மட்டும் இலக்கு வைத்து ஏமாற்று அரசியல் செய்தார்கள் என்ற குற்றச்சாட்டுகள் அண்மைக்காலமாக மிகவும் விசாலமாகவும் பரவலாகவும் பேசப்பட்டு வருகின்றமை என்பவற்றைக் கூறலாம்.

இந்நிலையிலேயே கடந்த 2019இல் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலிலும் 2020இல் இடம்பெற்ற பொதுத் தேர்தலிலும் வடக்கு, கிழக்கிலுள்ள 24 தொகுதிகளிலும் தமிழ், முஸ்லிம்களின் 95 சதவீத வாக்கை சஜித் பிரேமதாச பெற்றிருந்தார். ஆனாலும், சிங்களப் பிரதேசங்களில் சஜித் 32 சதவீத வாக்கை மட்டுமே பெற்ற நிலையிலேயே கோட்டாபயவிடம் தோல்வியடைந்தார். அதேபோன்றுதான் 2020 பொதுத் தேர்தலிலும் சஜித்தின் கட்சி 27 இலட்சம் வாக்குகளை மட்டுமே பெற்றுக்கொண்டது. முஸ்லிம் கட்சியில் போட்டியிட்டவர்கள் குறைந்த வாக்குகளோடு தெரிவுசெய்யப்பட்டனர்.

2024இல் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் வடக்கு, கிழக்கில் சஜித் போதிய வாக்குகளைப் பெறவில்லை. அத்துடன், பொதுத் தேர்தலிலும் சஜித்தின் கட்சி 17 இலட்சம் வாக்குகளையே பெற்றதுடன், முஸ்லிம் கட்சிகளும் போதிய பெரும்பான்மையைப் பெறாமல் பலர் தோல்வியடைந்தனர். குறிப்பாக, அம்பாறை மாவட்டத்தில் முஸ்லிம்களின் வாக்குகள் பிரிந்து சென்றதால் குறைந்த விருப்பு வாக்குகளால் மு.கா. சார்பில் அட்டாளைச்சேனையில் போட்டியிட்ட உதுமாலெவ்வையும் நிந்தவூரில் இ.ம.காவில் போட்டியிட்ட தாஹிரும் தெரிவுசெய்யப்பட்டனர்.

தே.ம.ச. சார்பாக சாய்ந்தமருதில் போட்டியிட்ட ஆதம்பாவாவும் தோல்வியடைந்தார். ஆனாலும், தேசியப் பட்டியலூடாக எம்.பியாக நியமனம் பெற்றார். முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான அதாவுல்லா, பைசல் காசிம், மன்சூர் ஆகியோர் தோல்வியடைந்ததுடன், கல்முனையில் ஹரீஸ் போட்டியிடாத நிலையில், மு.கா., இ.ம.கா. போன்ற கட்சிகளில் போட்டியிட்ட சிராஸ் மீராசாஹிப், நிஸ்லி முஸ்தபா, ரகுமத் மன்சூர் போன்றவர்கள் படுதோல்வியடைந்தனர். இத்தேர்தலில் கல்முனையில் முதன்முதலாக மு.கா. தனது பிரதிநிதியை இழந்தமை குறிப்பிடத்தக்கது.

முஸ்லிம்கள் மத்தியில் உருவான கட்சி அரசியலும் ஒற்றுமையின்மையும் ஆளுக்கொரு கட்சி, ஆளுக்கொரு கொள்கை, ஆளுக்கொரு மார்க்கம், போட்டி, பொறாமை, பிரிவினைவாதம், பிரதேசவாதம் போன்றவைகளே தோல்விகளுக்கான மூல காரணங்களாக உள்ளன. ஆனாலும், மட்டக்களப்பில் மு.காவில் போட்டியிட்ட எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா தப்பிப் பிழைத்துள்ளார். இதுபோன்று திருகோணமலையிலும் இம்ரான் மஹ்ரூப் தப்பிப் பிழைத்துள்ளார்.

கொழும்பில் ஐ.ம.ச. போட்டியிட்ட முஜிபுர் ரகுமான், எஸ்.எம்.மரிக்கார் இருவரும் குறைந்த விருப்பு வாக்குகளால் தெரிவுசெய்யப்பட் டுள்ளதுடன், கண்டி மாவட்டத்தில் போட்டியிட்ட ரவூப் ஹக்கீம் 30,460 விருப்பு வாக்குகளைப் பெற்று வெற்றிபெற்ற நிலையில் எம்.எச்.ஹலீம், 24,340 வாக்குகளைப் பெற்றுத் தோல்வியடைந்தார்.

இவ்விருவரும் கடந்த 2020 பொதுத் தேர்தலில் போட்டியிட்டு ஹக்கீம் 83,620 வாக்குகளையும் ஹலீம் 77,460 வாக்குகளையும் பெற்று வெற்றிபெற்றனர். ஆனால், 2024 தேர்தலில் தேசிய மக்கள் சக்தியில் போட்டியிட்ட முஸ்லிம் வேட்பாளர்கள் கூடுதலான விருப்பு வாக்குகளைப் பெற்று 09 பேர் தெரிவாகியிருந்தனர். ஆனால், அனைவரும் புதுமுகம் என்பதால் முஸ்லிம்களின் குரலாக அல்லாமல் ஆட்சியாளர்களுக்கு சார்பாக ஆமாம் போடுபவர்களாகவே இருக்கிறார்கள் என்பதில் எந்த ஐயமுமில்லை.

ஆகவே, நடைபெற்ற தேர்தலில் ரவூப் ஹக்கீம், ரிஷாத் பதியுதீன், எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா, முஜிபுர் ரகுமான் போன்றவர்கள் தெரிவுசெய்யப்படாமல் இருந்திருந்தால் பாராளுமன்றில் முஸ்லிம்களைப் பற்றிப் பேச யாருமில்லாத ஒரு துரதிர்ஷ்டமான நிலை ஏற்பட்டிருக்கும். மேற்படி இந்த முஸ்லிம் கட்சியின் தலைவர்களாகக் காணப்படும் ஹக்கீம், ரிஷாத் பதியுதீன் மீது பல குற்றங்கள் சுமத்தப்பட்டபோதும் முஸ்லிம் சமூகத்துக்கு ஏற்படும் பிரச்சினைகளுக்கு பாராளுமன்றில் மிகவும் துணிவுடனும் தைரியமாகவும் மும்மொழிகளிலும் பேசக்கூடிய – விவாதிக்கக்கூடிய ஆளுமையும் திறமையும் ஹக்கீமிடமும் ரிஷாத்திடமும் மட்டுமே நிறைந்து காணப்படுவதுடன், மூன்றாம் நான்காம் வரிசையில் ஹிஸ்புல்லாவும் முஜிபுர் ரகுமானும் பேசக்கூடியவர்களாக உள்ளனர். அதிலும் பாராளுமன்ற அமர்வுகளில் கலந்துகொண்டு மும்மொழிகளிலும் அழகாகவும் தெளிவாகவும் எவரும் புரிந்துகொள்ளக்கூடிய விதமாக விவாதித்துப் பேசக்கூடியவர் ரவூப் ஹக்கீம் என்றால் மிகையாகாது. எது எப்படியிருந்தபோதும் ஒரு தலைமைத்துவத்தின் கீழ் ஒன்றுபட்டு ஒரு கொள்கையில் பயணிக்க முஸ்லிம் தலைவர்களோ முஸ்லிம் சமூகமோ அதற்குத் தயாரில்லாத நிலையே தொடர்கதையாகக் காணப்படுவதுடன், முஸ்லிம்களின் அரசியல் பலமானது படிப்படியாக நாளாந்தம் கரைந்துசெல்வதையும் அவதானிக்கக்கூடியதாகவுள்ளது.

இந்நிலைமை தொடருமானால் முஸ்லிம்களின் அரசியல் முகவரி என்பது செல்லாக்காசாகி நடுத்தெருவில் நிற்க நேரிடுமென்பதை இந்த முஸ்லிம் சமூகம் புரிந்துகொள்ள வேண்டும். மேலும் இந்த முஸ்லிம் கட்சிகள் உருவாகிய காலம் முதல் இன்றுவரைக்கும் தலைமைத்துவ குளறுபடிகளும் உட்கட்சிப் பூசல்களும் கருத்து முரண்பாடுகளும் தொடர்கதையாகவே உள்ளன.

சிலர் கட்சியை விட்டு ஓடுவதும் மேலும் பலர் கட்சியில் இணைவதும் மேலும் பலர் புதிய கட்சியை ஏற்படுத்துவதும் தாங்கள்தான் முஸ்லிம்களின் பாதுகாவலர்களெனக் கொக்கரிப்பதுமான படலம் காணப்படுவதுடன், எந்தவொரு கொள்கைகளும் இல்லாத சுயநலவாதிகளாக செயற்படுகின்றனர். ஆனால், யார் எதைச் சொன்னாலும் இவர்கள் ஒன்றுபடப் போவதுமில்லை; ஒற்றுமையாகச் செயற்படப்போவதுமில்லை.

அத்துடன், முஸ்லிம் அரசியல்வாதிகளும் முஸ்லிம் சமூகமும் ஒன்றுபடாத நிலையில் இந்த உலகம் அழிந்தாலும் - இந்த நாட்டை யார் ஆட்சி செய்தாலும் இந்த முஸ்லிம் சமூகத்துக்கு எந்த விமோசனங்களும் கிடைக்கப்போவதில்லையென்பது திண்ணமாகும். ஆகவே, ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு என்பதுபோல எப்போது இவர்கள் ஒன்றுபடுகின்றார்களோ அன்றுதான் இந்தச் சமூகத்துக்கு விடிவு கிடைக்குமென்பதை வலியுறுத்துகின்றோம்.

***யூ.எல்.ஏ.மஜீட்,***
***சாய்ந்தமருது.***

## இன்றைய நாளில்...

- 1702 – முதலாவது ஆங்கில நாளிதழான 'த டெய்லி குராண்ட்' லண்டனில் வெளியிடப்பட்டது.
- 1812 – சேர் ரொபர்ட் பிரவுன்ரிக் பிரித்தானிய இலங்கையின் 3ஆவது ஆளுநராக நியமிக்கப்பட்டார் .
- 1902 – இலங்கையில் காங்கேசன்துறை முதல் சாவகச்சேரி வரையான 21 மைல் நீள புகையிரதப் பாதையமைக்கப்பட்டது.
- 1905 – இலங்கையில் காங்கேசன்துறை முதல் மதவாச்சி வரையான புகையிரதப் பாதையமைக்கும் பணி முடிவடைந்தது.
- 1918 – ரஷ்யாவின் தலைநகரம் பெத்ரோகிராட்டில் இருந்து மொஸ்கோவுக்கு மாறியது.
- 1983 – பாகிஸ்தான் அணுகுண்டு சோதனையை வெற்றிகரமாக பரிசோதித்தது.
- 1990 – லித்துவேனியா சோவியத்திடம் இருந்து தன்னிச்சையாக விடுதலையை அறிவித்தது.
- 2007 – தென் அமெரிக்காவின் வடகிழக்கிலுள்ள கயானா விண்வெளி ஏவுதளத்தில், ஆரியான்-5 ரொக்கெட் ஏவப்பட்டு, வெற்றிகரமாக அது இன்சாட்-4பி என்ற இந்திய செய்மதியையும் ஸ்கைநெட்-5ஏ என்ற பிரித்தானியாவின் துணைக்கோளையும் சுமந்து சென்றது.
- 2011 – ஜப்பானின் வட கிழக்குப் பகுதியில் 8.9 ரிக்டர் அளவுக்கு பெரும் நிலநடுக்கம் ஏற்பட்டு ஆழிப்பேரலையாக உருவெடுத்தது. ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்தனர். உலகின் 2ஆவது பெரிய அணு உலைப்பேரழிவும் இடம்பெற்றது.

## நக்கல் நமசிவாயம்

**தேசபந்துவை கண்டுபிடிச்சு தந்தால் சன்மானம் தருவோமென்று இன்னமும் அறிவிக்கவில்லை பாருங்கோ... பொலிஸ் காசை பொலிசுக்கு செலவழிக்க விருப்பமில்லையோ...**



## தவக்கால சிந்தனை

**தம் மகன் வழியாக உலகை மீட்கவே கடவுள் அவரை உலகுக்கு அனுப்பினார்**



அக்காலத்தில் இயேசு நிக்கதேமுக்குக் கூறியது: "பாலைநிலத்தில் மோசேயால் பாம்பு உயர்த்தப்பட்டதுபோல மானிடமகனும் உயர்த்தப்பட வேண்டும். அப்போது அவரிடம் நம்பிக்கை கொள்ளும் அனைவரும் நிலைவாழ்வு பெறுவர். தம் ஒரே மகன்மீது நம்பிக்கை கொள்ளும் எவரும் அழியாமல் நிலைவாழ்வு பெறும் பொருட்டு அந்த மகனையே அளிக்கும் அளவுக்குக் கடவுள் உலகின்மேல் அன்புகூர்ந்தார். உலகுக்குத் தண்டனைத் தீர்ப்பளிக்க அல்ல, தம் மகன் வழியாக அதை மீட்கவே கடவுள் அவரை உலகுக்கு அனுப்பினார். அவர்மீது நம்பிக்கை கொள்வோர் தண்டனைத் தீர்ப்புக்கு ஆளாவதில்லை; ஆனால், நம்பிக்கை கொள்ளாதோர் ஏற்கனவே தீர்ப்புப் பெற்றுவிட்டனர்.

ஏனெனில், அவர்கள் கடவுளின் ஒரே மகனிடம் நம்பிக்கை கொள்ளவில்லை. ஒளி உலகுக்கு வந்திருந்தும் தம் செயல்கள் தீயனவாய் இருந்ததால் மனிதர் ஒளியைவிட இருளையே விரும்பினர். இதில்தான் அவர்களுக்கு எதிரான தண்டனைத் தீர்ப்பு அடங்கியுள்ளது. தீங்கு செய்யும் அனைவரும் ஒளியை வெறுக்கின்றனர். தங்கள் தீச்செயல்கள் வெளியாகிவிடும் என அஞ்சி அவர்கள் ஒளியிடம் வருவதில்லை. உண்மைக்கேற்ப வாழ்பவர்கள் ஒளியிடம் வருகிறார்கள்.

# பெருந்தோட்டங்களில் நிலவும் ஆசிரிய வெற்றிடத்துக்கு பட்டதாரிகளை நியமிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்

## இராதாகிருஷ்ணன் எம்.பி. வலியுறுத்து



ஆசிரிய நியமனத்துக்கெதிரான வழக்கு விசாரணையை விரைவுபடுத்தி பெருந்தோட்டங்களில் நிலவும் ஆசிரிய வெற்றிடத்துக்கு பட்டதாரி ஆசிரியர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். அத்துடன், மலையகத்துக்கு தனியான பல்கலைக்கழகம் அமைக்கப்படவேண்டுமென மலையக மக்கள் முன்னணித் தலைவரும் நுவரெலியா மாவட்ட எம்.பியுமான வே. இராதாகிருஷ்ணன் வலியுறுத்தினார்.

பாராளுமன்றத்தில் நேற்று (10) உரையாற்றுகையிலேயே இவ்வாறு வலியுறுத்திய அவர் மேலும் பேசுகையில்,

''அரசாங்கம் இந்தத் தடவை வரவு - செலவுத் திட்டத்தில் கல்விக்கு அதிகளவு நிதி ஒதுக்கியுள்ளது. இந்த நிதியில் கடந்த காலங்களில் இடைநடுவில் நிறுத்திவைக்கப்பட்டிருக்கும் பாடசாலை அபிவிருத்திகள் மற்றும் ஏனைய அடிப்படை வசதி நடவடிக்கைகளைப் பூரணப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும். நல்லாட்சி அரசாங்கத்தில் அருகிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை என்ற திட்டத்துக்கு பாரியளவில் நிதி ஒதுக்கப்பட்டிருந்தபோதும் இன்னும் அதிகமான பாடசாலைகளின் பணிகள் பூர்த்திசெய்யப்படாமல் இருக்கின்றன. அந்தப் பாடசாலைகளின் பணிகள் பூரணப்படுத்தப்பட வேண்டும்.

அதேபோன்று நாட்டில் பாரியளவில் ஆசிரிய வெற்றிடங்கள் காணப்படுகின்றன. இந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கும் அரசாங்கம் விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும். குறிப்பாக, பெருந்தோட்டப் பாடசாலைகளுக்கு சந்திரிகா குமாரதுங்கவின் காலத்தில் 3,400 ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டார்கள். மஹிந்த ராஜபக்ஷவின் காலத்தில் 3,500 ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டார்கள். நல்லாட்சி அரசாங்கத்தில் 3,196 ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டார்கள். தற்போதும் 2,500 ஆசிரியர்களை நியமிக்க அமைச்சரவை அனுமதி வழங்கியிருக்கிறது. என்றாலும், வழக்கொன்று காரணமாக அது நிறுத்தப்பட்டிருக்கிறது. அதனால் இந்த வழக்கு விசாரணையை விரைவுபடுத்தி இந்த ஆசிரியர்களுக்கான நியமனங்களை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அத்துடன், பெருந்தோட்டங்களிலிருந்து பல்கலைக்கழகங்களுக்கு 1.5 வீத மாணவர்கள் செல்ல வேண்டும். ஆனால், 0.5 வீதத்தினரே செல்கின்றனர். பல்கலைக்கழகங்களுக்கான மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க உயர்தரப் பாடசாலைகள் மற்றும் கல்வி நிறுவனங்களை அபிவிருத்திசெய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும். அங்குள்ள பாடசாலைகளுக்கு பட்டதாரி ஆசிரியர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும். நான் கல்வி இராஜாங்க அமைச்சராக இருக்கும்போது இந்தியாவிலிருந்து பட்டதாரி ஆசிரியர்களைக் கொண்டுவர நடவடிக்கை எடுத்தபோது அதனை முதலில் மக்கள் விடுதலை முன்னணியே எதிர்த்தது. அதனால் தற்போது இதனை நீங்கள் செய்ய வேண்டும்.

ஆசிரிய பயிற்சிக் கல்லூரி, தேசிய கல்வியியல் கல்லூரி அபிவிருத்தித் திட்டங்களுக்காக அரசாங்கம் 2இலட்சத்து 21ஆயிரம் மில்லியன் ரூபாவை ஒதுக்கியிருக்கிறது. இந்த நிதி ஒதுக்கீடுகள் ஊடாக அங்கு காணப்படும் குறைபாடுகள் நீக்கப்பட வேண்டும். அதேபோன்று, தேவையான ஆசிரியர் பயிற்றுனர்களை நியமிக்க வேண்டும். கொட்டகலை ஆசிரிய பயிற்சிக் கல்லூரி நிர்மாணப்பணிகள் பாதியளவில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றன. அதனைப் பூர்த்திசெய்ய வேண்டும்.

நாட்டில் 424 பாடசாலைகளில் மலசலகூட வசதி மற்றும் குடிநீர் வசதி இல்லை. மாணவர்களின் அடிப்படை வசதிகளைப் பூர்த்திசெய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். அதேபோன்று, மலையகத்துக்கு தனியான பல்கலைக்கழகம் அமைக்கப்படவேண்டுமென அனைத்து அரசாங்கங்களிடமும் தெரிவித்திருக்கிறோம். ஆனால், அது சாத்தியப்படவில்லை. மலையகத்துக்கென பல்கலைக்கழகங்கள் இருக்கின்றன. ஆனால், நாங்கள் எதிர்பார்ப்பது தமிழர்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற வகையில் பல்கலைக்கழக கல்லூரி உருவாக்கப்பட வேண்டுமென்பதே. அதற்காக காணியும் ஒதுக்கப்பட்டிருக்கிறது'' -என்றார்.

# தாயுடன் உறக்கத்திலிருந்த 3 மாத குழந்தை இறந்த நிலையில் மீட்பு

**(வவுணதீவு செய்தியாளர்)**

மட்டக்களப்பு, நாவற்காடு கிராமத்திலுள்ள வீட்டில் தாயுடன் உறக்கத்திலிருந்த குழந்தை இறந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளதாக வவுணதீவு பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு, வவுணதீவு பொலிஸ் பிரிவிலுள்ள நாவற்காடு, இறக்கத்துமுனை பகுதியில் பிறந்து மூன்று (03) மாதங்களேயான குழந்தை நேற்று முன்தினம் (09) தாயாரிடம் பால் அருந்திவிட்டு குழந்தையும் தாயும் தமது வீட்டில் உறங்கியுள்ளனர். மறுநாள் திங்கட்கிழமை (10) அதிகாலை குழந்தைக்கு பால் கொடுப்பதற்காக எழுப்பியபோது குழந்தை மூச்சுச் சுவாசம் இல்லாமல் இருந்துள்ளது. உடனடியாக வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டபோது குழந்தை ஏற்கனவே இறந்துவிட்டதாக வைத்தியர் தெரிவித்துள்ளார்.

வவுணதீவு பொலிஸாரின் வேண்டுகோளுக் கமைய மட்டக்களப்பு போதனா வைத்திய சாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி தம்பிப்பிள்ளை தவக்குமார் சம்பவ இடத்துக்குச் சென்று மரண விசாரனைகளை மேற்கொண்டு சடலத்தை பிரேத பரிசோதனைக்கு பணித்தார்.

இச்சம்பவம் தொடர்பாக வவுணதீவு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# முதலீட்டுக்கு உகந்த இடம் இலங்கை என்பதை உலகுக்கு எடுத்துக்காட்டுவதில் பங்காளராவதே எனது எதிர்பார்ப்பு

## அமெரிக்க பாடகர் அலோ பிளெக் தெரிவிப்பு






முதலீட்டுக்கு ஒரு கவர்ச்சிகரமான இடம் இலங்கை என்பதை உலகுக்கு எடுத்துக்காட்டுவதில் ஒரு பங்காளராக இருக்க விரும்புவதாக அமெரிக்க பாடகர் அலோ பிளெக் தெரிவித்தார்.

இசைக்கு அப்பால் பரந்துபட்ட மிக முக்கிய மைல்கல்லைக் குறிக்கும் வகையில், சர்வதேச அளவில் புகழ்பெற்ற பாடகர், பாடலாசிரியர் மற்றும் தொழில்முனைவோர் அலோ பிளெக் (Aloe Blacc) மூன்று நாள் விஜயம் மேற்கொண்டு நேற்றுக் காலை (10) இலங்கைக்கு வருகை தந்தார்.

பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துக்கான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் பேராசிரியர் கோமிகா உடுகமசூரிய மற்றும் இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகத்தின் அதிகாரிகள் ஆகியோர் அலோ பிளெக்குக்கு அமோக வரவேற்பளித்தனர்.

பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்ட பிளெக், முதலீட்டுக்கு ஒரு கவர்ச்சிகரமான இடம் இலங்கை என்பதை உலகுக்கு எடுத்துக்காட்டுவதில் ஒரு பங்காளராக இருக்க விரும்புவதாகவும் இலங்கை அரசாங்கத்துடனும் தேசிய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தித் திட்டத்துக்கான ஆரம்பகட்ட திட்டங்களுடன் ஒத்துழைப்புடன் செயற்பட இது சிறந்த வாய்ப்பு எனவும் கூறினார்.

தற்பொழுது காணப்படும் மற்றும் புதிய நிறுவனங்கள் ஆகிய இரு பிரிவுகளும் உள்ளடங்கியதாக இலங்கையில் மேற்கொள்ளப்படும் பல்வேறு முதலீடுகள் மற்றும் அபிவிருத்தியடைந்துவரும் புதிய கருத்துகளை மேற்பார்வை செய்யச் சந்தர்ப்பம் கிடைத்திருப்பது மிகவும் தனித்துவமானதென்றும் அமெரிக்காவிலும் உலகெங்கிலுமுள்ள பல முதலீட்டாளர்களுடன் தான் மிக நெருக்கமான உறவுகளைக் கொண்டிருப்பதாகவும் இலங்கையில் காணப்படும் மூலங்கள் குறித்து அவர்களுடன் கலந்துரையாடத் தான் எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.அவரின் 'I Need a Dollar' (ஐ நீட் எ டொலர்) மற்றும் 'Wake Me Up'(வேக் மீ அப்) போன்ற பாடல்கள் உலகளவில் மிகவும் பிரபலமான பாடல்களாகும். அலோ பிளெக்கின் எமது நாட்டுக்கான வருகை உயிரியல் தொழில்நுட்பம், சுகாதார சேவை புத்தாக்கம் மற்றும் தொழில்முனைவு ஆகியவற்றில் அவர் கொண்டுள்ள ஆர்வத்தைப் பிரதிபலிக்கிறது.

இலங்கையில் மூன்று நாள் தங்கியிருக்கும் அவர், உள்ளூர் தொழில்முனைவோர் மற்றும் கலைஞர்களைச் சந்தித்து கலாசார மற்றும் அறிவியல் துறைகளில் ஒத்துழைப்புகளை மேம்படுத்தவுள்ளார்.இந்த விஜயத்தின் போது அவர் ஜனாதிபதி செயலகத்தின் சிரேஷ்ட அதிகாரிகளுடன் பல கலந்துரையாடல்களை நடத்தவுள்ளதோடு இலங்கை கறுவா, மரமுந்திரிகை உற்பத்திகள், தெங்கு சார்ந்த பொருட்கள், சேதனப் பொருட்கள், சக்திதரும் இயற்கை பானங்கள், உணவு மற்றும் விவசாயம் ஆகியவற்றில் நிபுணத்துவம் பெற்ற உள்ளூர் தொழில்முனைவோரையும் சந்திக்க வுள்ளார். இது தவிர, அலோ பிளெக் உயிரியல் தொழில்நுட்ப நிபுணர்களுடனும் முதலீட்டாளர் மாநாடுகளிலும் பங்கேற்கவிருக்கிறார். மேலும் புகழ்பெற்ற இசைக்கலைஞர்கள் மற்றும் புத்தாக்குநர்களுடன் பல சந்திப்புகளிலும் அவர் பங்கேற்கவுள்ளார். சிகிரியா, மின்னேரியா உள்ளிட்ட கலாசார முக்கியத்துவம் வாய்ந்த இடங்களையும் பார்வையிடத் திட்டமிடப்பட்டுள்ளது.




***திருச்சியிலிருந்து வெளிவரும் இனிய நந்தவனம் சஞ்சிகையின் சர்வதேச மகளிர் தின விழா நேற்று (10) சென்னை விஜயா பாக் ஹோட்டல் மண்டபத்தில் நடைபெற்றது. இதன்போது வெளியிடப்பட்ட நந்தவனம் சஞ்சிகையின் பெப்ரவரி மாதத்துக்கான இதழின் முதல் பிரதியை இலங்கையிலிருந்து விழாவில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட இலக்கியப் புரவலர் ஹாஷிம் உமர் பெற்றுக்கொண்டார். இந்நிகழ்வில் தினகரன் பிரதம ஆசிரியர் தே. செந்தில்வேலவரும் கலந்து கொண்டார்.***

## தினசரி பலாபலன்கள்

**குரோதி வருடம் மாசி மாதம் 27ஆம் நாள் செவ்வாய்க்கிழமை**

**மேஷம்:** திட்டமிட்ட காரியங்கள் அனைத்தும் மந்த நிலையை அடையும். வாய்ப் பேச்சால் வீண் பிரச்சினைகள்.

**ரிஷபம்:** கூட்டு வியாபாரத்தில் அதிக இலாபம். தடைப்பட்ட திருமணத் திகதி உறுதிப்படுத்தப்படும்.

**மிதுனம்:** நினைத்த காரியத்தில் வெற்றி கிட்டும். நோய்,கடன், எதிரி இவை எதுவுமே உங்களை இன்று பாதிக்காது.

**கடகம்:** புத்திரர்களால் செலவுகளும் கவலையும் ஏற்படும். மனதைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக்கொள்ளுங்கள்.

**சிம்மம்:** எதிர்பாராத விபத்துகள் ஏற்படலாம். வீடு, வாகனம் விற்பது வாங்குவதில் கவனம் வேண்டும்.

**கன்னி:** நீங்கள் கேட்காமலே நண்பர்களின் உதவிகள் கிடைக்கும். துணிச்சலால் அனைத்தையும் வெற்றி கொள்வீர்கள்.

**துலாம்:** குதர்க்கமான பேச்சால் அவமானம், அபகீர்த்திகள் ஏற்படும். குடும்பத்தில் குழப்ப நிலைகள் உருவாகும்.

**விருச்சிகம்:** குடும்பத்தில் மங்கள காரியங்கள் நடைபெற்று மகிழ்ச்சி பிறக்கும். நோயிலிருந்து விடுதலை அடைவீர்கள்.

**தனுசு:** தேவையற்றவர்களின் நட்பால் தொல்லைகள் உருவாகும். உணவு, உறக்கம் தேடிப் போனாலும் கிடைக் காது.

**மகரம்:** தொழில் வியாபாரத்தில் அதிக இலா பங்களைப் பெறுவீர்கள். எதிர்பாராத தன வரவால் மகிழ்ச்சியடைவீர்கள்.

**கும்பம்:** தொழில் மூலமாகப் பதவியுயர்வுகள், சம்பள உயர்வுகள் அமையும். புதிய பதவிகள் வந்து சேரும்.

**மீனம்:** பூர்வீக சொத்துகளால் வில்லங் கம் ஏற்படும். தந்தைக்கும் உங்க ளுக்குமிடையிலான உறவு பாதிக் கப்படும்.

**திதி:** துவாதசி மு.ப.8.14 வரை பின் திரயோதசி
**நட்சத்திரம்:** ஆயிலியம் பி.இ. 2.15 வரை பின் மகம்
**பிறை:** வளர்பிறை
**யோகம் :** சித்த யோகம் பி.இ.2.15 வரை பின் மரண யோகம்
**வார சூலை:** வடக்கு திசை நோக்கி சுப காரியம் கூடாது.
**நல்ல நேரம்:** காலை- 8.18 – 9.18 மணி வரை பகல்- 12.18 – 1.18 மணி வரை மாலை- 4.52– 6.52 மணி வரை
**ராகு காலம்:** 3.18 – 4.48 மணி வரை
**எமகண்டம் :** 9.18–10.48மணி வரை
**குளிகை** :12.18 – 1.48 மணி வரை
**சந்திராஷ்டமம்:** தனுசு-மகர ராசியினர் எச்சரிக்கையாக செயற்படவும். (பின்னிரவு 2.15 வரை தனுசு ராசியினருக்கு)

**அதிர்ஷ்ட தாராபலனுடைய நட்சத்திரங்கள்**
**இன்று பின்னிரவு 2.15 மணி வரை**
அஸ்வினி, பரணி, ரோஹிணி, திருவாதிரை, பூசம், மகம், பூரம், அஸ்தம், சுவாதி, அனுஷம், மூலம், பூராடம், திருவோணம், சதயம், உத்திரட்டாதி
இன்று பின்னிரவு 2.15 மணிக்கு மேல்
பரணி, கார்த்திகை, மிருகசீரிடம்,புனர்பூசம், ஆயிலியம், பூரம், உத்திரம், சித்திரை,விசாகம்,கேட்டை,பூராடம், உத்திராடம்,அவிட்டம்,பூரட்டாதி, ரேவதி

**போன்ற நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு தொழில், வியாபார இலாபங்கள்,கல்விச் சிறப்பு, திடீர் தன அதிர்ஷ்டம், உடல் ஆரோக்கியம், போட்டி, தேர்வுகளில் வெற்றி, தெய்வ அனுக்கிரகம் அனைத்தும் சித்திக்கும்.**

**விஷேட தினம்:** **பிரதோஷ விரதம்**

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**



**(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்) ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம். தொலைபேசி : 077-0525325 078-6759739**




**எவரேனும் நோயாளியாகவோ அல்லது பயணத்திலோ இருந்தால் வேறு நாட்களில் அந்த நோன்பை நோற்க வேண்டும். எனினும், நோன்பு நோற்பதை கடினமாகக் காண்பவர்கள் அதற்கு பகரமாக ஒரு மிஷ்கீனுக்கு (ஏழைக்கு) உணவளிக்க வேண்டும். எவரேனும் தாமாகவே அதிகமாகக் கொடுக்கிறாரோ அது அவருக்கு நல்லது. ஆயினும், நீங்கள் நோன்பு நோற்பது உங்களுக்கு நன்மையாகும். (சூரத்துல் பகரா 134)**

**ரமழான் உடைய காலத்தில் நாங்கள் நோய்வாய்ப்பட்டால் அல்லது ஆகுமான பிரயாணங்கள் காரணமாக எங்களால் நோன்பு நோற்பதற்கு முடியாமல் போனால் வேறு ஒரு நாளில் அந்த நோன்பை நோற்க வேண்டும். எனினும், நோன்பு நோற்க முடியாது கடுமையான நோய், முதுமை போன்ற காரணமுடையவர்கள் நாங்கள் அன்றாடம் சாப்பிடும் உணவை ஒரு ஏழைக்கு வழங்குவதன் மூலம் அந்த நோன்புக்குப் பரிகாரமாக அமைந்துவிடும்.**

**(தொழுகை நேரங்கள்)**
**(10ஆம் திகதி முதல் 13ஆம் திகதிவரை)**

| | | |
|---|---|---|
| சுபஹ் | - | 5.04 |
| சூரிய உதயம் | - | 6.20 |
| ழுஹர் | - | 12.22 |
| அஸர் | - | 3.38 |
| மஃரிப் | - | 6.22 |
| இஷா | - | 7.32 |

# பஸ்- முச்சக்கர வண்டி விபத்து; இருவர் உயிரிழப்பு

## அம்பேபுஸ்ஸவில் சம்பவம்



கொழும்பு-கண்டி பிரதான வீதி அம்பேபுஸ்ஸ பகுதியில் இடம்பெற்ற விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

முச்சக்கரவண்டியும் பஸ்ஸூம் மோதியதாலேயே குறித்த விபத்து இடம்பெற்றுள்ளதுடன், உயிரிழந்த இருவரும் தெல்தோட்டைப் பகுதியைச் சேர்ந்தவர்களென பொலிஸார் தெரிவித்தனர்.

முச்சக்கரவண்டியின் 29 வயதுடைய சாரதி யும் 47 வயதுடைய முச்சக்கரவண்டியில் பயணித்தவருமே உயிரிழந்தவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் பஸ் சாரதி கைதுசெய்யப்பட்டுள்ளார்.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## நாணய மாற்று வீதம் (10.03.2025)

| நாணயம் | கொள்வனவு விதம் | விற்பனை விதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 181.8663 | 191.1678 |
| கனேடியன் டொலர் | 201.4545 | 209.9980 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 39.3031 | 41.8693 |
| யூரோ | 313.8702 | 326.6820 |
| ஜப்பான் யென் | 1.9638 | 2.0417 |
| சிங்கப்பூர் டொலர் | 216.9420 | 226.8659 |
| ஸ்ரேலிங் பவுன் | 374.6694 | 388.7560 |
| சுவிஸ் பிரான்ங் | 328.8019 | 344.0756 |
| ஐ.அ. டொலர் | 291.2530 | 299.7924 |

| நாடு | நாணயம் | விற்பனை விதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 783.7659 |
| குவைட் | குவைட் தினார் | 959.1560 |
| ஓமான் | ஓமான் றியால் | 767.4793 |
| கட்டார் | கட்டார் றியால் | 81.0667 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 78.7579 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 80.4498 |

# தொழில் வன்முறையை ஒழிப்பது குறித்த ILO உடன்படிக்கை 190 ஐ இலங்கையில் அங்கீகரிக்க நடவடிக்கை

## தொழில் அமைச்சர் கலாநிதி அனில் ஜயந்த தெரிவிப்பு

தொழில் உலகில் வன்முறை மற்றும் துன்புறுத்தலை ஒழிப்பது குறித்த ILO உடன்படிக்கை 190 ஐ இலங்கையில் அங்கீகரிப்பதற்குத் தேவையான தலையீட்டை மேற்கொள்வதாகவும் ஏற்கனவே அதற்கான நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் தொழில் அமைச்சரும் பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சருமான (கலாநிதி) அனில் ஜயந்த தெரிவித்தார்.

மகளிர் தினத்தையொட்டி மார்ச் 08 ஆம் திகதி, பாராளுமன்ற உறுப்பினர் ரோஹினி குமாரி விஜேரத்னவால் பெண் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றியத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி கொண்டுவரப்பட்ட சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில் பதில் வழங்கி உரை நிகழ்த்தும்போதே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார்.



அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் ,

''வன்முறை மற்றும் துன்புறுத்தல் அற்ற தொழில் உலகுக்காக அரசாங்கம் அர்ப்பணிக்கிறது. அதற்கமைய, சர்வதேச தொழிலாளர் அமைப்பின் இலங்கைப் பிரதிநிதியுடன் இதற்கு முன்னர் இடம்பெற்ற இரண்டு கலந்துரையாடல்களில் இது தொடர்பில் கலந்துரையாடப்பட்டது. அதற்கமைய தொழில் உலகில் வன்முறை மற்றும் துன்புறுத்தலை ஒழிப்பதற்கு அனைவரினதும் ஒத்துழைப்பை எதிர்பார்க்கிறோம்'' – என்றார்.

2025.03.08 ஆம் திகதி பி.ப. 6.00 மணி முதல் 6.30 மணி வரை இடம்பெற்ற இந்த விவாதத்தில் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர் ILO உடன்படிக்கை 190 இன் முக்கியத்துவம் தொடர்பில் கருத்துத் தெரிவித்தனர்.

பாலின அடிப்படையிலான வன்முறை மற்றும் துன்புறுத்தல் அற்ற தொழில் உலகுக்காக அனைவருக்கும் காணப்படும் உரிமையைக் கண்டறிந்து 2019 ஜூன் 21 ஆம் திகதி சுவிட்சர்லாந்து ஜெனீவாவில் சர்வதேச தொழிலாளர் சம்மேளனத்தின் 108 ஆவது அமர்வில் தொழில் உலகில் வன்முறை மற்றும் துன்புறுத்தலை ஒழிப்பது குறித்த ILO உடன்படிக்கை 190 அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

இந்த உடன்படிக்கையை அங்கீகரிக்கின்ற ஒவ்வொரு உறுப்பினரும் வன்முறை மற்றும் துன்புறுத்தலின்றி சகலரும் செயற்படக்கூடிய உரிமையைப் பாதுகாக்கும் சூழலை உருவாக்குவதற்கு அர்ப்பணித்து செயற்படுவதை உறுதிப்படுத்துகின்றது. இந்த உடன்படிக்கையை அங்கீகரிப்பதன் மூலம் வன்முறை மற்றும் துன்புறுத்தல் அற்ற தொழில் உலகுக்கான அரசங்கத்தின் அர்ப்பணிப்பை உறுதிப்படுத்துவதுடன், அது சம்பந்தப்பட்ட சட்டரீதியான அமுல்படுத்தல்களுக்கான நடவடிக்கையை எடுக்கவேண்டுமெனவும் விவாதத்தில் கருத்துத் தெரிவிக்கப்பட்டது. அதற்கமைய, இந்த உடன்படிக்கையை இலங்கையில் அங்கீகரிப்பதற்கு இதுவரை நடவடிக்கை எடுக்காமை காரணமாக இலங்கையின் பெண்கள் உள்ளிட்ட அனைவரும் அந்தச் சந்தர்ப்பத்தை இழந்துள்ளதாக அவர்கள் சுட்டிக்காட்டினர்.

# சிங்கமலைக் காட்டுப் பகுதியில் தீப்பரவல்

## ஹட்டன் மக்களுக்கு குடிநீர்த் தட்டுப்பாடு ஏற்படும் அச்சம்



(நோட்டன் பிரிட்ஜ் நிருபர்)

ஹட்டன் சிங்கமலை காட்டுப் பகுதியில் ஏற்பட்ட காட்டுத்தீயினால் பல ஏக்கர் காடு நாசமாகியுள்ளதாக ஹட்டன் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஹெட்லி தோட்டத்தின் வனப் பகுதியில் நேற்று முன்தினம் (09) இரவு ஏற்பட்ட தீயே சிங்கமலை வனப்பகுதியில் பரவியது.

சிங்கமலை வனப்பகுதியானது ஹட்டன் நகருக்கு நீர் வழங்கும் பிரதான வனப்பகுதியாகும். இவ்வாறான தீப்பரவல் தொடர்வதால் குடிநீர்த் தட்டுப்பாடு ஏற்படும் நிலை உருவாகுமென நகர மக்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

இந்த வனப்பகுதியிலிருந்தே ஹெட்லி மற்றும் சலங்கத்தை பகுதிகளில் அமைந்துள்ள பல பெருந்தோட்டங்கள் மற்றும் டிக்கோயா, ஹட்டன் பகுதியில் அமைந்துள்ள ஆயிரக்கணக்கான குடும்பங்களுக்கு குடிநீர் பெறப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

மிக அடர்ந்த காடு என்பதாலும் வரண்ட காலநிலை காரணமாகவும் மிக வேகமாக தீ பரவியதால் பல ஏக்கர் காடு எரிந்து நாசமாகியதாக ஹட்டன் வனப்பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்தனர்.

இனந்தெரியாத விஷமிகளால் தீ வைக்கப்பட்டிருக்கலாமென சந்தேகிக்கும் பொலிஸார் காடுகளுக்கு தீ வைப்போர் தொடர்பில் அறியத்தருமாறும் பொது மக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

# ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி யாழில் மாத்திரம் கூட்டாகப் போட்டி

## ஏனைய இடங்களில் அங்கத்துவ கட்சிகளுடன் இணைந்து போட்டி

### செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. தெரிவிப்பு

(ஜோசப் நயன்)



உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் யாழ். தேர்தல் தொகுதியில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான சரவணபவன் மற்றும் சந்திரகுமார் ஆகியோரின் கட்சிகளுடனும் வடக்கு,கிழக்கில் ஏனைய இடங்களில் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி அங்கத்துவக் கட்சிகளுடனும் இணைந்து போட்டியிடவுள்ளதாக ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினரும் ரெலோ இயக்கத்தின் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

மன்னாரில் உள்ள அலுவலகத்தில் நேற்று (10) மதியம் இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வடக்கு, கிழக்கில் உள்ள அனைத்து சபைகளிலும் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போட்டியிடவுள்ளது.

யாழ்ப்பாணத்தில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான சரவணபவன் மற்றும் சந்திரகுமாரின் கட்சிகளுடன் இணைந்து போட்டியிடவுள்ளோம். ஏனைய இடங்களில் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பாக அதன் அங்கத்துவ கட்சிகளுடன் இணைந்து போட்டியிடவுள்ளோம்.அதற்கான கட்டுப்பணத்தைச் செலுத்த நடவடிக்கை மேற்கொண்டு வருகிறோம்.

ஒட்டுமொத்தமாக ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அனைத்து சபைகளிலும் போட்டியிடும்.

மன்னார் பிரதேச சபைக்கான தேர்தல் தொடர்பாக நீதிமன்றத்தில் இடம்பெறும் வழக்கு விசாரணை மீள பெற்றுக்கொள்ளப்படும் பட்சத்தில் அதற்கான தேர்தல் அறிவிக்கப்படும் சந்தர்ப்பம் உள்ளது. எனவே, மன்னார் பிரதேச சபைத் தேர்தலில் போட்டியிட நாங்கள் தயாராகவவுள்ளோம்.

ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சிகள் மாத்திரமே கூட்டாக இத் தேர்தலில் போட்டியிடவுள்ளன.

அண்மையில் 9 கட்சிகள் இணைந்து ஒரு கலந்துரையாடல் மத்திரமே முன்னெடுக்கப்பட்டது. எனினும், 9 கட்சிகளும் இணைந்துள்ளன என்று தெரிவிக்கவில்லை. 9 கட்சிகளும் இணைந்து கலந்துரையாடலை மாத்திரமே முன்னெடுத்தன.

எனினும், இக்கூட்டு யாழ்ப்பாணத்தில் மாத்திரமே அமையவிருக்கின்றது. முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரனின் கட்சி தனித்துப் போட்டியிடவுள்ளது. ஐங்கரநேசனின் கட்சி தனித்துப் போட்டியிடுகின்றதா இல்லையா என்று தெரியவில்லை. எனினும், இந்த அணியிலிருந்து விலகியுள்ளதாக அறிவித்துள்ளார்.

யாழ். தேர்தல் தொகுதியில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான சரவணபவன், சந்திரகுமார் ஆகியோரின் கட்சிகளுடன் இணைந்து போட்டியிடவுள்ளோம்.ஏனைய இடங்களில் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி அங்கத்துவக் கட்சிகளுடன் இணைந்து போட்டியிடவுள்ளோமெனவும் தெரிவித்தார்.

# பிள்ளைகள் இளம்பராயத்தை அனுபவிக்க ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சை தடை

## ஹர்ஷன ராஜகருணா எம்.பி. சுட்டிக்காட்டு



ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சைக்கான தயார்படுத்தல்கள் பிள்ளைகள் இளம்பராயத்தை அனுபவிப்பதற்கு தடையாகவுள்ளன. எனவே, இவ்விடயத்தில் அரசாங்கம் கொள்கை ரீதியில் உறுதியான தீர்மானத்தை எடுக்க வேண்டுமென்று ஐக்கிய மக்கள் சக்தியின் கம்பஹா மாவட்ட எம்.பி. ஹர்ஷன ராஜகருணா தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று (10) இடம்பெற்ற 2025ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தின் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் பேசுகையில்,

''ஆரம்பப் பிரிவுப் பாடசாலைகள் ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சையை இலக்காகக் கொண்டதாகவே காணப்படுகின்றன . பெற்றோர், ஆசிரியர்கள் மற்றும் மேலதிக வகுப்பு ஆசிரியர்கள் இந்தப் புலமைப்பரிசில் பரீட்சையை இலக்காகக் கொண்டுள்ளனர். இதனால் மாணவர்கள் பாரிய அழுத்தங்களுக்கு உள்ளாகின்றனர்.

ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் மாற்றம் ஏற்படுத்துவதாக அரசாங்கம் கூறுகின்றது. ஆனால், அது குறித்து தற்போது எதுவும் குறிப்பிடப்படவில்லை. ஒருசில தனியார் பாடசாலைகளில் ஒன்று முதல் மூன்றாம் தரம் வரை மாணவர்களுக்கு எவ்வித பரீட்சைகளும் கிடையாது. பொதுவான பாடத்திட்டங்களுடனான பயிற்சிகள் மாத்திரமே வழங்கப்படுகின்றன. பிள்ளைகள் இளம்பராயத்தை அனுபவிப்பதற்கு புலமைப் பரிசில் பரீட்சைக்கான தயார்படுத்தல்கள் தடையாகக் காணப்படுகின்றன.


பல அழுத்தங்களுக்கு மத்தியில் ஐந்தாம் தரப் பரீட்சையில் சித்தியடையும் பிள்ளைகளில் பெரும்பாலானோர் கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைவதில்லை. ஐந்தாம் தரப் பரீட்சையில் சித்தியடைந்துவிட்டதன் பின்னர் கல்வி மீதான அக்கறை இல்லாமல் போகிறது. ஆகவே, இவ்விடயத்தில் அரசாங்கம் விசேட கவனம் செலுத்த வேண்டும்.

கல்விப் பொதுத் தராதர சாதாரண தர மாணவர்களின் பாடத்திட்டம் விரிவானதாகக் காணப்படுகிறது. முழுமையாகப் பரீட்சைக்கு மாணவர்கள் தயாராகுவதால் அந்தப் பிள்ளைகளின் இதர திறமைகள் இல்லாமல் போகும் நிலை காணப்படுகிறது. ஆகவே, இவ்விடயத்தில் அரசாங்கம் கொள்கை ரீதியில் தீர்மானமெடுக்கவேண்டியது அவசியம்.

வேலையில்லாப் பட்டதாரிகள் பிரச்சினைக்கு அரசாங்கம் முறையான தீர்வைப் பெற்றுக்கொடுக்க வேண்டும். அரச பல்கலைக்கழகங்களில் நவீன போட்டித்தன்மையான தொழிற்றுறைக்கு சாதகமான வகையில் புதிய பாடத்திட்டங்களை அறிமுகப்படுத்த வேண்டும். முன்பிள்ளை பாலர் பாடசாலைகள் தொடர்பில் விசேட கவனஞ்செலுத்த வேண்டும். ஏனெனில், நாட்டில் அதிகளவிலான முன்பிள்ளை பாலர் பாடசாலைகள் தோற்றம் பெற்றுள்ளன. இந்தப் பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்களின் கல்வித் தகைமை கேள்விக்குள்ளாக்கப்பட்டுள்ளது. ஆகவே, பாலர் பாடசாலை தொடர்பில் உரிய கொள்கை வகுக்கப்படுவது அவசியம்''- என்றார்.

# மன்னார், பூநகரி, தெஹியத்தகண்டிய வேட்புமனுத் தாக்கல் மார்ச் 24 – 27வரை

## தேர்தல் ஆணைக்குழு அறிவிப்பு



உள்ளூராட்சித் தேர்தலுக்காக மன்னார், பூநகரி மற்றும் தெஹியத்தகண்டிய பிரதேச சபைகளுக்கான வேட்புமனுப் பத்திரங்களை மார்ச் 24 முதல் மார்ச் 27ஆம் திகதி நண்பகல் 12.00 மணி வரை தாக்கல் செய்யலாமென தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இதற்கிணங்க நேற்று (10) முதல் மார்ச் 26ஆம் திகதி நண்பகல் 12.00 மணிவரை கட்டுப்பணம் செலுத்த முடியுமெனவும் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.



# பாராளுமன்றத் தேர்தலின்போது மட்டக்களப்பில் 60 வேட்பாளர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல்

## மட்டு. உதவித் தேர்தல்கள் ஆணையாளர் சுபியான் தெரிவிப்பு




(மட்டக்களப்பு செய்தியாளர்)

பாராளுமன்றத் தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் 60 வேட்பாளர்களுக்கு எதிராக தற்போது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர் எஸ்.சுபியான் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் பங்கேற்கும் பெண்களுக்கான விழிப்புணர்வு நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை(09) மட்டக்களப்பில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் தேர்தல் சட்டங்களைப் பின்பற்றி கட்டுப்பணம் மற்றும் வேட்புமனுத் தாக்கல் என்பவற்றை உரிய நேரத்துக்கு முன்னெடுப்பதன் மூலம் தேர்தல் திணைக்களத்துக்குப் பூரண ஒத்துழைப்பை வழங்குவதன் மூலம் அமைதியான தேர்தலை நடத்தி முடிக்க சகல தரப்புகளும் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமெனவும் தேர்தல் செலவினங்கள் உரிய முறையில் பின்பற்றப்பட வேண்டுமெனவும் அவர் மேலும் கேட்டுக்கொண்டார்.

கிழக்கு மாகாணத்திலுள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்காக எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடவுள்ள பெண்கள் பலர் இதன்போது கலந்துகொண்டிருந்தனர். புதிய அரசியல்வாதிகளுக்கு அரசாங்கத்தில் முன்னெடுக்கப்பட்டுள்ள சட்டதிட்டங்கள் தொடர்பில் விளக்கமளிக்கும் வகையில் இந்த விழிப்புணர்வு செயலமர்வு நடைபெற்றது.

மன்னார் பெண்கள் அபிவிருத்தி நிறுவன நிகழ்ச்சித் திட்ட இணைப்பாளர் மகாலெட்சுமி தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் இலங்கை தேர்தல் ஆணைக்குழுவின் மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் எஸ்.அர்ச்சுதன் வளவாளராகக் கலந்துகொண்டு உள்ளூராட்சி மன்றத் தேர்தல் சட்டங்கள் தொடர்பாக விளக்கமளித்தார். செயலமர்வில் மட்டக்களப்பு, மன்னார் பெண்கள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்ட உறுப்பினர் சியாமினி மற்றும் பெண் அரசியல் பங்குபற்றுனர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

# பெரும்பாலான மாவட்டங்களில் முஸ்லிம் காங்கிரஸ் தனித்துப் போட்டி

## அமைப்பாளர் தௌபீக் அறிவிப்பு



(தம்பலகாமம் செய்தியாளர்)

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் நாடளாவிய ரீதியில் பெரும்பாலான மாவட்டங்களில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி தனித்துப் போட்டியிடுவதென தீர்மானித்துள்ளதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசிய அமைப்பாளர் எம்.எஸ்.தௌபீக் தெரிவித்தார்.

இதுதொடர்பில் நேற்று(10) ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

கடந்த 2018ஆம் ஆண்டு உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் புத்தளம் நகர சபையை வென்றெடுத்தோம். அதேபோல் இம்முறையும் இம்மாவட்டத்தில் தனித்துப் போட்டியிடவுள்ளோம். வடமாகாணத்திலும் வேட்பாளர்களைக் களமிறக்கி இத்தேர்தலில் தனித்துப் போட்டியிடவுள்ளோம் .

பெரும்பாலான மாவட்டங்களில் ஐக்கிய மக்கள் சக்தியின் உடன்பாட்டில் திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மற்றும் கொழும்பு ஆகிய மாவட்டங்களில் தனித்துப் போட்டியிடுவதென தீர்மானங்கள் எடுக்கப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# களஞ்சிய முகாமைத்துவம் தொடர்பான செயலமர்வு




(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் உத்தியோகத்தர்களுக்கான களஞ்சிய முகாமைத்துவம் தொடர்பான செயலமர்வு மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஜஸ்டினா முரளிதரன் தலைமையில் பழைய மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று திங்கட்கிழமை (10) இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி சுதர்ஷினி ஸ்ரீகாந்த்தின் மேற்பார்வையின் கீழ் மாவட்ட செயலக மற்றும் 14 பிரதேச செயலகப் பிரிவில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களின் களஞ்சிய முகாமைத்துவம் தொடர்பான அறிவாண்மையை மேம்படுத்துவதற்கு மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

மண்முனை தென்மேற்கு பிரதேச செயலகக் கணக்காளர் எம்.முகிலன் களஞ்சிய முகாமைத்துவம் தொடர்பான தெளிவூட்டல்களை வழங்கியதுடன், உத்தியோகத்தர்களால் கேட்கப்பட்ட சந்தேகங்களுக்கான தீர்வுகள் மற்றும் ஆலோசனைகளையும் இதன்போது வழங்கினார்.

அலுவலக நடைமுறையில் முக்கியமான அம்சமாகக் கருதப்படும் களஞ்சிய முகாமைத்துவத்தை சிறந்த முறையில் மேற்கொள்வதனால் வினைத்திறனான சேவைகளை மக்களுக்கு வழங்க முடிகின்றமை விசேடமாகும்.

# பாலமுனை செய்தியாளரின் தந்தை காலமானார்



'தமிழன்' பத்திரிகையின் பாலமுனை செய்தியாளர் ஐ.ஏ.சிறாஜின் தந்தை தாவுது லெவ்வை இஸ்ஸத்தீன் (வயது 78) நேற்று திங்கட்கிழமை (10) காலை பாலமுனை-03ஆம் பிரிவிலுள்ள அவரது இல்லத்தில் காலமானார்.

ஓய்வுபெற்ற கிராம சேவை உத்தியோகத்தரான ரி.எல்.இஸ்ஸதீனுக்கு ஐந்து ஆண் பிள்ளைகளும் ஒரு பெண்பிள்ளையும் உள்ளனர். இவரது ஜனாஸா நேற்றிரவு 10.30 மணியளவில் பாலமுனை பொது மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

# திண்மக்கழிவு முகாமைத்துவம் தொடர்பாக பொதுமக்களுக்கு விழிப்புணர்வு செயலமர்வு

(ஆரையம்பதி செய்தியாளர்)

திண்மக்கழிவு முகாமைத்துவம் தொடர்பாக மட்டக்களப்பு மாநகர சபை எல்லைக்குட்பட்ட பொதுமக்களுக்கு விழிப்புணர்வூட்டும் செயலமர்வொன்று மட்டக்களப்பு மாநகர சபையின் நகர மண்டபத்தில் நேற்று (10) இடம்பெற்றது.




மட்டக்களப்பு மாநகர ஆணையாளர் என்.தனஞ்சயன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், மாநகர சபையின் நிர்வாக உத்தியோகத்தர், மாநகர சபையின் பொறியியலாளர், கணக்காளர், கால்நடை வைத்தியதிகாரி உட்பட வளவாளர்களாக பல்கலைக்கழக மாணவர்களும் கலந்துகொண்டனர்.

பொதுமக்களின் வீடுகளில் சேரும் கழிவுப்பொருட்களை எவ்வாறு சேதனைப்பசளையாக்குவது, வீடுகளில் சேரும் கழிவுப்பொருட்களை எவ்வாறு தரம் பிரித்து வழங்குவது தொடர்பாகவும் திண்மக் கழிவு முகாமைத்துவத்தின்போது ஏற்படும் சவால்கள் தொடர்பாகவும் இச்செயலமர்வில் விழிப்புணர்வு கருத்துரைகள் நிகழ்த்தப்பட்டன.

இக்கருத்தரங்கின் நிறைவில் வீட்டில் சேரும் கழிவுப்பொருட்களைக்கொண்டு சேதனைப்பசளையை உற்பத்தி செய்வதற்கான உபகரணங்கள், தெரிவுசெய்யப்பட்ட 20 பேருக்கு மாநகர ஆணையாளரால் வழங்கப்பட்டது.

மட்டக்களப்பு மாநகரத்தின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கழிவுப்பொருட்கள் சேர்வதைக் குறைப்பதற்காகவே பொது மக்களுக்கு இவ்விழிப்புணர்வு செயலமர்வு நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.




சர்வதேச மகளிர் தின நிகழ்வு பிரதேச செயலாளர் ஆர்.திரவியராஜ் தலைமையில் ஆலையடிவேம்பு பிரதேச செயலகத்தில் ஞாயிற்றுக் கிழமை(09) இடம்பெற்றது. இதன்போது பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், பாடசாலை அதிபர்கள், வைத்தியர்கள், நிர்வாக உத்தியோகத்தர்கள், பெண் சாதனையாளர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

(திருக்கோவில் மேலதிக செய்தியாளர்)

# பொத்துவில் ஆதார வைத்தியசாலைக்கு சுகாதார அமைச்சின் செயலாளர் விஜயம்



(ஒலுவில் செய்தியாளர்)

சுகாதார அமைச்சின் செயலாளர் டாக்டர் அனில் ஜாசிங்க பொத்துவில் ஆதார வைத்தியசாலைக்கு ஞாயிற்றுக்கிழமை (09) விஜயம் செய்தார்.

விசேட அவதானிப்பு விஜயமொன்றை மேற்கொண்டிருந்த செயலாளர் வைத்தியசாலை விடுதிகளில் தங்கி சிகிச்சை பெற்றுவரும் நோயாளர்களைப் பார்வையிட்டதுடன், சீன அரசாங்கத்தின் நிதியுதவியில் நிர்மாணிக்கப்பட்டுள்ள புதிய கட்டடத்தையும் பார்வையிட்டார்.

அத்துடன், கட்டணம் செலுத்தும் விடுதி (Paying Ward), அவசர சிகிச்சைப் பிரிவு ஆகியவற்றையும் பார்வையிட்ட செயலாளர், வைத்தியசாலை அபிவிருத்தி தொடர்பில் வைத்தியசாலை அபிவிருத்திக் குழுவினருடனும் கலந்துரையாடினார்.

கட்டணம் செலுத்தும் விடுதி, அவசர சிகிச்சைக்கான பொது வைத்திய நிபுணர், சத்திர சிகிச்சை நிபுணர் உட்பட வைத்தியசாலையில் நிலவும் வெற்றிடங்களை நிரப்புதல், அறுகம்பே பிரதேசத்தில் ஆயுர்வேத மருத்துவ வசதிகளை ஏற்படுத்துதல், அம்பாறை பொது வைத்தியசாலையின் மேலதிக உதவியுடன் பொத்துவில் ஆதார வைத்தியசாலையை (Medical Tourism) உல்லாசப் பிரயாணிகளுக்கான மருத்துவ வசதி விரிவாக்கம் எனப் பல்வேறு கோரிக்கைகளை வைத்தியசாலை அபிவிருத்திக் குழுவினர் செயலாளரிடம் முன்வைத்தனர்.

அத்துடன், வைத்தியசாலை அபிவிருத்திக்கு உதவி செய்துவரும் சுகாதார அமைச்சருக்கும் இதன்போது நன்றி தெரிவித்த அபிவிருத்திக் குழுவினர், அமைச்சரைச் சந்திப்பதற்கான ஒழுங்குகளைச் செய்து தருமாறும் செயலாளரிடம் கேட்டுக்கொண்டார்.

இந்நிகழ்வில் சுகாதார அமைச்சின் உயர் அதிகாரிகள், அம்பாறை பிராந்திய பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஐ.எல்.எம்.றிபாஸ், அம்பாறை மாவட்ட பொது வைத்தியசாலையின் பணிப்பாளர் சந்திரசேன, பொத்துவில் ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் நிதின் ரணவக்க, வைத்தியசாலை அபிவிருத்திக் குழுவின் தலைவர் உவைஸ் பாரூக் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.



அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தேசிய அமைப்பாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான அஷ்ரப் தாஹிர் பொத்துவில் பிரதேச முக்கியஸ்தர்களுடன் ஞாயிற்றுக்கிழமை (09) கலந்துரையாடலொன்றை மேற்கொண்டிருந்தார். இதன்போது எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் வியூகங்கள் தொடர்பில் விரிவாக ஆராய்ந்ததுடன், கட்சியின் எதிர்கால செயற்பாடுகள் தொடர்பிலும் வேட்பாளர்கள் தெரிவு சம்பந்தமாகவும் கலந்துரையாடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (பாறுக் ஷிஹான்)


## Now you can subscribe to the below Newspapers mentioned Published by Liberty Publishers.

| Paper | Period | Cost Per Copy | No of Days | Rate |
|---|---|---|---|---|
| the daily morning | One Month | 70.00 | 22 | 1540.00 |
| | Three Month | | 64 | 4480.00 |
| | Six Month | | 129 | 9030.00 |
| | One Year | | 261 | 18270.00 |
| the sunday morning | One Month | 180.00 | 4 | 520.00 |
| | Three Month | | 13 | 2340.00 |
| | Six Month | | 26 | 4680.00 |
| | One Year | | 52 | 9360.00 |

| Paper | Period | Cost Per Copy | No of Days | Rate |
|---|---|---|---|---|
| தமிழன் | One Month | 40.00 | 22 | 880.00 |
| | Three Month | | 64 | 2560.00 |
| | Six Month | | 129 | 5160.00 |
| | One Year | | 261 | 10440.00 |
| தமிழன் | One Month | 130.00 | 4 | 520.00 |
| | Three Month | | 13 | 1690.00 |
| | Six Month | | 26 | 3380.00 |
| | One Year | | 52 | 6760.00 |

FOR MORE INFORMATION PLEASE CONTACT

Address : - The Manager Circulation
Liberty Publishers Private Limited
46/8, Dompe Road,
Kalukondayawa,Malwana.

DELIVERY FREE

Hotline :- 076 136 7623

Tel No: - 0112 127 209

# புதிய கல்வி மறுசீரமைப்பை 2026 இல் தொடங்க நடவடிக்கை; அமைச்சுசார் ஆலோசனைக் குழுவுடன் இணைந்த 06 உப குழுக்கள்

## பிரதமரும் கல்வி அமைச்சருமான ஹரிணி அமரசூரிய தெரிவிப்பு

புதிய கல்வி மறுசீரமைப்பை 2026ஆம் ஆண்டு ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகவும் 2025ஆம் ஆண்டுக்குள் அதற்கான தயார்ப்படுத்தல்கள் முன்னெடுக்கப்படும் என்றும் பிரதமரும் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சருமான (கலாநிதி) ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு பிரதமர் தலைமையில் அண்மையில் பாராளுமன்றத்தில் கூடியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் கல்வி மற்றும் உயர்கல்வி பிரதியமைச்சர் (வைத்தியர்) மதுர செனவிரத்னவும் கலந்துகொண்டார்.

புதிய கல்வி மறுசீரமைப்பு ஐந்து பிரதான தூண்களின் அடிப்படையில் நடைமுறைப்படுத்தப்படவிருப்பதாகக் குழுவின் தலைவர் குறிப்பிட்டார். இதற்கமைய, புதிய பாட நெறியை அறிமுகப்படுத்தல், மனித வளத்தை மேம்படுத்தல், உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல், பொது மக்களை விழிப்புணர்வூட்டல் மற்றும் உரிய மதிப்பாய்வு





மேற்கொள்ளல் போன்ற பிரதான விடயங்களின் கீழ் இந்தக் கல்வி மறுசீரமைப்பு தரம் ஒன்று முதல் தரம் ஆறு வரையான மாணவர்களுக்காக 2026ஆம் ஆண்டு முதல் அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவுடன் இணைந்ததாக ஆறு உப குழுக்களை அமைப்பது குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது. இதற்கமைய, கல்வி மறுசீரமைப்பு, பாடசாலைகளில் காணப்படும் பௌதீக மற்றும் மனித வளக் குறைபாடுகள், பாடசாலைகளில் இடைத்தர வகுப்புகளுக்கு மாணவர்களை அனுமதித்தல், கல்விச் சபையை நிறுவுதல், உயர்கல்விப் பிரிவு, திறன்கல்விப் பிரிவு ஆகியவற்றின் கீழ் ஆலோசனைக் குழுவுடன் இணைந்ததாக ஆறு உப குழுக்கள் அமைக்கப்படவுள்ளன.

அத்துடன், குறித்த அமைச்சு தொடர்பில் தேசிய மற்றும் மாகாண மட்டங்களில் காணப்படும் விடயங்கள் பற்றியும் இங்கு கலந்துரையாடப்பட்டது.இதற்கமைய, அமைச்சுசார் ஆலோசனைக் குழுவில் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆற்றுப்படுத்திய பிரச்சினைகளுக்குப் பதிலளித்த பிரதமர், பாடசாலைகள் மத்தியில் காணப்படும் ஏற்றத்தாழ்வுகளைக் குறைத்தல், பாடசாலைகளுக்கான உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக பாடசாலைகளுக்கு பௌதீக ஆய்வுகளை மேற்கொள்ளல், தற்பொழுது இடைநிறுத்தப்பட்டுள்ள கட்டுமானப் பணிகளுக்கு அவசியமான நடவடிக்கைகளை எடுத்தல் மற்றும் பாடசாலைகளில் காணப்படும் பாதுகாப்பற்ற சூழலைப் புனரமைத்தல் போன்றவற்றுக்காக இம்முறை வரவு - செலவுத் திட்டத்தில் கல்வித்துறைக்கான ஒதுக்கீட்டில் முன்னுரிமை அளிக்கப்படும் எனத் தெரிவித்தார்.

இக் கூட்டத்தில் அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்களின் அதிகாரிகள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

# இலங்கை தமிழரசுக் கட்சி கொழும்பில் போட்டியிடலாம்

## நண்பர்களை வரவேற்கிறேன் என்கிறார் மனோ எம்.பி.



(பு.கஜிந்தன்)

''எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தமிழரசுக் கட்சி நண்பர்கள் கொழும்பில் போட்டியிடுவது தொடர்பில் எமக்கு எந்தப் பிரச்சினையும் ஏற்படப்போவதில்லை'' என தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்தார்.

தமிழரசுக் கட்சி எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் கொழும்பில் போட்டியிடுவது தொடர்பில் பேச்சுகள் இடம்பெற்றுவரும் நிலையில், கொழும்பில் தமிழரசுக் கட்சி போட்டியிட்டால் உங்களுடைய கட்சியின் வாக்கு வங்கியில் தாக்கத்தை செலுத்துமா என கேள்வி எழுப்பியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ''தமிழரசுக் கட்சி கொழும்பில் போட்டியிடுவது தொடர்பில் எமக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை.

இலங்கையில் கட்சிகள் என்ற வகையில் எங்கு வேண்டுமானாலும் தேர்தலில் போட்டியிடலாம் ,போட்டியிடாமல் தவிர்த்துக் கொள்ளலாம்.


அந்த வகையில் தமிழரசுக் கட்சி கொழும்பில் போட்டியிடுவது அவர்களின் ஜனநாயக உரிமை. அவர்கள் எங்களுடைய நண்பர்கள். அவர்களை நான் வரவேற்கிறேன்'' என அவர் மேலும் தெரிவித்தார்.

# பேருந்து –முச்சக்கரவண்டி விபத்து; ஒரு வயது குழந்தை உட்பட மூவர் உயிரிழப்பு

(ரஸீன் ரஸ்மின்)

புத்தளம் - கற்பிட்டி, தலவில பகுதியில் இருந்து மினுவாங்கொடை பகுதியை நோக்கிச் சென்ற முச்சக்கர வண்டி ஒன்று மாதம்பை - கலஹிடியாவ பகுதியில் நேற்று முன்தினம் (09) இரவு பஸ்ஸுடன் மோதி விபத்துக்குள்ளானதில் ஒரு வயது குழந்தை உட்பட மூவர் உயிரிழந்துள்ளனர்.

இந்த விபத்தில் ராகம மற்றும் மினுவாங்கொடை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 32 வயதுடைய தாயும் அவரது ஒரு வயதுடைய மகளும் 36 வயதுடைய உறவினர் முறை பெண்ணொருவருமாக மூவரே உயிரிழந்துள்ளதாக மாதம்பை பொலிஸார் தெரிவித்தனர்.







கற்பிட்டி - தலவில தேவாலயத்தின் வருடாந்த திருவிழாவில் கலந்து கொண்ட பின்னர், மீண்டும் தலவில பகுதியிலிருந்து மினுவாங்கொடை பகுதிக்கு முச்சக்கரவண்டி ஒன்றில் சென்றுகொண்டிருந்தபோதே இந்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்து இடம்பெற்றபோது, சாரதிக்கு மேலதிகமாக குறித்த முச்சக்கரவண்டியில் சிறுவர்கள் உட்பட ஏழு பேர் பயணித்துள்ளதாக முதற்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

முச்சக்கரவண்டியில் பயணம்செய்த அனைவரும் காயமடைந்த நிலையில், சிலாபம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர், அதில் மூவர் உயிரிழந்துள்ளனர் என பொலிஸார் குறிப்பிட்டனர்.

விபத்துடன் தொடர்புடைய பஸ் சாரதி பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இந்த விபத்துச் சம்பவம் தொடர்பில் மாதம்பை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# கிரிபத்கொடை பொலிஸ் நிலைய புதிய பொறுப்பதிகாரி நியமனம்

(ஹனபி எம். தாஸிம்)

கிரிபத்கொடை பொலிஸ் நிலையத்தின் புதிய பொறுப்பதிகாரியாக பிரதான பொலிஸ் பரிசோதகர் கே.ஒஸ்மான் பத்மசிறி அபேரத்ன நியமிக்கப்பட்டுள்ளார்.

கிரிபத்கொடை பொலிஸ் நிலையத்தில் அவர் நேற்று (10) கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

இவர் முன்னர் பயங்கரவாத புலனாய்வுப் பிரிவில் பணியாற்றியுள்ளார்.

இதன்போது குற்றத்தடுப்பு புலனாய்வுப் பிரிவின் பொறுப்பதிகாரி உதவிப் பொலிஸ் பரிசோதகர் ரோஹன நந்தசிறி, ஊழல் ஒழிப்பு புலனாய்வுப் பிரிவின் பொறுப்பதிகாரி உதவி



பொலிஸ் பரிசோதகர் அசித அபேகோன் ஆகியோர் இணைந்து கொண்டனர்.

# புதையல் தோண்டிய சந்தேகநபர் கைது

(அநுராதபுரம் நிருபர்)

புதையல் தோண்டும் முயற்சியில் ஈடுபட்டிருந்த சந்தேகநபர் ஒருவரை வெலிகந்த பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கமைய வெலிகந்த பொலிஸ் பிரிவின் மஹிந்தகம பகுதியில் நேற்று முன்தினம் (09) நடத்திய சுற்றிவளைப்பின்போது சந்தேகநபரை கைதுசெய்துள்ளதுடன், புதையல் தோண்டுவதற்கு பயன்படுத்திய உபகரணங்களையும் வெலிகந்த பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர் 28 வயதுடைய அசேலபுர பகுதியை வசிப்பிடமாகக் கொண்டவர் என தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வெலிகந்த பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.







**புனித ரமழானை முன்னிட்டு அநுராதபுரம் மாவட்டத்திலுள்ள பள்ளிவாசல்களுக்கு ஐக்கிய மக்கள் சக்தியின் அநுராதபுரம் மாவட்ட அமைப்பாளரும் அக்கட்சியின் முஸ்லிம் மத விவகாரங்களுக்குப் பொறுப்பான மாவட்ட அமைப்பாளருமான ரொஷான் புகாரி பள்ளிவாசல் உலமாக்களிடம் பேரீச்சம்பழங்களை கையளித்தார்.**

(அநுராதபுரம் நிருபர்)

# ரூ.17 மில்லியன் பெறுமதியான ஹஷிஷுடன் கனேடிய பிரஜை கட்டுநாயக்கவில் கைது

இலங்கைக்கு சுமார் ரூ.17.5 மில்லியன் மதிப்புள்ள ஹஷிஷ் போதைப்பொருளை கடத்த முயன்ற 20 வயது கனேடிய பெண் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கட்டுநாயக்க விமான நிலையத்தில் சுங்க அதிகாரிகளால் இந்த கைது நடவடிக்கை நேற்று முன்தினம் (09) இரவு மேற்கொள்ளப்பட்டது.





சந்தேகநபர் மாணவி என்பதுடன், இலங்கைக்கு முதல் முறையாக வருகை தந்தமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

அவர் கனடாவின் டொரண்டோவிலிருந்து அபுதாபிக்கு சென்று அங்கிருந்து EY-396 விமானத்தில் நேற்று முன்தினம் இரவு 8.35 மணிக்கு கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு வந்தடைந்தார்.

சுங்க அதிகாரிகள் அவரது பயணப் பொதிகளுக்குள் மூன்று போர்வைகளில் மறைத்து வைக்கப்பட்டிருந்த மொத்தம் 17 கிலோ கிராம் 573 கிராம் ஹஷிஷ் போதைப்பொருளை கண்டுபிடித்தனர்.

சந்தேக நபர், பறிமுதல் செய்யப்பட்ட போதைப்பொருட்களுடன், மேலதிக விசாரணைகளுக்காக பொலிஸ் போதைப்பொருள் பணியகத்திடம் (PNB) ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

# பொலனறுவையில் மனிதப் பாவனைக்குதவாத 15ஆயிரம் லீற்றர் தேங்காய் எண்ணெய் மீட்பு



## சந்தேகநபர்கள் இருவர் கைது

பொலனறுவையில் மனித நுகர்வுக்கு பொருத்தமற்ற 15,000 லீற்றருக்கும் அதிகமான தேங்காய் எண்ணெயுடன் இரண்டு சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.


பொலனறுவை பொது சுகாதார பரிசோதகர்களும் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரும் நேற்று முன்தினம் (09) இரவு கர்மந்தபுர பகுதியில் நடத்திய சுற்றிவளைப் பின்போதே சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

தரமற்ற தேங்காய் எண்ணெயை கொண்டுசென்ற குற்றச்சாட்டில் ஒரு சந்தேகநபரும் அப்பொருட்களை வைத்திருந்த குற்றத்துக்காக மற்றையவரும் கைதுசெய்யப்பட்டார்.



இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்கள் 41 மற்றும் 51 வயதுகளையுடைய பன்னல மற்றும் சந்திவெளி பகுதிகளைச் சேர்ந்தவர்களாவர்.

7,700 லீற்றர் தரமற்ற தேங்காய் எண்ணெயுடன் 35 பீப்பாய்கள், 7,920 லீற்றர் தேங்காய் எண்ணெயுடன் 36 பீப்பாய்கள் மற்றும் பொருட்களை கொண்டுசெல்ல பயன்படுத்தப்பட்ட லொறி ஆகியவை கைப்பற்றப்பட்டன. பொலனறுவை பொது சுகாதார பரிசோதகர்கள் இதுதொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# நாவலப்பிட்டி ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானம்

# தேர்த்திருவிழா – 11.03.2025

**அருணாசலம் லெட்சுமணன்**

தென்னிந்தியாவில் பெண் தெய்வங்களில் முத்துமாரியம்மன் வழிபாடு முதன்மையானதாக விளங்கியது. இம்முத்துமாரியம்மன் வழிபாடே இலங்கைக்கு புலம்பெயர்ந்த மக்களாலும் முதன்மைப்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. மலையகத்திலும் கொற்றவை, காளி போன்ற தெய்வங்களுடன் மாரியம்மனுடன் தொடர்புபட்ட ஏனைய தெய்வங்களையும் வழிபட்டபோதிலும் மலையகத்தில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட முத்துமாரியம்மன் ஆலயங்களைக் கொண்டே வழிபடும் மரபு மேலோங்கிக் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. கிராமிய தெய்வமாகவே அனுஷ்டிக்கப்பட்டு வரும் மாரியம்மன், கருமாரியம்மன், கங்கையம்மன் என்றவாறும் அடையாளப்படுத்தப்படுகிறாள். மாரி என்றால் மழை அல்லது அம்மை நோய் எனப் பொருள்படும். அம்மை நோயைப் போக்கும் அவதாரமாகவும் மாரியம்மன் வழிபாட்டுக்குரியவளாக அமைகின்ற அதேவேளை மழையைத் தருகின்ற சக்தி படைத்தவளாகவும் அணுகப்படுவது இவ்வழிபாட்டில் சிறப்பம்சமாகிறது. வெப்ப நோயை ஏற்படுத்தி பாதிப்பை ஏற்படுத்தும் அம்மனின் கோபம் குறித்த மக்களின் நம்பிக்கையும் கவனிக்கத்தக்கதாகும்.

இருநூறு வருடங்களுக்கு முன்னர் தென்னிந்தியாவிலிருந்து புலம்பெயர்ந்த இந்திய வம்சாவளித் தமிழர்கள் மன்னார் தொடக்கம் மாத்தளையூடாக கால்நடையாக மலையகப் பிரதேசங்களுக்கு வருகை தந்தார்கள். பல சிரமங்களுக்கு மத்தியில் தப்பிப்பிழைத்தவர்கள் மாத்திரம் இலங்கையில் பெருந்தோட்டப் பொறிமுறைக்கு இரையாகி பிரித்தானியர்களுக்கும் சுதந்திர இலங்கைக்கும் செல்வத்தைப் பெற்றுக்கொடுத்தார்கள்.

அடர்ந்த காடுகளுக்கு நடுவே கால் நடையாக வருகைதந்த மக்கள் அந்தியாகும் பொழுதுகளில் உறங்கி களைப்பைப் போக்கி வந்துள்ளார்கள். இவர்களது வரவோடு நம்பிக்கைகளும் எதிர்பார்ப்புகளும் நிறைந்தே காணப்பட்டன. தெய்வ நம்பிக்கையும் அவற்றோடு தொடர்புபட்ட சம்பிரதாயங்களும் மிக முக்கியத்துவத் துக்குரியவை களாகும். தனது தாய் பூமியிலிருந்து நம்பிக்கையோடு வழிபட்ட சிலைகளையும் சிலைகளுக்கு ஒப்பான கற்களையும் எடுத்துவந்துள்ளார்கள். 'பிடிமண்' என்பது மலையக மக்களோடு சமகாலத்திலும் மிக நெருங்கிய தொடர்பையும் நம்பிக்கையையும் கொண்டுள்ளது. இப் பிடி மண்ணை பொட்டலமாக்கிய நிலையில் அதனையும் எடுத்துக் கொண்டே அவர்களது பயணம் அமைந்துள்ளது. இவ்வாறு நம்பிக்கையின் பிரவாகமாக அமைந்த சிலைகள், கற்கள், பிடிமண் பொட்டலங்கள் ஓய்வு நிறைந்த பயணத்தின் பின்னர் அவற்றைக் காவிக்கொண்டே ஒவ்வொரு நாளும் பயணத்தை மேற்கொண்டுள்ளார்கள். அவ்வாறு காலை வேளையில் பயணத்தைத் தொடங்கும்போது மேற்குறித்த நம்பிக்கை வடிவங்கள் வைத்த இடத்திலிருந்து எடுக்க முடியாத நிலைக்குட்பட்டிருக்கின்றன. அவ்வாறான இடங்களில் வருகைதந்த கூட்டத்தினரை அம்மன் இப்பிரதேசத்தில் தோட்டம் அமைப்பதற்கு ஆணை வழங்கிவிட்டாள் என்ற நம்பிக்கையில் தோட்டங்களை உருவாக்கியுள்ளார்கள். கல் அல்லது சிலை அல்லது பிடிமண் இயல்பாகவே மண்ணோடு ஒட்டிக்கொண்ட இடங்களே அம்மன் ஆலயங்களாக உருப்பெற்றன. அவ்வாறு உருவான முதலாவது ஆலயமாகவே பன்னகாமம் முத்துமாரியம்மன் ஆலயம் கருதப்படுகிறது. பன்னகாமம் எனும் தோட்டமே பின்னாளில் மாத்தளை என அழைக்கப்படுகிறது. இவ்வாலயத்தைச் சூழ தேயிலைத் தோட்டங்களும் ஆலயங்களும் இம்மாவட்டத்தில் உருவாக்கப்படுகின்றன. இவ்வாறே மலையகத்துடன் தொடர்புபடுகின்ற மாவட்டங்களில் இந்திய வம்சாவளித் தமிழர்கள் நிலைகொள்கிறார்கள்.

இக்காலத்திலேயே மாத்தளை ஊடாக கண்டியை சூழவும் நாவலப்பிட்டி வழியாகவும் குடியேற்றங்கள் ஊடுருவப்படுகின்றன. இப்புலம்பெயர்வின் முக்கிய அங்கமாக நாவலப்பிட்டி பிரதேசத்தைச் சூழ இம் மக்களின் குடியேற்றம் முக்கியத்துவம் பெற்றதாக விளங்குகிறது. நாவலப்பிட்டிக்கு அண்மையிலுள்ள கம்பளை சிங்கபிட்டியில் கோப்பி பயிர்ச்செய்கை ஆரம்பம் லூல்கந்துரவைத் தொடர்ந்து தேயிலை பயிர்ச்செய்கையின் தீவிரம் ரயில் போக்குவரத்தில் கேந்திர நிலையமாக நாவலப்பிட்டி ரயில் நிலையம் என்ற வகையில் இப்பிரதேசத்தில் மலையக மக்களது ஊடாட்டம் முக்கியத்துவம் பெறுகிறது. இந் நிலையில், இம்மக்களோடு தொடர்புபட்ட வழிபாட்டு முறையும் நம்பிக்கைகளும் மிகுந்த கவனத்தைக் கொண்டதாக அமைகிறது. இப்பிரதேசங்களில் காணப்படும் அம்மன் ஆலயங்கள் பிரதான வீதிகளுக்கருகில் அமையப்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. அவ்வாறான ஆலயங்களில் நாவலப்பிட்டி ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம், இம்புல்பிட்டி கல்லாறு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம், கடியன்லென கருமாரியம்மன் ஆலயம், கட்டபுலா ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம் மற்றும் கொலபத்தனை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம் போன்றவை குறிப்பிடத்தக்கவைகளாகும். கொலபத்தனை தோட்டத்தையடுத்து அமைந்துள்ள குயின்ஸ்பெரி தோட்டம் மலையக மக்களின் வரலாற்றோடும் வாழ்வியலோடும் ஆன்மீக நம்பிக்கையோடும் மிக நெருக்கமான தொடர்பைக் கொண்டமைந்துள்ளது. மலையகத்தோடு தொடர்பு கொண்ட ஆன்மீக அடையாளமாக நவநாதர் சித்தர் எனும் நாமம் விளங்குகிறது. நவநாதர் சித்தரின் அற்புதங்கள் மலையக மக்களின் வரலாற்றோடு தனித்துவமாக நோக்கப்படுகிறது. மாரியம்மன் வழிபாட்டுடனும் நம்பிக்கையுடன் தொடர்புபடுகின்ற தொன்மங்களோடும் நெருங்கிய தன்மையை உணர முடிகிறது.





அம்மன் வழிபாடு தொடர்பில் பல தொன்மக் கதைகள் கூறப்படுகின்றன. அவற்றுள் ரேணுகாதேவி பற்றிய தொன்மக்கதை பிரதானமாகக்கொள்ளப் படுகிறது. முத்துமாரியம்மனின் அனுக்கிரகம் தொடர்பில் நாவலப்பிட்டி குயினஸ்பெரி தோட்டத்தோடு தொடர்புபட்ட பின்வரும் தொன்மக்கதையும் கவனிக்கத்தக்கது. குயின்ஸ்பெரி பெரிய கங்காணி தென்னிந்தியாவுக்குச் சென்று பெண் தொழிலாளர்களை அழைத்து வந்துள்ளார். அவ்வாறு வந்த பெண்களில் ஒருவர் மிக அழகாகத் தென்பட்டுள்ளார். அவள் அழகில் மயங்கிய பெரிய கங்காணி, அவள் மீதுள்ள பாலியல் இச்சையை தீர்த்துக்கொள்வதற்கு பல தடவைகள் முயன்றுள்ளார். அதற்கு ஒத்துழைக்காத நிலையில் ஒருநாள் கூடையும் கம்பளியும் வழங்காது தூரத்து மலைக்கு தன்னந்தனியே அனுப்பி வைக்கின்றார். அன்றைய தினம் ஏனைய பெண்கள் ஆறு இறாத்தல் மாத்திரமே கொழுந்து பறித்துள்ள நிலையில், குறித்த அப்பெண் அறுபது இறாத்தல் கொழுந்து பறித்துள்ளாள். நிறுவை முடிந்ததன் பின்னர் அப்பெண் மலை உச்சியை நோக்கி வேகமாக நடந்துள்ளாள். அவளை கங்காணி உட்பட்ட ஏனையவர்கள் பின்தொடர்ந்துள்ளார்கள். மலையுச்சியில் வேப்பமரத்தடியில் அமர்ந்திருப்பதைக் கண்டு அப்பெண்ணுடன் பேச முயற்சி செய்துள்ளார்கள். அருகில் சென்று பார்த்த போது அப்பெண் சிலையாக மாறியுள்ளாள். இதன் பின்பே இப்பெண் மாரியம்மன் என அடையாளப்படுத்தியுள்ளார்கள். தனது தீய செயலுக்காக மனம் வருந்திய பெரிய கங்காணியும் தனது தவறை உணர்ந்து, மனம் திருந்தி அம்மனுக்கு ஆலயம் அமைத்து வழிபட்டதாகவும் நம்பப்படுகிறது.

1823ஆம் ஆண்டின் பின் ஏற்பட்ட மலையக மக்களின் புலம்பெயர்வு காலத்திலேயே நாவலப்பிட்டியில் முத்துமாரியம்மன் ஆலயம் அமைக்கப்பெற்றிருந்தமைக்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளன. குயின்ஸ்பெரி தோட்டத்தோடு தொடர்புபட்ட அம்மன் தொடர்பான தொன்மச் சான்றும் கவனிக்கத்தக்கது.

குயின்ஸ்பெரி தோட்டத்தில் நவநாத சித்தர், நாவலப்பிட்டிக்கு அருகாமையிலுள்ள குயில்வத்தை தோட்டத்தில் நாகநாத சித்தர் ஆகியோரது அபரீத செயற்பாடுகள் கவனிக்கத்தக்கவை. 1870 காலப்பகுதியில் கோயில் அமையப்பெற்றுள்ள இடத்தில் கிழக்கு முகம் பார்த்த நிலையில் கோயில் அமையப்பெற்றுள்ளது. கொரக்காவத்தை தோட்டத்தின் தொழிலாளர்களும் நகர வர்த்தகர்களும் இணைந்து அமைத்த அவ்வாலயத்துக்கு முன்னால் தற்போது காணப்படும் வைத்தியசாலை அமையப்பெற்றுள்ளது. இவ்வாலயத்தில் காணப்படும் குஷ்டரோக நோயினால் அவதியுற்ற நோயாளியொருவரை இரவு வேளையில் பயணித்த நவநாதர் சித்தர் அவரைக் கண்டு வைத்தியசாலைக்கு முன்பு இருக்கும் அம்மனின் அருளால் அது குணமாகும், என்னுடன் வாருங்கள் என குயின்ஸ்பெரிக்கு அழைத்துச் சென்றுள்ளார். அவரின் பேச்சைக் கேட்டுச் சென்ற குறிப்பிட்ட நோயாளிக்கு குயின்ஸ்பெரி செல்லும் முன்பே அவரது நோய் குணமாகியது தொடர்பில் செவிவழியாகக் கதைகள் உள்ளன.



தொள்ளாயிரம் ஆண்டின் முற்பகுதியில் சந்நியாசி ஒருவர் நாவலப்பிட்டிக்கு வருகை தந்துள்ளார். இவ்வாலயத்தின் செயற்பாடுகளில் பொறுப்பாக இருந்த அப்பாவு ஆச்சாரி, வேலு ஆச்சாரி ஆகியோரைச் சந்தித்து தான் சமயபுரத்தில் இருந்து வருவதாகக் கூறியுள்ளார். இவ் ஆலயத்தில் வழிபாட்டில் ஈடுபட்டதுடன் சமயபுரத்தில் இருந்து கொண்டு வந்த அம்மனின் திருமுகத்தை இவ்வாலயத்தில் வைத்து கொடுத்துவிட்டு தான் சுகவீனமடைந்திருப்பதால் வைத்தியசாலையில் சிகிச்சை பெறப்போவதாகக் கூறிவிட்டு சென்றுள்ளார். விக்கிரகத்துக்குரிய பூசைகளை உரியவாறு செய்ய வேண்டுமெனவும் கோரிக்கை விடுத்துள்ளார். இதற்கமைய வேலு ஆச்சாரியினுடைய வீட்டு பூஜை அறையில் வைத்து பூஜித்துள்ளார்கள். பின்னர் ஆச்சாரிகள் இருவரும் குறித்த சந்நியாசியைத் தேடி வைத்தியசாலைக்குள் சென்ற போது அவ்வாறு ஒருவர் வரவில்லை என வைத்தியசாலைத் தரப்பினர் தெரிவித்துள்ளதாக அறியக்கிடைக்கிறது. மாறாக சிகிச்சை பெற்று மீளவும் வருகைதந்து வேலு ஆசாரியின் வீட்டில் அச்சிலை பூஜிக்கப்பட்ட முறையை அவதானித்து மகிழ்ச்சியுற்று ஆலயத்தில் வைத்து பூஜை செய்யுமாறு ஆலோசனை வழங்கிச் சென்றதாகவும் கூறப்படுகிறது. எது எவ்வாறாயினும், சமயபுர அம்பாளின் அனுக்கிரகத்தால் அம்மனே இயல்பாக அருள் பாலிக்க வந்துள்ளதான நம்பிக்கை இப்பிரதேசத்தில் நிலவுகிறது. அதன் பின்னர் ஆச்சாரிகள் இருவர் உட்பட பிரமுகர்கள் இணைந்து அவ்வாலயத்தை நிரந்தரக் கட்டிடமாக அமைக்க முற்பட்டுள்ளார்கள்.



நாவலப்பிட்டி ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம் அமைந்துள்ள கொத்மலை வீதியிலுள்ள கடைகள், வீடுகள் கொடூர பிளேக் நோயினால் பாதிக்கப்பட்ட காரணத்தால் அப்பகுதியில் வசித்தவர்கள் அங்கிருந்து அப்புறப்படுத்தப்பட்டுள்ளார்கள். இவ்வாறு அப்புறப்படுத்தப்பட்டவர்கள் தற்போது ஐ.டி.எச். பிரதேசத்தில் வைத்தே பராமரிக்கப்பட்டார்கள். இப்பகுதிக்கு அக்காலத்தில் வைக்கப்பட்ட பெயரே இது வரையில் தொடர்கின்றமை குறிப்பிடத்தக்கது. அப்பகுதியில் அருகிலேயே அக்காலத்திலும் பொது மையவாடியும் அமைக்கப்படடிருந்தமை குறிப்பிடத்தக்கது. கொத்மலை வீதியில் அப்புறப்படுத்த வேண்டிய பட்டியலில் கோயில் கட்டிடமும் உள்வாங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. பணியில் ஈடுபடுத்தப்பட்டவர்கள் தயங்கினார்கள். கோயிலையும் உடைக்க வேண்டும் என்ற ஆங்கிலேய பொதுச் சுகாதார ஊழியரும் பணிக்கவே அருகில் இருந்தவர்கள் உடைக்க வேண்டாம் என மன்றாடியுள்ளார்கள். வேலையாட்கள் ஒதுங்கிய நிலையில், அப்பணியை பொதுச் சுகாதார உத்தியோகத்தரே செய்வதற்குத் துணிந்துள்ளார். அவரால் கதவு உடைக்கப்பட்ட போது பார்த்தவர்கள் அதிசயிக்கும் வகையில் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது. இரண்டு மாதமளவில் மூடிவைக்கப்பட்டிருந்த கருவறையில் காலையில் பூ வைத்து அலங்கரித்தது போன்றும் இரண்டு மாதங்களுக்கு முன்னர் ஏற்றி வைத்த விளக்கும் எரிந்துகொண்டிருந்ததைப் பார்த்து அனைவரும் வியந்துள்ளார்கள். குறித்த பொதுச்சுகாதார உத்தியோகத்தரும் கோயிலை உடைக்க வேண்டாமெனக் கூறி வழிபட்டுள்ளார்.

கிழக்கு முகம் பார்த்த நிலையில் அமையப்பெற்றிருந்த ஆலயம் 1918ஆம் ஆண்டுக்குப் பின்னரே தற்போதைய முகப்பு வாயிலை பிரதானப்படுத்தி அமைக்கப்பட்டுள்ளது. 1928ஆம் ஆண்டு முதலாவது கும்பாபிஷேகம், 1967ஆம் ஆண்டு கும்பாபிஷேகம், 1996ஆம் ஆண்டு கும்பாபிஷேகம், 2009 ஆம் ஆண்டு கும்பாபிஷேகம் என்ற வகையில் இக்காலகட்டங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. அதன் தொடர்ச்சி நிலையில் 2024.06.09 அன்றைய கும்பாபிஷேகமும் இவ்வாலய வரலாற்றில் மிகுந்த முக்கியத்துவத்தைப் பெறுகின்றது. கஜலக்ஷ்மி மண்டபத்தை நன்கொடையாக வழங்கியமை, தமிழ் கலாசார மண்டபம் அமைத்தல், அறநெறி பாடசாலைக் கட்டிடம் அமைத்தல், சித்திரத்தேர் நிர்மாணம்,ஆலயத்தை முறையாகப் பதிவு செய்தல், அறநெறிப் பாடசாலையை நடத்துதல், முறையே 1967இல், 1996இல் கும்பாபிஷேக சிறப்பு மலர் வெளியீடுகள், 2016இல் சித்திரத்தேர் நிர்மாணத்தை சிறப்புப்படுத்திய சிறப்பிதழ் வெளியீடு போன்ற செயற்பாடுகள் ஆலய வரலாற்றில் முக்கிய தடம் பதித்த நிகழ்வுகளாக அமைகின்றன. ஆலயத்தை நிர்மாணித்த நாள் தொடக்கம் இதன் வளர்ச்சிக்குப் பங்கேற்ற அத்தனை பெரும் உள்ளங்களையும் நினைவு கூர்ந்த வண்ணம் தற்போதுள்ள நிர்வாகிகள் இப் பணியையும் ஆற்றிவருகின்றமை குறிப்பிடத்தக்கது.



இப் பிரசுரம் வெளிவருவதற்கு **ஒத்துழைத்த திருவாளர்களான** த.கலைச்செல்வன், த.சண்முகசுந்தரம், கே.ஹரிந்திரலிங்கம், ஏ.தவபாலன், வீ.திருச்செல்வம் ஆகியோருக்கும் எஸ்.இராஜசேகரன் தலைமையிலான பரிபாலன சபையினருக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். நாவலப்பிட்டி ஸ்ரீ முத்துமாரியம்பாளின் அருட்கடாட்சம் அனைவருக்கும் கிடைக்கப் பிரார்த்திப்போம்.

## தேவஸ்தான நிர்வாகசபை உறுப்பினர்கள்



**அமர்ந்திருப்பவர்கள் இடமிருந்து வலம்:**

**திரு.B.சண்முகம்**- உப பொருளாளர், **திரு. M.லெட்சுமணன்**- உப தலைவர், **திரு.D.கலைச்செல்வன்**- பொருளாளர், **திரு.S.இராஜசேகரன்**- தலைவர், **திரு.S.குணசீலன்**- செயலாளர், **திரு.K.அருள்ராஜ்**- உபசெயலாளர், **திரு.யோகேஸ்வரன்**

**நிற்பவர்கள் இடமிருந்து வலமாக:**

**திரு.N.இந்திரகுமார், திரு.K.கதிர்வேல், திரு.K.ஹரிந்திரலிங்கம், திரு.U.துரைராஜசிங்கம், திரு.D.சண்முகசுந்தரம், திரு.N.சதீஸ்கண்ணா, திரு.R.சுகுமார்**





த.கலைச்செல்வன், த.சண்முகசுந்தரம், கே.ஹரிந்திரலிங்கம், ஏ.தவபாலன், வீ.திருச்செல்வம்.

# அமெரிக்க வரி விதிப்புக்கு ஒருபோதும் அடிபணியோம்!!

## கனடாவின் புதிய பிரதமர் மார்க் கார்னி சூளுரை



கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவின் விலகலைத் தொடர்ந்து, கனடாவின் புதிய பிரதமராக மார்க் கார்னி தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

கனடா பிரதமராக இருந்த ஜஸ்டின் ட்ரூடோ கடந்த ஜனவரி 07ஆம் திகதி தனது பதவியை இராஜிநாமாச் செய்தார். இந்நிலையில், லிபரல் கட்சியின் தலைவராகத் தெரிவாகியுள்ள மார்க் கார்னி கனடாவின் 24ஆவது பிரதமராகப் பதவியேற்கிறார்.

கனடா வங்கியின் முன்னாள் தலைவரான மார்க் கார்னி பிரதமராவது அந்நாட்டின் தற்போதைய நிதி சவால் சூழலில் கவனம் பெறுகிறது.



இந்நிலையில் புதிய பிரதமராகத் தெரிவாகியுள்ள மார்க் கார்னி ஆற்றிய வெற்றி உரையில்,

''அமெரிக்கா, கனடா அல்ல. கனடா ஒருபோதும் அமெரிக்காவின் ஒரு பகுதியாக இருக்காது. அமெரிக்கா நம் இயற்கை வளங்களையும் குடிநீரையும் நிலத்தையும் கூடவே முழு கனடா நாட்டையும் அடக்கியாள விரும்புகிறது.

இது அவர்களுடைய நடவடிக்கையை பார்க்கும்போதே நமக்குத் தெரிகிறது. அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப், கனடாவின் தொழிலாளர்களையும் குடும்பங்களையும் வணிகங்களையும் பாதிக்க வைக்கும் விடயங்களைச் செய்து வருகிறார்.

மேலும், டொனால்ட் ட்ரம்ப் வர்த்தகப் போரைத் தொடரும்வரை அமெரிக்கப் பொருட்கள் மீதான பரஸ்பர வரியை கனடா கைவிடாது. கனடா அரசு சரியான பாதையிலேயே செல்கிறது. நமக்கு அமெரிக்கா உரிய மரியாதை கொடுத்து நம்பகத்தன்மை வாய்ந்த - நியாயமான வர்த்தகத்தை உறுதிசெய்யும் வரை நாம் விதித்த வரி அமுலில்தான் இருக்கும்" என்றார். அமெரிக்க பரஸ்பர வரிக்குப் பணியப்போவதில்லை என்ற அவரது கர்ஜனை கவனம் பெறுகிறது.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் பதவியேற்றதிலிருந்து கனடா பொருளாதார ரீதியாக பல்வேறு சவால்களைச் சந்தித்து வருகிறது. பரஸ்பர வரி விதிப்பை ஏப்ரல் 02 வரை மட்டும் ட்ரம்ப் தற்காலிகமாக ஒத்திவைத்துள்ளார். அதனால் கனடாவும் அமெரிக்கப் பொருட்களுக்கான வரி விதிப்பை நிறுத்திவைத்துள்ளது. இந்நிலையில், புதிய பிரதமராகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார் மார்க் கார்னி. அவருக்கான ஏராளமான சவால்கள் காத்திருப்பதாக அந்நாட்டு அரசியல் நிபுணர்கள் கணித்துள்ளனர்.

முன்னதாக, அரசியல் ரீதியாக ட்ரூடோவுக்காக எதிராக ட்ரம்ப் காய்களை நகர்த்திவந்தார். இந்நிலையில், அவர் கடந்த ஜனவரியில் பிரதமர் பதவியை இராஜிநாமாச் செய்தார். தொடர்ந்து கனடாவின் புதிய பிரதமராக மார்க் கார்னி தெரிவுசெய்யப்பட்டுள்ளார். லிபரல் கட்சித் தலைவரான சச்சித் மெஹ்ரா, அக்கட்சியின் தலைமைப் பதவிக்கான போட்டியில் முன்னாள் மத்திய வங்கித் தலைவரான மார்க் கார்னி வெற்றிபெற்றதாக அறிவித்தார். தலைமைப் பதவிக்கான போட்டியில் மார்க் கார்னி 1,31,674 வாக்குகளைப் பெற்றார். இது மொத்த வாக்குகளில் சுமார் 85.9 சதவீத வாக்குகளென்பது குறிப்பிடத்தக்கது.

மார்க் கார்னி (Mark Carney) கடந்த 2008 முதல் 2013ஆம் ஆண்டு வரை கனடா வங்கியின் 8ஆவது ஆளுநராகப் பணியாற்றியுள்ளார். மேலும், 2011 முதல் 2018ஆம் ஆண்டு வரை நிதி நிலைத்தன்மை சபைத் தலைவராக இருந்தமை குறிப்பிடத்தக்கது.

# நான் இசை தெய்வமல்ல; சாதாரண மனிதனே..!

## இன்னும் 13 உலக நாடுகளில் சிம்பொனி அரங்கேற்றவுள்ளேன் என்கிறார் - இசைஞானி






''ரசிகர்கள் என்னை இசைக்கடவுள் என்றெல்லாம் சொல்வதைக் கேட்கும்போது... இளையராஜா அளவுக்கு கடவுளை கீழே இறக்கிட்டீங்களேப்பா.. என்றுதான் எனக்குத் தோன்றும். நான் சாதாரண மனிதனப்பா...'' என இசைஞானி இளையராஜா தெரிவித்துள்ளார்.

தமிழ்ச் சினிமாவின் முன்னணி இசையமைப்பாளரான இளையராஜா, சினிமாவில் 1,500 படங்களுக்கு மேல் இசையமைத்து சாதனை ராஜாவாகத் திகழ்ந்து வருகிறார். இசைக்கு அவர் அளித்த பங்களிப்பைப் போற்றும் வகையில் பல்வேறு விருதுகளை அளித்த இந்திய மத்திய அரசு மாநிலங்களவை உறுப்பினராகவும் அவரை நியமனம் செய்துள்ளது.

இந்நிலையில், லண்டனிலுள்ள உலக புகழ்பெற்ற ஈவண்டின் அப்பல்லோ அரங்கத்தில் சனிக்கிழமை (08) நள்ளிரவு தனது சிம்பொனியை இளையராஜா அரங்கேற்றினார். இதன்மூலம் சிம்பொனியை அரங்கேற்றம் செய்த முதல் இந்தியர் என்ற பெருமையைப் பெற்றுள்ளார். இந்நிலையில், நேற்று தாயகம் திரும்பிய இளையராஜாவுக்கு தமிழக அரசு சார்பில் உற்சாக வரவேற்பளிக்கப்பட்டது.


இந்நிலையில், இசைஞானி இளையராஜா ஊடகவியலாளர் சந்திப்பில் கூறியதாவது:-

என்னை இசைக்கடவுள் என்றெல்லாம் ரசிகர்கள் சொல்வதைக் கேட்கும்போது.. இளையராஜா அளவுக்கு கடவுளை கீழே இறக்கிட்டீங்களேப் பா.. என்றுதான் எனக்குத் தோன்றும். நான் சாதாரண மனிதனைப் போலத்தான் வேலை செய்கிறேன். என்னைப் பற்றி எனக்கு ஓர் எண்ணமும் கிடையாது.

பண்ணைப்புரத்திலிருந்து புறப்படும்போது வெறும்காலோடு நான் நடந்தேன். என்னுடைய காலில் தான் நான் நடந்து இன்று இந்த இடத்தில் நிற்கிறேன். 82 வயது ஆகிவிட்டதே என நினைக்க வேண்டாம்; இனிமேல்தான் ஆரம்பிக்கப் போகிறேன். லண்டனைத் தொடர்ந்து ஜேர்மனி, பிரான்ஸ், டுபாய் உள்ளிட்ட 13 நாடுகளில் சிம்பொனியை அரங்கேற்றவுள்ளேன். அதற்கான ஏற்பாடுகள் தயார் செய்யப்பட்டு வருகின்றன.

சிம்பொனியை யாரும் பதிவிறக்கம் (டவுன்லோட்) செய்து கேட்காதீர்கள். அதனை நேரில் உணர வேண்டும். நம் மண்ணிலும் (இந்தியாவிலும்) நடக்கும் அதுவரை காத்திருக்கவும். இந்த சிம்பொனி உலகம் முழுவதும் கொண்டு செல்லப்படும் - என்றார்.

# 13 - 14இல் வானில் நிகழும் அதிசயம்



எதிர்வரும் 13ஆம், 14ஆம் திகதிகளில் நிகழவிருக்கும் சந்திர கிரகணத்தில் நிலவு சிவப்பு நிறத்தில் காட்சியளிக்கும் அரிய நிகழ்வு இடம்பெறவுள்ளது. இது 'ப்ளட் மூன்' (Blood Moon) என்றழைக்கப்படுகிறது.

ரேலீ சிதறல் காரணமாக சந்திரனில் சிவப்பு நிறம் ஏற்படுகிறது. 2022இற்குப் பின்னர் தற்போது 2 நாட்கள் இந்த நிகழ்வு வருகிறது. இந்த கிரகணம் சுமார் 5 மணி நேரம் நீடிக்கும்.

கிரகணத்தின்போது, சூரியனுக்கும் சந்திரனுக்கும் இடையில் பூமி நேரடியாக நிலைநிறுத்தி, சந்திர மேற்பரப்பில் ஒரு நிழலை உருவாக்கும். வட மற்றும் தென் அமெரிக்காவில் இதை சிறப்பாகப் பார்க்க முடியுமென வானிலை ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.



# விண்வெளியில் தனது செயற்பாட்டை தொடங்கியது 'ஸ்காட்-1'

இந்திய ஸ்டார்ட் அப் நிறுவனம் உருவாக்கியுள்ள விண்வெளியை கண்காணிக்கும் உலகின் முதல் வர்த்தக செயற்கைகோள் 'ஸ்காட்-1' தென் அமெரிக்காவை படம் பிடித்து அனுப்பி தனது செயற்பாட்டைத் தொடங்கியுள்ளது.

'ஸ்காட்-1' செயற்கைகோளிலுள்ள கெமரா விண்வெளியில் பூமியை சுற்றுக்கொண்டிருக்கும் பொருட்களைக் கண்காணிக்கும் திறன் கொண்டது.

இந்த ஸ்காட் செயற்கைகோள், ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனத்தின் டிரான்ஸ்போர்ட்டர்-12 ரொக்கெட் மூலம் கடந்த ஜனவரி மாதம் 14ஆம் திகதி விண்ணுக்கு அனுப்பப்பட்டது. புவியின் கீழடுக்கு சுற்றுவட்டப் பாதையை கண்காணிக்கும் வகையில், இந்தச் செயற்கை சூரிய சுற்றுவட்டப் பாதையில் வெற்றிகரமாக நிலைநிறுத்தப்பட்டது.

இந்நிலையில், இந்த செயற்கைகோள் கடந்த சனிக்கிழமை தென் அமெரிக்காவை கடந்து சென்றபோது தனது முதல் படத்தை படம் பிடித்து அனுப்பியது. அதில் பூமியின் விளிம்பு ஒரு கோடு போலவும் ஆர்ஜென்ரீனாவின் பியூனஸ் ஏர்ஸ் நகரம் ஜொலிப்பதும் தெளிவாகத் தெரிகிறது. இதன்மூலம் ஸ்கொட் செயற்கைகோளின் செயற்பாடு தொடங்கியுள்ளது.

# மணிப்பூரில் மீண்டும் வன்முறை: பாதுகாப்புப் படையினர் குவிப்பு!



மணிப்பூரில் மீண்டும் வன்முறை வெடித்துள்ள நிலையில், கூகி சமூகத்தினர் நடத்தும் போராட்டங்களால் பதற்றம் நீடிக்கிறது.

இந்தியாவின் வடகிழக்கு மாநிலமான மணிப்பூரில், 2023ஆம் ஆண்டு மே மாதம் கூகி மற்றும் மெய்டி சமூகத்தினரிடையே மோதல் வெடித்தது. இதில், 250இற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர்.


மத்திய, மாநில அரசுகளின் முயற்சியால் அமைதி திரும்பியதையடுத்து, 22 மாதங்களுக்குப் பின்னர், பொது போக்குவரத்தான பஸ் சேவை சனிக்கிழமை முதல் ஆரம்பமாகியுள்ள நிலையில், சிலர் பஸ்கள் மீது கற்களை வீசி தாக்குதல் நடத்தினர். ஒருசில இடங்களில் பஸ்கள் தீ வைத்து எரிக்கப்பட்டன. பாதுகாப்புப் படையினருக்கும் போராட்டக்காரர்களுக்கும் இடையே கடுமையான மோதல் ஏற்பட்டுள்ளது. பாதுகாப்புப் படையினர் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பாக கூகி சமூகத்தினரின் கூகி - சோ குழு வெளியிட்டுள்ள வீடியோவில்,

''எங்கள் சமூகத்தினர் அதிகம் வசிக்கும் பகுதிகளில் மெய்டி சமூகத்தினர் சுதந்திரமாக வந்து செல்ல அனுமதிக்க முடியாது. இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் வரை, யாரையும் எங்கள் பகுதிக்குள் சுதந்திரமாக நடமாட அனுமதிக்க மாட்டோம். எங்கள் சமூகத்தினர் நடத்தும் போராட்டங்களை ஒடுக்கும் பாதுகாப்புப் படையினரைக் கண்டித்து, அனைத்து பகுதிகளிலும் காலவரையறையின்றி கடையடைப்பு நடத்த அழைப்பு விடுத்துள்ளோம்'' - என எச்சரித்துள்ளனர்.

கூகி சமூகத்தினரின் இந்தப் போராட்டத்தால் மணிப்பூரில் பதற்றமான சூழல் நிலவுகிறது. கடைகள் அடைக்கப்பட்டுள்ளன. பதற்றம் நிறைந்த பகுதிகளில் பாதுகாப்புப் படையினர் குவிக்கப்பட்டுள்ளனர்.

# 16இல் பூமிக்குத் திரும்பும் சுனிதா



நாசா விண்வெளி வீராங்கனையான சுனிதா வில்லியம்ஸ் 9 மாதங்களுக்குப் பின்னர் எதிர்வரும் 16ஆம் திகதி பூமிக்குத் திரும்பவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

விண்வெளி வீரர்களான சுனிதா வில்லியம்ஸ் மற்றும் புட்ச் வில்போர் ஆகிய இருவரும் ஆய்வுக்காக கடந்த ஆண்டு ஜூன் மாதம் சர்வதேச விண்வெளி ஆய்வு மையத்துக்குச் சென்றனர். போயிங் ஸ்டார் லைனர் விண்கலத்தில் இருவரும் 8 நாள் பயணமாக விண்வெளி மையத்துக்குச் சென்ற நிலையில், விண்கலத்தில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறு காரணமாக இருவரும் சர்வதேச விண்வெளி மையத்திலேயே சிக்கியுள்ளனர். அவர்களது பயணம், தற்போது 9 மாதங்களை எட்டியுள்ளது.

அவர்களை பூமிக்கு அழைத்து வருவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இருவரும் விரைவில் பூமிக்குத் திரும்புவார்களென்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில், எதிர்வரும் 16ஆம் திகதி ஸ்பேஸ் எக்ஸ் டிராகன் விண்கலத்தில் பூமிக்கு அழைத்து வரப்படுவார்களென்று நாசா தெரிவித்துள்ளது.

சுனிதாவும் வில்மோரும் விண்வெளி நிலையத்தில் நிறுத்தப்பட்டுள்ள 'ஸ்பேஸ்எக்ஸ் க்ரூ -9 மிஷன்' விண்கலத்தில் பூமிக்குத் திரும்பவுள்ளனர். இந்த விண்கலம் கடந்த செப்டெம்பரில் நிலையத்தை அடைந்தது.நாசா விண்வெளி வீரர் நிக் ஹேக் மற்றும் ரஷ்யாவின் அலெக்ஸாண்ட்ரா கோர்புனோவ் ஆகியோரும் சுனிதாவுடன் திரும்பும் பயணத்தில் பூமிக்கு வரவுள்ளனர். இருவரும் 'க்ரூ-9 மிஷன்' மூலம் நிலையத்தையடைந்தனர். ஆரம்பத்தில் அவர்கள் பெப்ரவரியில் திரும்ப திட்டமிடப்பட்டிருந்த நிலையில், தற்போது எதிர்வரும் 16ஆம் திகதி நால்வரும் ஒன்றாகத் திரும்புவார்கள் என்று புதிய தகவல்கள் தெரிவிக்கின்றன.

# தோட்டத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தப் போராட்டம்





(பதுளை பிராந்திய செய்தியாளர்)

வேலைப்பளு அதிகரிப்பு, சம்பளக் குறைப்பு என்பவற்றுக்கு எதிராக எல்ல நிவ்பார்க் தோட்டத்தைச் சேர்ந்த மேற்பிரிவு, கீழ்ப்பிரிவு மற்றும் கொவுச ஆகிய பிரிவுகளைச் சேர்ந்த சுமார் 100 தொழிலாளர்கள் நேற்று (10) வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அண்மையில் அதிகரிக்கப்பட்ட தினசரி ஊதியமான 1,350 ரூபாவைப் பெறுவதற்கு மேற்குறித்த தோட்டங்களில் உள்ள தொழிலாளர்கள் தினமும் 26 கிலோ கொழுந்து பறிக்கவேண்டுமென்று தோட்ட நிர்வாகம் உத்தரவிட்டுள்ளது. தற்போதைய தினசரி அறுவடையான 22 கிலோவிலிருந்து இது 4 கிலோ அதிகரிப்பாகும். அந்த இலக்கைப் பூர்த்தி செய்யும் தொழிலாளர்களுக்கு மட்டுமே தினசரி ஊதியம் 1,350 ரூபா கிடைக்குமென்றும் தோட்ட முகாமையாளர்கள் கூறியுள்ளனர். 22 கிலோ பறிக்காவிட்டால் எத்தனை கிலோ பறித்துள்ளார்களோ அதற்கேற்ப குறைக்கப்பட்ட ஊதியத்தையே தொழிலாளர்கள் பெறுவர்.

எல்ல நிவ்பார்க் தோட்டத்தில் ஒரு கிலோ கொளுந்தின் விலை 50 ரூபாவாகும். அதன்படி, 21 கிலோ கொழுந்து பறித்தால் ஒரு தொழிலாளிக்கு 675 ரூபா மட்டுமே கிடைக்கும். இது 360 ரூபா சம்பள வெட்டாகும். வானிலை அல்லது கொழுந்து பற்றாக்குறை காரணமாக கொழுந்து பறிக்கும் அளவு மேலும் குறைந்தால் இதே போன்ற ஊதிய வெட்டுகள் நிகழும்.

வாழ்க்கைச் செலவுகள் அதிகரித்து வரும் நிலையில், கடந்த ஆண்டு 1,750 ரூபா நாட்சம்பளம் கோரி தோட்டத் தொழிலாளர்கள் போராடினார்கள். இக்கோரிக்கைகளை கம்பனிகள் தொடர்ந்து நிராகரித்து வந்துள்ளன.

வேலைச்சுமை அதிகரிப்பு மற்றும் ஊதிய வெட்டு குறித்து எல்ல நிவ்பார்க் தோட்டத்தில் பணிபுரியும் பெண்ணொருவர் கருத்துத் தெரிவிக்கையில் , "நிர்வாகம் நாளொன்றுக்கு 22 கிலோ கொழுந்தைப் பறிக்குமாறு கூறுகிறது. ஆனால், நாளொன்றுக்கு 19 கிலோவே ஆகக் கூடுதலாகப் பறிக்க முடியும்".

"கம்பனிகள் தோட்டத்தைச் சரியாகப் பராமரிப்பதில்லை. அதனால் கொழுந்து அளவு மேலும் குறைகிறது. முன்னர், தோட்டத்தைச் சுத்தம் செய்வதற்கு ஆண்களே வேலைக்கு அமர்த்தப்பட்டனர். இப்போது அவர்களும் கொழுந்து பறிக்கப் பயன்படுத்தப்படுகின்றனர்.

உரம் மற்றும் இரசாயனப் பொருட்களை முறையற்ற விதத்தில் பயன்படுத்துவதால் விளைச்சல் குறைவாகவுள்ளது. தோட்டத்தில் உள்ள 400 ஹெக்டேயரில் 100 ஹெக்டேயர் தேயிலைத் தோட்டங்கள் ஏற்கனவே கைவிடப்பட்டுள்ளன. பயிர்ச் செய்யும் நிலப்பரப்பும் குறைந்துள்ளது. எனவே, நிர்வாகம் கேட்கும் இலக்கை கொடுக்கவே முடியாது''- என அவர் மேலும் விளக்கினார்.

கண்டி ஸ்ரீ தலதா மாளிகையில்

# 16 வருடங்களுக்கு பின் மக்கள் தரிசனத்துக்காக புனித தந்த தாது



(ஜே.எம்.ஹாபீஸ்)

கண்டி ஸ்ரீ தலதா மாளிகையில் வைக்கப்பட்டுள்ள புனித சின்னமான தந்த தாது பொதுமக்கள் தரிசனத்துக்காக 16 வருடங்களின் பின் சந்தர்ப்பம் வழங்கப்படுவதால் அது தொடர்பான ஏற்பாடுகள் மிக அவதானத்துடன் திட்டமிடப்பட வேண்டுமென மத்திய மாகாண ஆளுநர் பேராசிரியர் சரத் அபேகோன் தெரிவித்தார்.

மேற்படி புனித சின்னத்தை பொதுமக்கள் பார்வைக்காக வைப்பது தொடர்பாக இடம் பெற்ற கலந்துரையாடலின்போதே அவர் இதனைத் தெரிவித்தார். கண்டியிலுள்ள ஆளுநர் காரியாலயத்தில் நேற்று (10) இடம் பெற்ற இவ்வைபவத்தில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

''உலக பௌத்தர்கள் மிகப் புனிதமாகக் கருதும் மேற்படி தந்ததாதுவை பார்வையிட பல்லாயிரக்கணக்காக மக்கள் வருகை தருவர். குறிப்பாக, கடந்த 16 வருடங்களுக்குப் பிறகு வழங்கப்படுகின்ற இச்சந்தர்ப்பத்தைப் பயன் படுத்திக்கொள்ள சகல வயதுப்பிரிவினரும் முயற்சிப்பர். அந்த வகையில் எதிர்வரும் ஏப்ரல் 18ஆம் திகதி முதல் 27ஆம் திகதி வரை இது இடம்பெறும்போது சுமார் 20 இலட்சம் பேர் வருகை தரலாமென உத்தேசிக்கப்பட்டுள்ள இவ்வேலைத்திட்டத்தை மிக அவதானத்துடன் திட்டமிடப்பட வேண்டியுள்ளது.

எனவே, அவர்களுக்கான போக்குவரத்து, பாதுகாப்பு, உணவு, குடிநீர், சுகாதார வசதிகள், இரவு நேர தங்குமிட ஏற்பாடுகள், தானசாலைகள், மலசல கூட வசதிகள் உட்பட அனைத்து அடிப்படைத் தேவைகளையும் கவனத்தில் எடுக்கவேண்டியுள்ளது. இக்காலத்தில் கண்டி நகரப் பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. அத்துடன், நகரில் விசேட போக்குவரத்து ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும்''- என்றார்.

இக்கூட்டத்தில் மகா சங்கத்தினர் உட்பட அரச மற்றும் மாகாண சபை உயரதிகாரிகள் கலந்து கொண்டனர்.

# ஸ்பெயின் பிரஜையின் பணப்பையை மீட்டுக்கொடுத்த பூ வியாபாரி

(எம்.ஏ.அமீனுல்லா)

ஸ்பெயின் நாட்டு சுற்றுலாப் பயணியொருவரின் பயணப்பொதியிலிருந்து விழுந்த பணப்பையை பெண்ணொருவர் எடுத்துக்கொண்டு ஓட முற்பட்ட போது கண்டி ஸ்ரீ தலதா மாளிகைக்கு அருகில் பூ வியாபாரத்தில் ஈடுபட்டிருந்த இளைஞர் ஒருவர் அந்தப் பணப்பையைப் பறித்து வெளிநாட்டுப் பெண்ணிடம் திருப்பிக் கொடுத்த சம்பவமொன்று கடந்த சனிக்கிழமை (08) கண்டியில் இடம்பெற்றுள்ளது.

குறித்த பணப்பையில் சுமார் இரண்டு இலட்சத்து அறுபதாயிரம் ரூபா பெறுமதியான 810 யூரோக்கள் மற்றும் வங்கி அட்டைகள் என்பன காணப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

ஸ்ரீ தலதா மாளிகை வளாகத்தில் உள்ள பூக்கடை அருகே வெளிநாட்டுக் குழுவினர் சென்று கொண்டிருந்தபோது, குறித்த பெண்ணின் பணப்பை விழுந்துள்ளது. இதை அறிந்து கொள்ளாத குறித்த ஸ்பெயின் நாட்டுப் பெண் அவர்களது குழுவுடன் பஸ்ஸில் சென்றுள்ளார்.

இப்பணப்பையை கண்டெடுத்த பெண்ணொருவர் அதனுடன் ஓட முற்பட்டபோது, அதனைக் கண்ட பூ வியாபாரியான இளைஞன் துரத்திச் சென்று மடக்கிப் பிடித்துள்ளார்.

பணப்பையை மீட்டெடுத்த அவர், ஸ்ரீ தலதா மாளிகை பொலிஸ் நிலைய தலைமைப் பரிசோதகர் சேனாதீரவைச் சந்தித்து கையளித்துள்ளார் .

அதன் பின்னர் குறித்த விடயம் தொடர்பில் கண்டி சுற்றுலா பொலிஸ் நிலையப் பிரதம பரிசோதகரிடம் தெரிவித்துள்ளதையடுத்து சுற்றுலா வழிகாட்டிகளின் உதவியுடன் கண்டி ரஜினா ஹோட்டலுக்கருகில் வெளிநாட்டுக் குழுவை அடையாளம் கண்டு பணப்பை கையளிக்கப்பட்டதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

பணப்பையைக் கண்டுபிடித்த இளைஞனுக்கு 30 யூரோக்களை ஸ்பெயின் நாட்டுப் பெண் வழங்கியுள்ளார்.





*கண்டி இந்து மகளிர் சங்கம், சர்வதேச மகளிர் தினத்தை கண்டி ஸ்ரீ புஷ்பதான மண்டபத்தில் அண்மையில் (09) நடத்தியது. இவ்வைபவத்தில் பிரதம அதிதியாக மகப்பேற்று மற்றும் மகளிர் மருத்துவ விசேட நிபுணர் திருமதி டெப்னி டி சொய்சா கலந்துகொண்டார். மேற்படி சங்கத் தலைவி செல்வி கலையரசி தலைமையில் இடம்பெற்ற இவ்வைபவத்தில் பிரதம அதிதி நினைவுப் பரிசு வழங்கி கௌரவிக்கப்பட்டார். இந்நிகழ்வில் சங்கச் செயற்குழு அங்கத்தவர்களான திருமதி பரமேஷ்வரன், சுமதி சுந்தரமூர்த்தி உட்பட பலர் கலந்துகொண்டனர். (ஜே.எம்.ஹாபீஸ்)*

# வடக்கு - கிழக்கு ஆளும் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் கூலியாட்கள்போல் இருக்கிறார்கள்

## சத்தியலிங்கம் எம்.பி. சாட்டையடி

(சிவகுமார் திவியா)

''வடக்கு - கிழக்கு மாகாணங்களில் ஆளும் கட்சி உறுப்பினர்களாகவுள்ள பாராளுமன்ற உறுப்பினர்கள், தங்களுடைய தேவைகளைக்கூட எங்களுக்கூடாக நிறைவேற்றவேண்டிய கட்டத்தில் உள்ளார்கள். அவர்கள் அங்கு கூலியாட்கள்போல்தான் இருக்கிறார்கள். அவர்கள் கைப்பொம்மைகளாகவே உள்ளார்கள்'' - என இலங்கை தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ப.சத்தியலிங்கம் தெரிவித்தார்.

வவுனியா, குருமன்காடு, காளிகோவில் வீதியில் பாராளுமன்ற உறுப்பினரின் அலுவலகத்தை நேற்று முன்தினம் (09) திறந்து வைத்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

''வவுனியா மாவட்டம் மட்டுமன்றி, வடக்கு - கிழக்கில் பெரும்பாலான சபைகளை எமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர வேண்டும். இந்தத் தேர்தல் முறைமை என்பது சிக்கலான முறைமை. நாங்கள் வடக்கு மாகாணத்தில் கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் புதுக்குடியிருப்பு, பூநகரி ஆகிய பிரதேச சபைகளை மாத்திரே ஒரு கட்சியாக அந்த நேரம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக ஆட்சி செய்தோம்.


வவுனியாவில் எல்லா சபைகளிலும் பெரும்பான்மையான வட்டாரங்களைக் கைப்பற்றியிருந்தாலும் கூட நாங்கள் எதிர்க்கட்சியாகவே இருக்கவேண்டியிருந்தது. அதற்கு இந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல் முறைமையே காரணமாகும்.

அதனால்தான் கடந்த உள்ளூராட்சி மன்றத்துக்குரிய வேட்புமனுக்கள் சமர்ப்பித்தபோது தனித் தனிக் கட்சியாகப் போட்டியிட்டு ஒன்றுசேர்ந்து ஆட்சியமைப்போம் என்றுகட்சிக்குள் முடிவெடுத்தோம். ஆனால், அதன் பின் நடந்த முடிவு உங்களுக்குத் தெரியும்.

இம்முறை எமக்குச் சவாலான உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடைபெறவிருக்கிறது. இந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஜனாதிபதியின் கட்சியினர் வடக்கு - கிழக்கில் போட்டியிட வந்துள்ளார்கள். கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் அவர்கள் வடக்கு - கிழக்கில் போட்டியிடவில்லை.

எனவே, எமது வேட்பாளர்களின் செயற்பாடுகள் அதில் தாக்கம் செலுத்தும். அரசியல் ரீதியாக, கொள்கை ரீதியாக வேறுபாடுகள் இருந்தாலும் கூட ஒவ்வொரு வட்டாரத்திலும் போட்டியிடும் வேட்பாளர்தான் கட்சியின் வெற்றியைத் தீர்மானிக்கப்போகின்றார். இதனால் நாம் பல முக்கிய முடிவுகளை எடுத்துள்ளோம்.

வவுனியா மாவட்டம் மிகவும் சவாலுக்குட்படுத்தப்பட்ட ஒரு மாவட்டம். எமது மாவட்டத்தில் இனப்பரம்பலை மாற்றக்கூடிய வகையில் பல பிரச்சினைகள் இடம்பெறுகின்றன. எங்களது மக்களின் காணிகள் அபகரிக்கப்படுகின்றன. பல திணைக்களங்கள் எமது காணிகளைக் கையகப்படுத்துகின்றன. எமது இடம்பெயர்ந்த மக்கள் குடியேற முடியாத நிலை இருக்கிறது. வன்னி தேர்தல் மாவட்டத்திலும் இருப்பைக் காப்பாற்ற வேண்டிய நிலையில்



இருந்துவருகின்றோம்.

அந்த வகையில் பாராளுமன்றத்திலும் நானும் ரவிகரனும் குரல் கொடுத்து வருகின்றோம். அமைச்சர்களோடு பழகி வருகின்றோம். எமது மக்கள் சார்ந்த செயற்பாடுகளுக்காக அவர்களுடன் சண்டை பிடிக்கவில்லை. தவறுகளைக் கூறுகின்றோம். பல வாக்குறுதிகளைத் தந்துள்ளார்கள். சில நிறைவேற்றப்பட்டுள்ளன.

ஆனால், வடக்கு - கிழக்கு மாகாணங்களிலுள்ள ஆளும் கட்சி உறுப்பினர்கள் தங்களுடைய தேவைகளைக்கூட எங்களுக்கூடாக நிறைவேற்றவேண்டிய கட்டத்தில் உள்ளார்கள். அது ஒரு பரிதாபமான விடயம். அவர்களுக்கான குரல் அங்கு ஒலிப்பதற்கு இடமில்லை. அவர்கள் அங்கு கூலியாட்கள்போல்தான் இருக்கிறார்கள்.

வடக்கு - கிழக்கு ஆளும் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் பொம்மைகள்போலத்தான் உள்ளார்கள்.

அதுதான் யதார்த்தம், உண்மை. அண்மையில் கருத்து வெளியிட்ட ஊடகமொன்று தரைப்பட்டியில் வடக்கு, கிழக்கு ஆளும் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் கீழ் மட்டத்தில் இருக்கிறார்கள் எனக் காட்டியது. எவ்வாறிருந்தாலும் எமக்கு சவால்மிக்கது இந்தத் தேர்தல். அதை மனதில் வைத்து செயற்பட வேண்டும்''- என்றார்.

## இராணுவத்தினர் வசமுள்ள நீச்சல் தடாகத்தை

# முல்லைத்தீவு மாவட்ட விளையாட்டுத்துறையின் வளர்ச்சிக்குப் பயன்படுத்த ஆளுநரிடம் விண்ணப்பம்



(கே .குமணன்)

முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்பு இரணைப்பாலை பகுதியில் தமிழீழ விடுதலைப்புலிகளால் பயன்படுத்தப்பட்டு தற்போது இராணுவத்தினரின் வசமுள்ள நீச்சல் தடாகத்தை முல்லைத்தீவு மாவட்ட விளையாட்டுத் துறையின் வளர்ச்சிக்குப் பயன்படுத்தும் வகையிலும் நீச்சல் பயிற்சிகளை விளையாட்டு வீரர்கள் பெறும் வகையிலும் பயன்படுத்துவதற்கு வடக்கு மாகாண ஆளுநர் வேதநாயகனிடம் கோரிக்கையொன்று விடுக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட துடுப்பாட்ட சங்கத்தினரின் ஏற்பாட்டில் முல்லை பிரீமியர் லீக் தொடரின் இறுதிப்போட்டி புதுக்குடியிருப்பில் கடந்த 08ஆம் திகதி அன்று இடம்பெற்றிருந்தது. இந்தப் போட்டியின் பிரதம அதிதியாக வடக்கு மாகாண ஆளுநர் வேதநாயகன் கலந்துகொண்டபோதே முல்லைத்தீவு மாவட்ட துடுப்பாட்ட சங்கத்தின் தலைவர் வைத்தியர் உதயசீலனால் இந்தக் கோரிக்கை ஆளுநர் முன்பாக முன்வைக்கப்பட்டுள்ளது.

அதாவது, முல்லைத்தீவு மாவட்டத்தில் நீச்சல் பயிற்சிகள் கடல்களில் நிகழ்த்தப்பட்டபோதிலும் முல்லைத்தீவு மாவட்டத்தில் சகல வசதிகளுடனும் கூடிய வளமான நீச்சல் தடாகமொன்று இரணைப்பாலை பகுதியில் உள்ளது. அதனை முல்லைத்தீவு மாவட்டம் மட்டுமல்ல, ஏனைய மாவட்ட வீரர்களும் பயன்படுத்தக்கூடிய வகையில் அந்த நீச்சல் தடாகத்தை ஒரு நீச்சல் பயிற்சி மையமாகப் பயன்படுத்த மாவட்ட விளையாட்டுக் குழுவோ அல்லது வேறு யாராவது பொறுப்பேற்று நடத்த ஆவன செய்ய வேண்டுமென முல்லைத்தீவு மாவட்ட துடுப்பாட்டச் சங்கத்தின் தலைவர் வைத்தியர் உதயசீலன் ஆளுநரிடம் கோரிக்கை முன்வைத்துள்ளார்.

முல்லைத்தீவு இரணைப்பாலை பகுதியில் அமைந்துள்ள இந்த நீச்சல் தடாகம் தமிழீழ விடுதலைப் புலிகளால் நீச்சல் பயிற்சிக்காகப் பயன்படுத்தப்பட்டு வந்த நிலையில் இறுதி யுத்தத்தின் பின்னர் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் தற்போதுவரை காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# புனர்வாழ்வு நிலையத்திலிருந்த மகனுக்கு ஹெரோயின் வழங்க முற்பட்ட உப பொலிஸ் பரிசோதகர் கைது

(வவுனியா நிருபர்)

வவுனியா, பூந்தோட்டம் போதைப்பொருள் புனர்வாழ்வு நிலையத்தில் புனர்வாழ்வு பெற்றுவரும் தனது மகனுக்கு ஹெரோயின் போதைப்பொருள் வழங்க முற்பட்டதாக உப பொலிஸ் பரிசோதகரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் (09) இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

போதைப்பொருள் பாவனை தொடர்பில் கைதுசெய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவுக்கமைய இளைஞரொருவர் வவுனியா, பூந்தோட்டம் புனர்வாழ்வு நிலையத்துக்கு 6 மாத புனர்வாழ்வுக்காக அனுமதிக்கப்பட்டிருந்தார்.

தற்போது 4 மாதங்கள் நிறைவடையும் நிலையில் குறித்த இளைஞரை பார்வையிடுவதற்காக குருநாகல் பகுதியிலுள்ள பொலிஸ் நிலையமொன்றில் குற்றத்தடுப்புப் பிரிவில் உப பொலிஸ் பரிசோதகராகக் கடமையாற்றும் தந்தையும் பொலிஸாராகக் கடமையாற்றும் தாயும் வருகை தந்துள்ளனர்.

புனர்வாழ்வு நிலையத்துக்குள் சென்று தமது மகனைப் பார்வையிட்டபோது அவர்கள் இருந்த இடத்தை நோக்கி பொலிஸ் மோப்பநாய் வந்ததை அவதானித்த அவர்கள் தமது பையிலிருந்த பொதியொன்றை எடுத்து வெளியே வீசியுள்ளனர். இதனை காவல் கடமையிலிருந்த பாதுகாப்புத் தரப்பினர் அவதானித்துள்ளனர்.

உடனடியாக மோப்பநாயின் உதவியுடன் அதனைச் சோதனையிட்டபோது அதில் 240 மில்லி கிராம் ஹெரோயின் போதைப்பொருள் இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

இதனையடுத்து குறித்த மோப்பநாய் அதனை வீசிய இளைஞரின் தந்தையான உப பொலிஸ் பரிசோதகரையும் அடையாளம் காட்டிய நிலையில், அவர் கைதுசெய்யப்பட்டு வவுனியா பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். மேலதிக விசாரணைகளின் பின் குறித்த உப பொலிஸ் பரிசோதகரை நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# யாழ். மாவட்ட செயலகத்தில் சர்வதேச மகளிர் தினம்





(யாழ்., சாவகச்சேரி நிருபர்கள்)

மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சும் யாழ். மாவட்ட செயலகமும் இணைந்து நடத்தும் 2025 ஆண்டின் சர்வதேச மகளிர் தின நிகழ்வுகள் யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் (09) பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெற்றது.

'நிலையான எதிர்காலத்தை உருவாக்க அவள் வலுவான வழிகாட்டியாக இருப்பாள்' என்னும் தொனிப்பொருளில் யாழ். பதில் மாவட்ட செயலர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் நடத்தப்பட்ட இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் மகளிர் விவகார அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜ் கலந்து சிறப்பித்திருந்தார்.

சிறப்பு விருந்தினர்களாக கடற்றொழில் அமைச்சர் சந்திரசேகரன், வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சின் செயலாளர் பொ.வாகீசன், யாழ். மவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்கள், யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் ஸ்ரீமோகன், மாவட்ட செயலக பதவிநிலை உத்தியோகத்தர்கள், பிரதேச செயலர்கள், மாவட்ட மற்றும் பிரதேச செயலக பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், உத்தியோகத்தர்கள், உளவளத்துணை உத்தியோகத்தர்கள், மாவட்ட மகளிர் சம்மேளனப் பிரதிநிதிகள், பெண் முயற்சியாளர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

குறித்த நிகழ்வில் பல்வேறு கலை நிகழ்வுகளுடன் யாழ். மாவட்டத்தை உள்ளடக்கிய 15 பிரதேச செயலகங்களின் பெண் முயற்சியாளர்கள் கௌரவிக்கப்பட்டு சான்றிதழ்களும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



# ஒலிம்பிக் பதக்கம் வென்ற மல்யுத்த வீரருக்கு மீண்டும் பிணை

ஒலிம்பிக் பதக்கம் வென்ற இந்திய மல்யுத்த வீரரான 41 வயதாகும் சுஷில் குமாருக்கு மீண்டும் பிணை வழங்கப்பட்டுள்ளது.

மல்யுத்த வீரரான சுஷில் குமார் ஒலிம்பிக்கில் 2008இல் வெண்கலம், 2012இல் வெள்ளி என இரு பதக்கங்களை வென்றவர். கடந்த 2021ஆம் ஆண்டு மே மாதம் டில்லி சத்ராசல் மைதானத்தின் மல்யுத்தப் பயிற்சியாளராக இருந்த சாகர் தங்கர் கொலை வழக்கில் சுஷில் குமார் சிக்கினார்.

அதன் பின்னர் சுஷில் குமார் உட்பட 17 பேர் கடந்த 2022ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் திஹார் சிறையில் அடைக்கப்பட்டனர். இதனையடுத்து கடந்த 2023 ஜூலை மாதம் முழங்கால் காயத்துக்கு சிகிச்சை பெற சுஷில் குமார் பிணையில் வந்தார்.

அதன் பின் மீண்டும் சிறை சென்ற இவருக்குத் தற்போது மறுபடியும் பிணை கிடைத்துள்ளது.





## RAMADIAN PARENTS PREMIER LEAGUE-2025

கொழும்பு இராமநாதன் இந்து மகளிர் கல்லூரியின் வரலாற்றில் முதல் தடவையாக பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்று செயற்குழுவினர் ஒழுங்குசெய்திருந்த பெற்றோர்களுக்கான அணிக்கு 08 பேர் கொண்ட 05 ஓவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி-2025, ஞாயிற்றுக்கிழமை வெள்ளவத்தை குரே பார்க் மைதானத்தில் நடைபெற்றது. 18 அணிகள் பங்கேற்ற பரபரப்பான சுற்றுப்போட்டியின் வெற்றி கிண்ணத்தை தரம்-8ஐ பிரதிநிதித்துவப்படுத்திய Master Mavericks அணியினர் கைப்பற்றினர். Runner-up ஆக தரம்-10ன் Colombo Lion Kings அணி வென்றது.

அதேநேரம் பெண்களுக்கான கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் வெற்றிகிண்ணத்தை தரம்-2ஐ பிரதிநிதித்துவப்படுத்திய Galaxy Girls அணி தனதாக்கியது. Runner-up கிண்ணத்தை OGA-A அணி கைப்பற்றியது. பாடசாலையின் நிகழ்கால மாணவிகளின் பெற்றோர்களும் பழைய மாணவியரும் பங்குபற்றுகின்ற இந்தச் சுற்றுப்போட்டியின் பிரதம அதிதியாக பாடசாலை அதிபர் ஸ்ரீமதி யோகராணி சிவபாலன் கலந்து சிறப்பித்தார்.

கௌரவ அதிதிகளாக பம்பலப்பிட்டி பொலிஸ் பொறுப்பதிகாரி, பாடசாலையின் உப-அதிபர் ஸ்ரீமதி வதனா ரவிசங்கர் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

### ஒன்பதாவது ஐ.சி.சி. சம்பியன்ஸ் கிண்ணம் இந்தியா வசம்

# மூன்று கிண்ணங்களை வென்ற முதல் அணியாகவும் இந்தியா சாதனை



ஒன்பதாவது ஐ.சி.சி. சம்பியன்ஸ் கிண்ணக் கிரிக்கெட் தொடரில் ரோஹித் சர்மா தலைமையிலான இந்திய அணி இறுதியாட்டத்தில் நியூசிலாந்தை வீழ்த்தி வரலாற்றில் மூன்றாவது தடவையாக 12 ஆண்டுகளுக்குப் பிறகு சம்பியன்ஸ் கிண்ணத்தை வென்றது. இதன்மூலம் இந்தியா மூன்று சம்பியன்ஸ் கிண்ணங்களை வென்ற முதல் அணியாக சாதனை படைத்தது.

பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் ஏற்பாட்டில் கடந்த மாதம் 19ஆம் திகதி ஆரம்பமாகிய குறித்த தொடரின் இறுதிப்போட்டி நேற்று முன்தினம் டுபாய் சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் நடைபெற்றது. முதலில் பந்து வீசிய இந்திய அணி, நியூசிலாந்தை 50 ஓவர்களில் 251-7 ஓட்டங்களுக்குக் கட்டுப்படுத்தியது. நியூசிலாந்தின் துடுப்பாட்டத்தில் டேரில் மிட்செல் - 63 ஓட்டங்களும் மைக்கேல் பிரேஸ்வெல் - 53 ஓட்டங்களும் பெற்றனர். 252 ஓட்டங்களை இலக்காகக்கொண்டு களமிறங்கிய இந்திய அணி, 49 ஓவர்களில் 4 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

தொடர் நாயகனாக துடுப்பாட்டத்தில் 262 ஓட்டங்களையும் பந்துவீச்சில் 3 விக்கெட்டுகளையும் கைப்பற்றிய நியூசிலாந்தின் ரச்சின் ரவீந்திரா தெரிவானார். இறுதிப்போட்டியின் ஆட்டநாயகனாக துடுப்பாட்டத்தில் 76 ஓட்டங்களைக் குவித்த ரோஹிட் சர்மா தெரிவானார்.

***இந்தியாவின் மூன்று சம்பியன்ஸ் கிண்ணங்களை வென்ற தலைவர்கள்***

2002 - சவுரவ் கங்குலி (இந்தியா, இலங்கை இணைந்து வெற்றி – மழையால் முடிவு இல்லை).

2013 - எம்.எஸ்.டோனி (இங்கிலாந்தை வீழ்த்தி வெற்றி).

2025 - ரோஹித் சர்மா (நியூசிலாந்தை வீழ்த்தி வெற்றி).

## ஆறு ஆண்டுகளுக்குப் பிறகு சம்பியனான சென். தோமஸ்



146ஆவது பெட்ரில் ஒவ் த ப்ளூஸ் போட்டியில் ரோயல் கல்லூரியை 5 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வீழ்த்திய சென். தோமஸ் கல்லூரி 6 ஆண்டுகளுக்குப் பிறகு சாதனை வெற்றியை பதிவு செய்தது. இதற்கு முன், 2018ஆம் ஆண்டு சிதார ஹபுஹின்னா தலைமையில் தோமியர்கள் வெற்றிபெற்றிருந்தனர்.

எஸ்.எஸ்.சி. மைதானத்தில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற போட்டியில் 232 ஓட்டங்கள் முன்னிலை பெற்ற நிலையில், வெறும் 42 ஓவர்களில் அந்த இலக்கை நோக்கி தோமியர்களை சவாலுக்கு அழைத்தது ரோயல். சதேவ் சொய்சா அதிரடியாக 32 பந்துகளில் 52 ஓட்டங்கள் வெற்றிக்கு வித்திட்டார். மூன்றாவது மற்றும் இறுதி நாளுக்குள் போட்டி சமமாக முடியுமென எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், போட்டியின் திருப்புமுனை தோமியர் தரியன் டியாகோவின் அபாரமான ஹாட்ரிக் விக்கெட்டாகும்.

1997க்குப் பிறகு ஹாட்ரிக் அடித்த முதல் தோமியரானார். அவரது 5 விக்கெட்டுகள் (40 ஓட்டங்களுக்கு) தோமியர்களின் வெற்றிக்கான பாதையை துல்லியமாக அமைத்தன என்பது குறிப்பிடத்தக்கது.


# விளையாட்டுத் துளிகள்

★ சம்பியன்ஸ் கிண்ணத்துடன் ரோஹிட் சர்மா ஒருநாள் கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறவுள்ளதாக சமூக வலைத்தளங்களில் கடந்த சில நாட்களாக தகவல்கள் வெளிவந்தவண்ணம் இருந்தன. இந்நிலையில், தான் தற்போது ஒருநாள் போட்டிகளிலிருந்து ஓய்வுபெறப்போவதில்லை என்பதைத் தெளிவுபடுத்த விரும்புவதாகவும் இனிமேல் தனது ஓய்வு குறித்து வதந்திகள் பரப்ப வேண்டாமெனவும் ரோஹிட் தெரிவித்துள்ளார்.



★ அமெரிக்காவின் கலிபோர்னியாவில் நடைபெற்றுவரும் இண்டியன்வெல்ஸ் ஓபன் சர்வதேச டென்னிஸ் தொடரில் ஆடவர் ஒற்றையர் பிரிவில் முன்னணி வீரரான நோவக் ஜோகோவிச் (சேர்பியா) 2ஆவது சுற்று ஆட்டமொன்றில் 85ஆம் நிலை வீரர் போடிக் வான்டே ஜான்ட்ஸ்சுல்ப்விடம் (நெதர்லாந்து) 2-6, 6-3, 1-6 என்ற கணக்கில் அதிர்ச்சி தோல்வி கண்டார்.

★ ஐ.சி.சியின் மார்ச் மாதத்துக்கான சிறந்த வீரர் விருதுக்கான பரிந்துரை பெயர்ப்பட்டியலில் இந்தியாவின் சுப்மன் கில், ஆஸி.யின் ஸ்ரீவ் ஸ்மித் மற்றும் நியூசிலாந்தின் கிளென் பிலிப்ஸ் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். மேலும், சிறந்த வீராங்கனை விருதுக்கான பரிந்துரை பட்டியலில் அலனா கிங் (ஆஸி.), திபாட்சா புத்தவோங் (தாய்லாந்து) மற்றும் அன்னாபெல் சதர்லேண்ட் (ஆஸி.) ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.



★ 2025 ஐ.பி.எல். தொடரிலிருந்து உபாதை காரணமாக விலகிய தென்னாபிரிக்க வேகப்பந்துவீச்சாளர் லிஸாத் வில்லியம்ஸுக்குப் பதிலாக மும்பை இந்தியன்ஸ் அணியில் தென்னாபிரிக்க சகலதுறை வீரரான கார்பின் போஸ்ச் சேர்க்கப்பட்டுள்ளார். 30 வயதாகும் இவர் இதுவரை 86 ரி20 போட்டிகளில் விளையாடி 59 விக்கெட்டுகளைக் கைப்பற்றியுள்ளார்.







Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7